# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 10-02-1995

அன்பளிப்பு 40P


## தமிழரின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே

தமிழ்மக்களின் பிரதான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். பாராளுமன்ற கூட்டத்தொடரைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.அவர்களுக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழீழத் தேசியத் தலைவர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை முதல் தடவையாகச் சந்தித்தார்

**05. 02. 1995** ஞாயிற்றுக்கிழமையன்று யாழ். சென்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்து, சுமார் முப்பது நிமிடங்கள் பேசியுள்ளனர். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதனை எதிர்பார்க்கவில்லை என்றபோதும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது என, கொழும்புச் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்தது, இதுவே முதல் தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கண்காணிப்புக் குழுவினருடன் சென்ற, சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சிறிபீரிசுக்கு தலைவருடனான சந்திப்பிற்கு அனுமதியளிக்கப்படவில்லை. இப்பேச்சுவார்த்தையின் போது தலைவருடன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் உடனிருந்தனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்... )



# சட்டவாக்கமும், நிர்வாக அதிகாரமுமுள்ள சொந்த அரசு

## அனைத்துலகச் செய்தியாளருக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

"நாங்கள் எவ்வகையான சமஸ்டி அமைப்பு பொருந்தும் என்று கூறவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு சட்டவாக்கமும் நிர்வாக அதிகாரமும் உள்ள சொந்த அரசு அவர்களது எல்லைகளுள் அமையவேண்டும். *(The Tamil people should have a form of self government in their own teritory with legislative and executive powers)* என்றே கூறுகிறோம்."

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் வைத்து அனைத்துலக செய்தியாளர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"நாங்கள் சமஸ்டி முறையிலான சுயாட்சியைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என, முதல் தடவையாகத் தெளிவான முறையில் கூறுகின்றோம்."

எனக்கூறிய அன்ரன் பாலசிங்கம், "இப்பொழுதுதான் முதல் தடவையாக கொழும்பின் தலைவர் ஒருவர் எங்களுடன் அக்கறையுள்ள பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளார்" எனவும் விளக்கியுள்ளார்.

இச்செய்தியை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்ட இலண்டன் டெலிகிராப் செய்தித்தாள் செய்தியாளர் பிலிப் சேர்வெல் *(Phillip Sherwell)* 'தமிழ்தேசியம் போன்ற அரசு' *(Quasi state of Tamileelam)* அங்கே செயற்பட்டு வருவதாக எழுதியுள்ளார்.

'த டைம்ஸ்' செய்தியாளர் கிறிஸ்தோப்பர் தோமஸ் யாழ்ப்பாணத்திலிருந்து எழுதிய தனது செய்தியில், பெரும்பாலான தமிழர்கள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திற்கு அங்கீகாரம் கிடைக்குமெனத் திடமாக நம்புவதாகவும் இதனை சிறீலங்கா அரசு முப்பத்தொன்பது பில்லியன் ரூபாக்களை மின்சாரம் இல்லாத, தொலைபேசி வசதி இல்லாத, மிகச்சொற்ப அளவிலான குழாய்நீர் வசதிகளோடு மட்டும் உள்ள இப்பகுதியைப் புனரமைக்க வழங்குவதாக வாக்குறுதி கொடுத்தமை உறுதிப்படுத்துகின்றது. எனக் கருதுவதாகவும் எழுதியுள்ளார்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# தீர்வை முன்வைக்க இயலாது சிறீலங்கா ஜனாதிபதி திணறல்

## இயலாத்தனத்தில் விடுதலைப் புலிகளைச் சாடுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகள், சமஸ்டி முறையிலான சுயாட்சியை ஏற்கத்தயார் எனத் தெளிவுபடுத்தியதையடுத்து சிறீலங்கா ஜனாதிபதி, அமைதிவழித் தீர்வை முன்வைக்கவேண்டிய காலகட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்.

ஆயினும் பௌத்த சிங்கள பேரினவாதத்தினதும் இராணுவவாதிகளினதும் நெருக்குதல்களுக்கு மத்தியில் புதிய தீர்வை வெளிக்கொணர முடியாமல் திணறும் ஜனாதிபதி அனைத்துலகக் கவனத்தைத் திசைதிருப்பும் வகையில்,

"ஒவ்வொரு சுற்றுப்பேச்சுக்களின் போதும் பூநகரி முகாமை அகற்றவேண்டும் என்பது போன்ற எதாவது கோரிக்கையைச் சேர்த்து வருகின்றனர்; இதை அவர்கள் தொடக்கத்தில் கேட்கவில்லை. முன்நிபந்தனைகள் எதுவுமின்றி பேசத்தயார் எனக்கூறிய விடுதலைப் புலிகள் புதிதாக முன்நிபந்தனைகளை விதித்து வருகின்றனர். என 'லூமொன்' என்ற பிரான்சிய செய்தித்தாளிற்கு அளித்த செவ்வியில் கூறியுள்ளார். ."எந்தப் பாதையைத் திறப்பதென்பது எமது உரிமை; எம்து மண்ணில் ஆக்கிரமித்துள்ள பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட்டால் அது நம்பிக்கையை வலுப்படுத்தும்" என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில், கூட்டமொன்றில் தெரிவித்த கருத்தை விசுவருவப்படுத்தியே சந்திரிகா தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் 'த சண்டே டைம்ஸ்' செய்தியாளர்களான அந்தனி டேவிட்டும், எம். இஸ்மித்தும் இந்தக் கோரிக்கை உத்தியோகபூர்வமாக

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# சிறீலங்கா இராணுவவாதிகள் மோதல் நிலையை தூண்டுகிறார்கள்

## ஜெரி டி சில்வாவின் பி.பி.சி செவ்விக்கு கடும் எதிர்ப்பு

சிறீலங்காவின் இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, பாப்பரசர் விஜயம் செய்த அன்று பி. பி. சிக்கு அளித்த செவ்வியில் இராணுவத் தீர்வு சாத்தியப்படாது எனக் கூறியமை சிங்கள பௌத்த பேரினவாதிகளிடையிலும் இராணுவவாதிகளிடையிலும் பலத்த எதிர்ப்பினைத் தோற்றுவித்துள்ளது. ஒரு நாட்டின்இராணுவத் தளபதி அரசியல் தீர்வுக்குச் சாதகமாகக் கருத்துத் தெரிவிப்பதற்கு அவருக்கு உரிமையில்லை என்ற கருத்துப்பட 'த டைம்ஸ்' செய்தித்தாள் ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. ஜெரி டி சில்வா கிறிஸ்தவராக இருப்பதே, பௌத்த மனோபாவம் குன்றிக் காணப்படக் காரணமாக உள்ளது எனக்கூறி, அவரை அகற்றுவதற்கான முயற்சிகளில் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் ஈடுபட்டுவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே மோதல் நிலையை உருவாக்கக்கூடிய வகையில், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்புக்கு 'இராணுவக் குறிப்புக்கள்' அனுப்பப்பட்டுவருவதாகக் கொழும்புச் செய்தித்தாள்கள் கூறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் மக்கள், கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பெருமளவில் ஈடுபடுவதை, விடுதலைப் புலிகள் பொருட்சேகரிப்பில் ஈடுபடுவதாகச் செய்திகளை அனுப்புவதாகவும், ஆட்களைத் திரட்டுவதாகவும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களில் நடமாடுவதை, விடுதலைப் புலிகள் ஊடுருவ முற்படுகிறார்கள் எனத் திரிபுபடுத்திவரும் இராணுவவாதிகள் கையாளும் வார்த்தைப் பிரயோகங்கள் இரத்தத் துடிப்பைத் தூண்டக்கூடியனவாக உள்ளன.

362 விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை அமைப்பதற்காகப் பயணம் செய்வதைப் பார்த்தும், தாம் பேசாமல் இருக்கவேண்டிய நிலையில் இருந்ததாக

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# அந்தப் பிரதேசம் அவர்களின் கட்டுப்பாட்டில்

## நாம் முதலில் அவர்களுடன்தான் பேச வேண்டும் - சிறீலங்கா ஜனாதிபதி

"அந்தப் பிரதேசம் அவர்களின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது; எம்மால் அங்கு ஒன்றும் செய்யமுடியாது. நாம் முதலில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்."

இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா , 'இந்து' ஆங்கிலச் செய்தித்தாளுக்கு அளித்த செவ்வியில், "நீங்கள் வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாணத்துக்கு என அளிக்க முன்வந்துள்ள 39 கோடி ரூபாவையும் யாரிடம் கையளிப்பீர்கள்" எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் கூறினார். இதன் மூலம் தமிழீழ அரசுநோக்கிய அரசின் இறைமையை சிறீலங்கா ஜனாதிபதி தெளிவாக்கியுள்ளார். இச்செவ்வியின்போது, சமாதானத்திற்கான குரல் தெளிவாகவும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

## யாழ். மருத்துவபீடத்திற்கு அரசு மருந்துப் பொருள்கள் வழங்க பின்னடிப்பு

போதியளவு மருந்துப் பொருட்களை யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கு கொண்டுவருவதற்கு அனுமதி வழங்க, சிறீலங்கா அரசு பின்னடிக்கின்றது. இதனால் யாழ். பல்கலைக்கழகத்தில் மருந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என, பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்கு தேவையான மருந்துப்பொருட்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இம்மருந்துப் பொருட்களை போதியளவு எடுத்துவருவதற்கு சிறீலங்கா அரசின் பாதுகாப்புத் தலைமை அலுவலக அதிகாரிகளிடம் அனுமதி பெறப்படவேண்டும்.

இவற்றிற்கு அனுமதி வழங்கும் விடயத்தில், இந்த அதிகாரிகள் தொடர்ந்து பின்னடிப்புச் செய்துவருகின்றனர். இதனால் பல்கலைக்கழகத்தில் மருந்துப் பொருட்களிற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ■

## இறந்தவர் குடும்பத்திற்கு 70 ஆயிரம் வாங்க உத்தரவு

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது தொல்புரம் மத்தி முட்டடியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் மினிபஸ் விபத்து ஒன்றில் சிக்கி மரணமானார். இவரின் குடும்பத்தாருக்கு எழுபது ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். கிளாலி சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ் ஒன்று கடந்த ஆண்டு மாசிமாத முற்பகுதியில் நாவற்குழிப் பகுதியில் விறகுக் கட்டுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மேற்குறித்த காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஆசைப்பிள்ளை நடராசா (வயது 47) என்பவருடன் மோதியதால் பரிதாபகரமான முறையில் பலியானார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி காவல்துறையினர் மினிபஸ் சாரதியை தமிழீழ மாவட்ட நீதிமன்றின் நீதியாளர் முன்னிலையில் ஆஜர் செய்ததையடுத்து நீதிமன்றில் நடைபெற்ற விசாரணையின் போது மினிபஸ் சாரதி குற்றவாளியாக காணப்பட்டு இறந்தவரின் குடும்பத்திற்கு இழப்பீடாக எழுபது ஆயிரம் ரூபா செலுத்துமாறு மன்று தீர்ப்பளித்துள்ளதாக இறந்த நபரின் குடும்பத்தினர் எமது செய்தியாளருக்கு தெரிவித்தனர். ■

## வவுனியா தமிழீழ நீதிமன்று அண்மையில் திறந்துவைப்பு

வவுனியா மாவட்டத்திற்கான தமிழீழ நீதிமன்றம் அண்மையில் கனகராயன்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் -தமிழீழ காவற்றுறை துணைப் பொறுப்பாளர் திரு. ரமேஸ் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். நீதிமன்றப் பெயர்ப் பலகையை வன்னி மாவட்டத் தளபதி திரு. தூட்டி திரைநீக்கம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து, மங்கள விளக்கை கிளிநொச்சி கோட்டப் பொறுப்பாளர் திரு. இலக்கியனும் வன்னிப்பகுதி செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி யூடியும் ஏற்றிவைத்தனர். நீதிமன்றக் கட்டடத்தை தமிழீழ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் திறந்துவைத்தார். நிகழ்வின் சிறப்புரைகளை நீதிநிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா, தமிழீழ அரசியற்றுறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆகியோர் வழங்கினர்.

நீதிமன்றத்தின் முதல வழக்காக சமூகச் சீர்கேடு தொடர்பான விசாரணை ஒன்று, நீதிபதி தெ. மயூரன் அவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது. ■

## தமிழர் நிலங்களில் சிங்களவர் திருமலையில் அத்துமீறி குடியேற்றம்

திருகோணமலையில் தமிழர்கள் குடிபெயர்ந்துள்ள இடங்களில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியமர்த்தப்பட்டு வருவதாக பி. பி. சி தெரிவித்தது.

அது மேலும், தெரிவிக்கையில்: மடத்தடி, பிள்ளையார் கோவிலடி, உப்புவெளி பகுதிகளில் தமிழர்கள் முன்பிருந்த இடங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் தமது சொந்த இடங்களில் குடியேறாது தடுக்கப்பட்டு வருகிறார்கள்.

கந்தளாய் அஞ்சல் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். தங்களது உறவினர்களின் மரண சான்றிதழைப் பெறக்கூட சிறீலங்கா பொலிசாரின் நடவடிக்கையால் முடியாதுள்ளது.

இதனால் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வு மேலோங்கி வருவதாகவும், இவ்வாறான இனவாத நடவடிக்கைகள் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் எனவும் பி. பி. சி தெரிவித்துள்ளது. ■

## பூநகரி இராணுவ முகாம் எப்போதும் ஆபத்தான நிலையிலேயே உள்ளது

### சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெரி.டி.சில்வா

"பூநகரியைவிட ஆனையிறவுப் பாதையைத் திறப்பதே படையினருக்கு பாதுகாப்பானதாகலாம்; பூநகரிப் பாதையை பொதுமக்களின் போக்குவரத்திற்குத் திறந்துவிடுவது என்பது பூநகரி இராணுவ முகாமின் மீதான அச்சுறுத்தலை அதிகரிக்கச் செய்யக்கூடியது ஆகும்" - இவ்வாறு சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா சனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

'சண்டே டைம்ஸ்' செய்தித்தாளில் அதன் இராணுவ ஆய்வாளர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில்:

"விடுதலைப் புலிகள் ஆழம் குறைந்த நீரேரிப் பகுதியூடாக பூநகரி முகாமையடையலாம். முகாம் தாக்கப்பட்டால், மேலதிக படைகளை இராணுவம் பூநகரிக்கு அனுப்புவது கடினம். புலிகள் யாழ். கடனீரேரியை தம் கட்டுப்பாட்டினுள் வைத்துள்ளனர். இது ஆனையிறவிலிருந்து கிடைக்கக்கூடிய உதவியைத் தடுத்துவிடும். அத்துடன் கடற்படைப் படகுகள் மூலம் மேலதிக படைகளைக் கொண்டுவருவது என்பதும் சாத்தியமில்லை. ஏனெனில் திருமலையில் இருந்து கனரக கடற்படைக் கப்பல்கள் பூநகரியை வந்தடைய பல மணிநேரம் பிடிக்கும். இலகுரக விரைவு தாக்குதல் படகுகள் மூலமே இந்நடவடிக்கையில் கடற்படை ஈடுபடமுடியும். எனினும் கடந்த ஆண்டு இத்தகைய படகுகள் சிறப்பான பணியை அங்கு மேற்கொள்ள முடியாமல் போனது.

ஆகாயமார்க்கமான தரையிறக்கமும் நடைமுறைச் சாத்தியமற்றது. விடுதலைப் புலிகளின் கடும் இயந்திரத் துப்பாக்கிச் சூடுகளின் மத்தியில் பெறுமதி மிக்க உலங்குவானூர்திகளைப் பயன்படுத்த விமானப்படை விரும்பாது.

இதனடிப்படையில், பூநகரி இராணுவ முகாம் படையினரின் நோக்கில் எந்தநேரமும் ஆபத்தான நிலையிலேயே உள்ளது.

ஆனால் ஆனையிறவு இராணுவ முகாம், இப்பகுதியில் ஆபத்தற்ற நிலையிலேயே உள்ளதெனலாம்.

அங்கு இப்போது 5000 படைகள் நிலைகொண்டுள்ளனர். 25 சதுரமைல் பரப்பிற்கு கனரக பீரங்கிகளும், போர்த் தாங்கிகளும் பரவலாக நிறுத்தப்பட்டுள்ளன. புல்டோசர்கள் மூலம் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்கள் உண்டு. வெற்றிலைக்கேணியூடாக விநியோகமும் இம்முகாமிற்கு உண்டு.

இந்நிலையில் ஆனையிறவு முகாமினூடாக பொதுமக்கள் போக்குவரத்து தொடங்கப்பட்டால், படையினர் மக்களை சோதனையிடுவது சுலபமாக இருக்கும்; படையினருக்குப் பாதுகாப்பானதாக இருக்கும். ஆனால், இதற்கு விடுதலைப் புலிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்" என, 'சண்டே ரைம்ஸ்' செய்தித்தாளின் இராணுவ ஆய்வாளர் மேலும் தெரிவித்துள்ளார். ■

## யாழ். மருத்துவமனை எதிர்நோக்கும் பாரிய மின்சார நெருக்கடி

யாழ். மருத்துவமனை மீண்டும் பாரிய மின்சார நெருக்கடியை எதிர்நோக்கிவருவதாக யாழ். போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பழுதடைந்துள்ள நிலையிலுள்ள நான்கு மின்பிறப்பாக்கிகளைத் திருத்த நடவடிக்கை எடுப்பதன் மூலமே மின் விநியோகத்தைச் சீர்செய்ய முடியும் என அவ்வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பல மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்து இருப்பதாகவும் தற்போது இயங்கும் 200 கே. வி. மின்பிறப்பாக்கியும் பழுதடையும் நிலையில் இருப்பதாகவும் இதனால் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ■

### மருத்துவமனைக்கு தேவை 85 கே.வி மின்பிறப்பாக்கி

மேலதிகமாக ஆகக் குறைந்தது 85 கே. வி. உடைய மின்பிறப்பாக்கி கிடைக்கப்பெற்றால் மட்டுமே யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது ஏற்பட்டுள்ளதைப் போன்ற மின்சாரப் பிரச்சினையைத் தவிர்த்துக்கொள்ளலாம் என, யாழ். போதனா மருத்துவமனையின் நிர்வாக அதிகாரி ஒருவர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் கொழும்புக்குச் செல்ல இருப்பதாகவும், இவர் இதன்போது பாரிய மின்பிறப்பாக்கி ஒன்றை பெற்றுக்கொள்வதில் தீவிரகவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெதரிவித்த அந்நிர்வாக அதிகாரி இதன்மூலம் ஓரளவு பிரச்சினையைத் தீர்க்க முடியும் என நம்பிக்கை தெரிவித்தார். ■

## வடபகுதிக்கு வெளியே செல்வோர் மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்க

மோட்டார் ஊர்தி உரிமையாளர் ஒருவர், குடும்பத்தினருடன் தற்காலிகமாக வடபகுதிக்கு வெளியே செல்லும்போது, தமது ஊர்தியைப் பாதுகாக்கும் நோக்குடன் இன்னொரு நபரிடம் கொடுத்துவிட்டுச் சென்றால், குறிப்பிட்ட நபருக்கு தனது ஊர்தியைக் கொடுத்துள்ளதாக மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவுசெய்து, அதற்குரிய பற்றுச்சீட்டை ஊர்தி வைத்திருக்கும் நபரிடம் கொடுத்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட ஊர்தி உரிமையாளர் வடபகுதிக்குள் வராவிடின், பாதுகாப்பதற்கென வைத்திருப்பவர், அவ்வூர்தியை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். நிரந்தரமாகக் குடும்பத்தினருடன் வடபகுதிக்கு வெளியே செல்லும் ஊர்தி உரிமையாளர்கள் தமது ஊர்திகளை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச்செயலகத்தில் ஒப்படைத்துச்செல்ல வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடைமுறைக்கமைய வடபகுதிக்கு வெளியே குடும்பமாகச் செல்வோரின் ஊர்திகள் மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகத்தில் பதிவுசெய்யப்படாமலோ அல்லது ஒப்படைக்கப்படாமலோ இருக்கும்பட்சத்தில், அவ்வூர்திகள் வைத்திருப்போர் மீது தமிழீழக் காவல் துறையினரும், மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் சம்பந்தப்பட்ட ஊர்திகளும் கையகப்படுத்தப்படும் என்பதையும் பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர். ■

## இலண்டனில் கேணல்.கிட்டு.......

இது அமைந்தது. முதலில் தனது கணவனைக் கொன்ற கொலைகாரனைக் கொன்று பழிதுடைத்துக் கொண்ட ஒரு தாய், தனது இரு கைகளும், இரு கால்களும் கட்டப்பட்ட நிலையில் பாதாளக் கிடங்கில் விடப்பட்டிருப்பதாயும், அருகே அவளது குழந்தை ஒன்று தவழ்ந்த நிலையில் இருப்பதாயும் உருவகப்படுத்தி ஓவியர் கிட்டண்ணாவினால் வரையப்பட்ட ஓவியம், அரங்கின் பின்னணியில் அகன்ற திரையில் காட்டப்பட்டது. திரை மறைய அந்த ஓவியத்திற்கு உயிர் கொடுக்கும் வகையில் திருமதி பத்மினி குணசீலனின் மாணவிகள் இருவர் தாயாகவும், குழந்தையாகவும் வந்து அபிநய நடனம் மூலம் ஓவியத்தின் கருப்பொருளை தெட்டத்தெளிவாகப் புலப்படுத்தி நின்று, இறுதியில் அந்த ஓவியமாகவே காட்சி தந்தனர். இறுதியாக தமிழீழத் தேசியக் கொடி இறக்கப்பட்டதுடன் விழா நிறைவடைந்தது. ■

## மரக்கறி ஏற்றிவந்த லொறி சீருடையினரால் கொள்ளை

மட்டக்களப்பிற்கு மரக்கறி ஏற்றி வந்த இரு லொறிகள் அண்மையில் மன்னம்பிட்டி அருகே வைத்து சீருடை போன்ற உடையணிந்த ஆயுதக் கோஸ்டியினால் கொள்ளையிடப்பட்டது.

அதிகாலை 4 மணியளவில் காட்டுப் பகுதியில் இந்த லொறிகள் மறிக்கப்பட்டு பணம் அபகரிக்கப்பட்டது. சில தனியார் பஸ்களையும் இக்கோஸ்டியினர் வழிமறித்து பயணிகளிடம் நகை, பணம் என்பவற்றை அபகரித்தனர். பைகள் சோதனையிடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன. ■



# மயக்கமா? தயக்கமா?

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகள் முதலில் முன்நிபந்தனைகள் எதையும் விதிக்காது பேசத்தயார் எனக்கூறிவிட்டு, இப்பொழுது முன்நிபந்தனைகளை முன்வைக்கிறார்கள் என்ற கருத்துப்பட பிரான்சிய செய்தித்தாளுக்கு செவ்வியளித்துள்ளார். இது சிறீலங்கா சனாதிபதியின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத மயக்கநிலையைக் குறிக்கிறதா அல்லது பௌத்த சிங்களப் பேரினவாதிகள் "இது சிங்கள பௌத்த நாடு; இங்கு தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகள் என்ற முறையிலேயே தீர்வுகள் அணுகப்படல்வேண்டும்" என எழுப்பும் தமிழின ஒடுக்கல் முயற்சிகளுக்கு ஈடுகொடுக்க முடியாத, அவரின் தயக்கத்தைக்காட்டுகிறதா? எனப் புரியவில்லை!

ஒரு மனிதன் தன் முழு ஆளுமையையும் வெளிப்படுத்தும் நிலைதான் சுதந்திரம் எனப்படுகின்றது. ஒரு மனிதனால் தன் முழு ஆளுமையையும் வெளிப்படுத்த முடியாத அவலநிலை காணப்படுமாயின், அங்கு ஒடுக்குமுறை தொடக்கமாகிவிட்டதெனப் பொருள் கொள்ளப்படும். இவ்வொடுக்குமுறை நாட்டினங்களை நசுக்கும்போது, அது தேசிய ஒடுக்கு முறையாகமாறி, தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு வித்திடுகின்றது. குடியேற்றவாத ஆட்சிக்குள் அகப்பட்ட மக்கள் குடியேற்றவாத ஆட்சியின் பின்னர், தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் தமது இழந்த உரிமைகளை மீட்டெடுக்க முயல்வதை அனைத்துலகச் சட்டங்களுக்கு ஏற்புடைய செயலாக 'மனிதன்' பற்றிய ஐ. நாவின் ஆபிரிக்க அனைத்துலகச் சாசனம் அங்கீகரிக்கின்றது. இதன் அடிப்படையிலேயே முரண்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களை பங்காளர்களாகக் *(Parties of the Conflict)* கருதி, அப்பங்காளர்கள் பேசுவதன் மூலம் *(Negotiations)* அம்முரண்பாட்டை விடுவிப்பதற்கான *(Conflict Resolution)* செயல்முறைகளை அனைத்துலகச் சமூகம் ஊக்கப்படுத்துகின்றது. இதுவே அனைத்துலக நாடுகளின் நடுவர்கள், மேற்பார்வையாளராக முரண்பாடுகளில் பங்கேற்க வருவதன் நியாயப்பாடாகும். அதனால்தான் 1948 இல் பாலத்தீனியர்களுக்கும் இசுரேலியர்களுக்கும் மோதல் தவிர்ப்பு *(Truce)* முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட பொழுது, அதனை மேற்பார்வையிடவென நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மோதல் தவிர்ப்புக் கண்காணிப்பு ஆணைக்குழுவின் தலைவர் டேவிட் செயிட், "இருநாட்டினங்களை -இசுரேல், பாலத்தீனியர் எனும் நாட்டினங்களைக் காண்கின்றோம்" எனக் கூறினார். ஆகவே மோதல் தவிர்ப்பு என்பதை மேற்பார்வை செய்யும் பணியில் அனைத்துலக சமூகம் இறங்கும்பொழுது, அங்கே இருநாட்டினங்கள் உள்ளன என்பது தெளிவுபடுத்தப்பட்டுவருகின்றது. ஆயினும் 1948 இல் பாலத்தீனிய -இசுரேலிய மோதல் தவிர்ப்பு அமுலாகியபோதிலும் 1994 வரை பேச்சுவார்த்தை மூலமான சமாதான ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்பதும் அதன் பின்னரும்கூட பாலத்தீனியரின் வாழ்வு பாலத்தீனியரின் கையில்தான் தங்கியுள்ளது எனும் கருத்தே பாலத்தீனியர்களுக்கிடையே நிலவுகின்றது என்பதும் வரலாறு.

சிறீலங்கா எமது தமிழீழ மக்களுக்கு எத்தகைய காரணிகளால் சுதந்திரத்தை மறுத்ததோ, எத்தகைய காரணிகள் போராட்டத்தைத் தொடங்க வைத்ததோ, அத்தகைய காரணிகளை நீக்கக்கூடிய மாற்றுத்திட்டமொன்றை சிறீலங்கா முன்வைத்தால், அதனைப் பரிசீலிக்கத் தயார் என்பதே விடுதலைப் புலிகளின் அன்றைய -இன்றைய -என்றைய நிலைப்பாடாகும். இதனையே "எமது தாயகக் கோட்பாடு ஏற்கப்பட்ட தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை நிறுவப்பட்ட சமஸ்டிமுறைத் தீர்வை சிறீலங்கா கொண்டுவர விரும்பினால், நாம் பரிசீலிக்கத் தயார்" எனும், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கருத்தும் தெளிவாக்கின்றது.

அமைதியை நேசிக்கும் நெஞ்சினரான தமிழீழ மக்களும் விடுதலைப் புலிகளும் இவ்வளவு தூரத்துக்கு தமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கியதும், சிறீலங்கா சனாதிபதி தீர்வு ஒன்றை முன்வைக்கவேண்டிய காலகட்டாயத்திற்கு ஆளாகிறார். இதனை நிறைவேற்ற முடியாத கையாலாகாத்தனமே அவரின் திசைதிருப்பல் கதைகளின் தொடக்கமாகவுள்ளது. பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதற்கு, சிறீலங்காவால் தமிழீழ மக்களின் நாளாந்த வாழ்விற்கு ஏற்படுத்தப்பட்டுவரும் கஸ்டங்கள், நெருக்குதல்களை நீக்குங்கள் என்பதே விடுதலைப் புலிகளின் ஆணித்தரமான கருத்து. இது திம்புப் பேச்சுவார்த்தை முதல் இன்றுவரை மாறாத நிலைப்பாடு. மக்கள் குடியிருப்புக்களில் இராணுவம் -மக்களோ அகதிக் கொட்டில்களில். மக்களின் நடமாட்டப் பாதைகள் -இராணுவத்தினரின் துப்பாக்கிக் குறிப்பிரதேசங்கள். பகலில் மீன் படாது என்று தெரிந்தும் இரவில் மீன்பிடிக்க அனுமதி மறுப்பதினால், மீனவர்களுக்குத் தொழிலின்மை. இப்படி எத்தனையோ அவலங்களில் மக்கள் தவிக்க, அவர்களது வாழ்வின் புனர்வாழ்வு பற்றியும் அவர்கள் சந்தித்துள்ள அழிவுகளின் புனரமைப்புப் பற்றியும் அக்கறையற்றவர்களாய் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது என்பது கேலிக்கூத்தாகிவிடும். அத்துடன் இத்தகைய சூழ்நிலைகள் மோதல் தவிர்ப்பு நிரந்தர போர் நிறுத்தமாக மாறுவதற்கு பெரும் தடைகளை ஏற்படுத்தவல்லன. எனவே மோதல் தவிர்ப்பினை நிரந்தரப் போர் நிறுத்தமாக மாற்றி, பேச்சுவார்த்தைக்கு இட்டுச்செல்வதற்கான சூழ்நிலைகள் தேவையெனக் கேட்பது முன்நிபந்தனைகள் அல்ல.

இதனைப் புரிந்துகொள்ளாத சந்திரிகா பேச, அவரின் தாயாரான சிறீலங்காப் பிரதமர் சிறீமாவோ அம்மையார் "இது பௌத்த சிங்கள நாடு; பௌத்த சிங்களவர் அல்லாதவர்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க சனாதிபதி முயற்சித்து வருகின்றார்" எனக்கூறி சிறீலங்காவில் பௌத்த சிங்களப் பேரினவாதம் என்றும்போலவே முனைப்புற்று நிற்கின்றது என்பதையும் அதன் அடிப்படையில் இரண்டாந்தரப் பிரசைகளுக்கான பிரச்சினை என்ற ரீதியிலேயே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வின் அணுகுமுறைகள் அமையவேண்டும் என, சிங்கள பௌத்த பேரினவாதிகள் சந்திரிகா அரசை உள்நெருக்குதல் செய்வதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இவர்களை வெல்லமுடியாத சந்திரிகா தனது கையாலாகத்தனத்தை, "தேவையேற்படின் இராணுவத் தீர்வுக்கும் செல்வேன்" எனக்கூறி, இராணுவவாதிகளிடம் சரணடைகிறார்.

மோதல் தவிர்ப்பில் இராணுவ ஏற்பாடுகள் பற்றி எதுவும் பேசப்படாததினால், அமைதிப்போர்வையில் இராணுவ ஏற்பாடுகளை சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் செய்து, பின்னர் பலத்த தாக்குதலுக்கு ஏற்பாடாகக்கூடிய சாத்தியக்கூறு தொடர்கின்றது என்பதினால், தமிழர் விழிப்பாக இருக்கவேண்டிய காலம் இது. ■

# பாராட்டிற்குரியவர்கள்

எத்தனையோ சிரமங்கள், ஏமாற்றங்கள் என்பனவற்றின்பின் யாழ். மாவட்ட கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரத் தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. வெளிவந்த தேர்வு முடிவுகள் ஒட்டுமொத்தமாகக் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமானதாக இருப்பினும், அதில் சில குறைபாடுகளும், இறக்கங்களும் இல்லாமல் இல்லை

தேர்வு முடிவுகளைப் பொறுத்து, அனைத்துத் துறையிலும் கணிசமான உயர்ச்சி காணப்படினும் வணிகத்துறையில் வளர்ச்சி விழுக்காடு குறிப்பிடும்படியான உயர்ந்த அளவில் உள்ளது. அதேசமயம் உயிரியல் துறை வளர்ச்சி விழுக்காடு குறைந்தளவில் உள்ளது என்றே பொதுவாக அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இருப்பினும் இவ்வாறான ஓரளவேனும் திருப்தியளிக்கக்கூடிய பெறுபேறுகளை ஈட்டிக்கொடுத்த மாணவர்கள் உண்மையில் பாராட்டப்படவேண்டியவர்கள். ஏனெனில் இவர்கள் அனைவரும் அநேகமாக இரண்டாம்கட்ட ஈழப்போரின்போதே தமது இரண்டு முதன்மையான தேர்வுகளையும் -க. பொ. த. சா. தேர்வையும் -க. பொ. த. உ. தேர்வையும் -எதிர்கொண்டு வெற்றி பெற்றவர்கள் ஆகும்.

இக்காலகட்டமானது கல்விக்குரிய அனைத்து வாய்ப்புக்களையும் சிறீலங்கா அரசு பாழடித்த காலமாகும். ஒருபுறம் பொருண்மியத்தடை, எரிபொருள்தடை என்பனவும், மறுபுறம் விமானக்குண்டு வீச்சுக்கள், எறிகணைவீச்சுக்கள், இராணுவ நடவடிக்கை போன்றவற்றினாலும் கல்வி முற்றாகவே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தது. இந்த நிலையில் கல்வி கற்றுத் தேர்வை எதிர்கொண்டு வெற்றி பெறுவதென்பது இலகுவான காரியமில்லைத்தான். இந்தவகையில் அதாவது இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில், ஆசிரியர்கள் ஆற்றியுள்ள அர்ப்பணிப்புள்ள சேவையே இப்பெறுபேறுகளின் உயர்விற்குக் காரணமாகும்.

அதிலும் குறிப்பாக இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் வசாவிளான் மகாவித்தியாலயம், யூனியன் கல்லூரி போன்றவை குறிப்பிடத்தக்க சில பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டமை ஒரு சாதனை என்ற ரீதியிலேயே நோக்கவேண்டும். முற்றுமுழுதாக தமது வசதிகளை இழந்த நிலையில் இவர்கள் பெற்ற பெறுபேறுகள் முதன்மை பெறுகின்றன.

அடுத்ததாகக் கடந்த காலத்தைப்போன்று யாழ். மாவட்டத்தில் உள்ள முதன்மையான பாடசாலைகளும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. இதில் காட்லிக் கல்லூரியின் பெறுபேறு ஏனைய பிரபல பாடசாலைகளின் பெறுபேறுகளைவிட முன்னணியில் உள்ளது என்றே கொள்ளவேண்டும். பிரபல பாடசாலையாக இருப்பினும் போரினால் பெரும் பாதிப்பிற்குள்ளான காட்லிக் கல்லூரி தனது தனித்துவத்தை இந்த நெருக்கடியின் மத்தியில் நிறைவு செய்திருப்பது ஒருவகையில் அதன் சாதனை என்றே கூறவேண்டும்.

இதேசமயம், இத்தேர்வு முடிவுகளில் முதன்மையாகக் குறிப்பிடக்கூடியதொரு அம்சமாக இருப்பது, பரந்த அளவில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றமையாகும். இந்தவிடயத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா, வசாவிளான் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகள் தேர்வுப் பெறுபேறுகளில் குறிப்பிடும்படியான சாதனைகளைப் புரிந்துள்ளன என்றே கூறலாம்.

இந்தவகையில் கல்வியில் ஆரோக்கியமான வளர்ச்சியும், பரம்பலும் ஏற்பட்டுவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இது தனியாக க. பொ. உயர்தரத் தேர்வில் மட்டும் தென்படவில்லை. கடந்த புலமைப்பரிசுத் தேர்வு முடிவிலும் இதனை அவதானிக்கக் கூடியதாகவே உள்ளது. இந்நிலையில் இப்பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறாகக் கடந்த ஆண்டைவிட பல பாடசாலைகள் முன்னேற்றகரமான முடிவுகளைப் பெற்றுக்கொண்டபோதும், சில பிரபல பாடசாலைகளின் முடிவுகள் சற்று வீழ்ச்சி கண்டுள்ளமையும் குறிப்பிடப்படவேண்டியவையாகவே உள்ளது. இந்நிலைமையானது பொதுவாகவே வருத்தமளிக்கும் விடயமாகும்.

இந்நிலையில் தேர்வுப் பெறுபேறுகள் மகிழ்ச்சியும் வேதனைகளும் நிறைந்ததாக இருப்பினும் நம்பிக்கையை அளிப்பவையாகவும் உள்ளன. இதில் வசதி வாய்ப்புக்கள் மறுக்கப்படினும், முயற்சியானது உயர்நிலைக்குக் கொண்டுவந்து சேர்க்கும் என்பது தெளிவாகவே உணர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் காலத்திலும் கல்விப் பெறுபேறுகளில் வளர்ந்துவரும் பாடசாலைகள் சாதனைகளை நிலைநாட்டவும், பிரபல பாடசாலைகள் தமது நிலையைத் தக்கவைக்கவும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ■

(நன்றி: ஈழநாதம்)

# சிறப்புப் பெறுபேறுகள் பெற்ற 10 பேருக்கு தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசு

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தேசிய, மற்றும் கோட்ட மட்டங்களில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட மேற்படி தேர்வில் தோற்றி, தேசியமட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கல்விக்கோட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கே தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினது பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்று தமிழீழத் தேசியத் தலைவரினதும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினதும் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெறுபவர்கள்:-

| மாணவர் பெயர் | பாடசாலை | புள்ளிகள் | பெறுபேறு |
|---|---|---|---|
| சுதர்சனா மகேந்திரன் | யாழ்ப்பாணக் கல்லூரி | 710 | 8 டி |
| நவரத்தினம் இரமணன் | யாழ். இந்துக் கல்லூரி | 698 | 8 டி |
| யோகநாதன் சிவராம் | யூனியன் கல்லூரி | 697 | 8 டி |
| சுகிர்தா நவரட்ணசிங்கம் | வேம்படி மகளிர் கல்லூரி | 686 | 8 டி |
| கணேசநாதன் சிறீவிசாகன் | புனித கென்றியரசர் கல்லூரி | 680 | 8 டி |
| சிவசோதி செந்தூரன் | யாழ். இந்துக் கல்லூரி | 679 | 7 டி, 1 சி |
| இராஜேந்திரன் திலீபன் | பரி. யோவான் கல்லூரி | 677 | 7 டி, 1 சி |
| புலேந்திரராசா திலீப்காந்த் | பரி. யோவான் கல்லூரி | 675 | 8 டி |
| இராஜகுமாரசாமி நிசாந்தன் | சம்பத்தரிசியார் கல்லூரி | 673 | 7 டி, 1 சி |
| சங்கீதா பாலசுப்பிரமணியம் | சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 666 | 6 டி, 2 சி |

# உயிரனைய மொழிவாழ உயிர்கொடுத்தோர் நினைவுநாள்...

**அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது மகாநாடு யாழ்ப்பாணத்தில் 1974 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் இடம் பெற்றது. இறுதிநாள் அரசாங்க படையினரால் குழப்பி அடிக்கப்பட்டது. ஜனவரி 10 ஆம் நாள் தமிழாராய்ச்சி மகாநாட்டுப் படுகொலைகளின் நினைவு நாளாக நாட்காட்டிகள் குறித்துக்கொண்டன.**

வாசல்கள் தோறும் பூரணகும்பங்கள். வீதிகள் எங்கும் மகர தோரணங்கள். பச்சை வாழையும், கமுகும், தென்னையும் நகரை அலங்கரிக்க அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று இருபத்தொரு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், என்பன ஒரு புறமும் கருத்தரங்குகளும் மொழி ஆராய்ச்சியும், ஆய்வுகளும் மறுபுறமுமாக 1974 ஆம் ஆண்டின் சனவரி முதலாம் நாளில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த மாநாடு ஒன்பது தினங்களும் கோலாகலமாகவும், குதூகலமாகவும் இடம் பெற்றிருந்தது. ஒன்பது நாட்கள் நடைபெறுவதாக திட்டமிட்ட மாநாடு தமிழர்களினதும், தமிழியல் ஆர்வலர்களினதும் உற்சாகம் காரணமாக பத்தாம் நாளிலும் தொடர்ந்தது. பகல் பொழுதின் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்று மாலை நிகழ்ச்சிகள் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பித்தன.

மண்டபம் கொள்ளாதளவுக்கு அலைகடலென மக்கள் கூட்டம் திரண்டமையால் கூட்டத்தின் மேடை மண்டபத்தைவிட்டு நகர்ந்தது. முற்றவெளி சனக்கூட்டத்தால் நிறைந்திருக்க வீதிக்கு அருகாமையில் திடீரென அமைக்கப்பட்ட மேடையில் இருந்து தமிழறிஞர்கள் சொல்மாரி

**தமிழீழத்திலிருந்து இளையவன்**

பொழிந்து கொண்டிருந்தனர். தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் நயினா முகம்மதுவின் தமிழின் சுவையில் மெய்மறந்து செவிமடுத்திருந்த கூட்டத்தின் மீது, பொலிசாரின் கண்ணீர்ப் புகைக் குண்டுகளும், குண்டாந்தடிப் பிரயோகமும் இடம்பெற்றன. ஒன்பது தமிழர்கள் துடிதுடிக்க உயிரிழந்தனர். சனவரி பத்தாம் நாளை தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் நினைவு நாளாக நாட்காட்டிகள் குறித்துக்கொண்டன.

## அரசுக்கு சவாலாக

தமிழாராய்ச்சி மாநாடு, தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கவும், வளர்ந்து வரும் அறிவியல் துறைகளை உள்வாங்கிச் செழுமைப்படுத்தவும், தமிழறிஞர்களால் சருவதேச ரீதியில் நிகழ்த்தப்படும் ஆய்வு மாநாடு ஆகும். முதலாவது மாநாடு கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாடு சென்னையிலும், மூன்றாவது மாநாடு பாரிசிலும் இடம் பெற்றபோது, அவை சருவதேச ரீதியில் மொழி ஆய்வாளர்களிடையேயான கருத்துப் பரிமாறல்களுக்கும், உலக ரீதியில் தமிழின ஒற்றுமைக்கு கால்கோள் போடுவதாகவும் அமைந்திருந்தது.

இம் மன்றத்தின் நான்காவது மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் தீர்மானித்து இருந்தது. தமிழின உணர்ச்சிக்கு மெருகூட்டிவிடும் எனவும், உலகரீதியில் தமிழர்களின் மத்தியிலான ஒருமைப்பாட்டிற்கு உரம் சேர்த்துவிடும் எனவும், அப்போது பதவியில் இருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு கருதியது. இதன் காரணமாக இம் மாநாடு கொழும்பில் தான் நடத்தப்பட வேண்டும் என்று முரண்டு பிடித்தது. யாழ்ப்பாணத்தில் தான் மாநாடு நடத்தப்படவேண்டும் என்ற தமிழர்களின் விருப்பத்தை -வேண்டுகோளை அரசு புறக்கணித்தது. இதன் காரணமாக பேராளர்களுக்கான நுழைவு அனுமதி வழங்குவது முதல், பாடசாலை மண்டபங்களைப் பயன்படுத்துவது வரை அனைத்து விடயங்களிலும் அரசின் இடையூறுகளும், குறுக்கீடுகளும் இடம்பெற்றன.

எனினும் அரசுக்குச் சவாலாக யாழ்ப்பாணத்தில் மக்களின் பூரணமான ஒத்துழைப்போடும், பங்களிப்போடும் மாநாடு இடம் பெற்றது. யாழ்ப்பாணத்தின் வீடுகளே விருந்தினர் விடுதிகளாக மாறி பேராளர்களைப் போசித்தன. யாழ்ப்பாணப் பகுதியில் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக விடுத்த சவால் கண்டு அதிர்ந்த கொழும்பு அடாவடித்தனத்தில் இறங்கியது. காக்கிச் சட்டை அணிந்தவர்களால் இறுதி நாள் நிகழ்வுகள் களேபரமாக்கப்பட்டன.

> “தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் நயினா முகம்மதுவின் தமிழின் சுவையில் மெய்மறந்து செவிமடுத்திருந்த கூட்டத்தின்மீது, பொலிசாரின் கண்ணீர்ப் புகைக்குண்டுகளும், குண்டாந்தடிப் பிரயோகமும் இடம்பெற்றன. ஒன்பது தமிழர்கள் துடிதுடிக்க உயிரிழந்தனர். ஜனவரி பத்தாம் நாளை தமிழாராய்ச்சி மகாநாட்டுப் படுகொலைகளின் நினைவு நாளாக நாட்காட்டிகள் குறித்துக்கொண்டன.”

## வாடிக்கையானதும் வேடிக்கையானதும்

அதற்குப் பின்னர் நீண்ட காலம் நிகழ்த்தப்படாமலேயே

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...

# ஈழ அறிஞர் புறக்கணிப்பு;

**தஞ்சாவூரில் சென்ற மாதம் முதலாம் நாள் ஆரம்பமான தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு ஈழத்து அறிஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாததையும், இம் மாநாட்டிற்குச் சென்ற தமிழ் ஆய்வாளர்கள் தமிழ்நாட்டிலிருந்து பலவந்தமாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதையும் கண்டித்து கம்பன் கழகம் யாழ்ப்பாணத்தில் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தியது.**

06. 01. 1995, வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் -ஈழத்து கலை -இலக்கியவாதிகள் மற்றும் தமிழ் அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு தமது கருத்தினை வெளிப்படுத்தினர்.

திரு. சிவராமலிங்கம் இதற்குத் தலைமை வகித்தார்.

வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் இதோ.....

### திரு. சண்முகநாதபிள்ளை

தமிழறிவில் நாம் தமிழகத்திற்கு எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல; இதை நாம் நிருபித்து வருகிறோம்.

இந்த மகாநாட்டிற்கு எமது அறிஞர்கள் பார்வையாளர்களாகக் கூட அனுமதிக்கப்படவில்லை.

**“தமிழகத்தை, ஈழத்தமிழர்கள் தாய்நாடு... தாய்நாடு எனக் கொண்டாடுவார்கள்; தாய் குழந்தைகளைத் தூக்கி வீசிவிட்டது.”**

### திரு. செங்கை ஆழியன்

தமிழகம் ஈழத்து அறிஞர்களையும் எழுத்தையும் புறந்தள்ளும் நோக்கில் நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளது.

கனக செந்திநாதன் கூறுவார் - எமக்கென்றொரு தமிழ். எமக்கென்றொரு இலக்கியம் வேண்டும் என.

**“ஈழத்து அறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டதை நாம் கண்டிக்கலாம்; ஆனால் உரிய அழைப்பில்லாமல் சென்று அவர்கள் திருப்பி அனுப்பியதைக் கண்டிப்பது சரியாகப்படவில்லை.”**

அழைப்பில்லாமல் நாம் ஏன் செல்ல வேண்டும். எமது விற்பன்னத்தைக் காட்டவா? அல்லது -ஒரு ரூபா சாப்பாட்டிற்காகவா? அல்லது நாட்டைப் பார்க்கவா நாம் போக வேண்டும்?

அழைப்பில்லாமல் சென்றதன் மூலம் - சிந்தனையில் தமிழ்நாட்டின் அங்கீகாரத்தை வேண்டுவது போலப்படுகிறது.

### பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார்

அழைப்பு இருந்ததோ - இல்லையோ -எமது அறிஞர்கள் -கல்விமான்கள் - திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது கண்டிக்கப்படவேண்டியதே.

தமிழ் இனத்திற்கு நன்றி உணர்வு போல விருந்தோம்பல் ஒரு பண்பு; இது இல்லாமல் போய்விட்டதோ என எண்ண வைக்கின்றது.

தமிழ்நாடு நடந்து கொண்டவிதம், தமிழ் அறிஞர்களுக்கு மதிப்பு வழங்கவில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழ் வளர்ச்சியிலும் - ஆய்விலும் அரசியல் புகுந்து விட்டது. இப்படியான மாநாட்டிற்கு அரசின் உதவி -ஆதரவு தேவையானதுதான். ஆனால், மாநாடோ அரசியல்மயமாக்கப்படக் கூடாது. அரசியல் கலந்தது தான் இந்த மாநாட்டிற்கு நடந்த கேடு.

### காரை சுந்தரம்பிள்ளை

தமிழக அறிஞர்கள் எமது வருகையை விரும்பியுள்ளனர். ஆனால் அரசு விரும்பவில்லை. அதனால் தான் இந்த அவமானம் நிகழ்ந்தது.

நாம் அறிவு தேடும் நோக்கில் இந்தியா செல்லவில்லை. இங்குள்ள அறிஞர்கள் எவரையும் இந்தியா உருவாக்கவில்லை. சிவத்தம்பி இந்தியா சென்றா அறிவு தேடினார்?

எனது பயணத்தில் தனிப்பட்ட சில தேவைகளும் இருந்தன.

### அ. யேசுராசா

**“பிராமணிய ஆளும் வர்க்கம் வளர்ந்துவரும் தமிழ்த் தேசியவாதத்திற்கு அஞ்சுகிறது; அதனால் தான் அதற்குரிய தடைகளை - எதிர்ப்பைக் காட்டும் அடையாளமாக ஈழத்து அறிஞர்களைப் புறக்கணித்துள்ளது.”**

இந்த அரசியல் பின்னணியை மத்திய -மாநில அரசுகளின் தன்மைகளை அம்பலப்படுத்த வேண்டும். சிவத்தம்பியின் பி. பி. சி. செவ்வியிலும்சரி, காரையின் உரையிலும் சரி நழுவல் போக்கைக் காணக்கூடியதாக உள்ளது.

இவர்கள் இணைந்து பிராமணிய ஆளும் வர்க்கத்தின் நோக்கத்தை உலக -தமிழக மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

கம்பன் கழக மண்டபத்திலோ அல்லது இளங்கலைஞர் மண்டபத்திலோ கூட்டம் போட்டுக் கண்டிப்பதில் எவ்வித பயனுமில்லை.

74 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு சிறிமாவோ அரசு தடையாகச் செயற்பட்டது. முட்டுக்கட்டை போட்டது. தமிழக அறிஞர்கள், கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வருவதற்கு அனுமதி மறுத்தது.

# எதிராக பாயும் கணைகள்!

இச்சமயத்தில் பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்கள் அரசின் போக்கை ஆதரித்தனர். யாழ். தமிழாராய்ச்சி மாநாட்டைப் புறக்கணித்தனர். இன்று ஈழ அறிஞர்கள் தஞ்சாவூர் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் செல்வதற்கு தமிழக அரசு தடைவிதிக்கிறது.

**அன்றைய சிறீலங்கா அரசிற்கு ஆதரவாக இருந்து யாழ். மாநாட்டை எதிர்த்தவர், தஞ்சாவூர் மாநாட்டிற்குச் செல்கிறார். தமிழக அரசு திருப்பி அனுப்பிவிட்டது.**

**தொகுப்பு**
**வவுனியா திலீபன்**

இதில் உள்ள முரண்தன்மையை நோக்கலாம். இரு தவறுகளும் என்றும் சரியாகாது.

புறக்கணிக்கப்பட்ட அறிஞர்கள் - தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள்.

### சொக்கன்

தமிழக அறிஞர்கள் இங்கு வந்தால் - அவர்களுக்குக் கொடி பிடிக்கிற கூட்டம் இங்குள்ளது. இது ஏன்?

**“எமது கல்விமான்கள், உல்லாச பயண அனுமதியில் இந்தியா சென்றார்கள் எனக் கேள்விப்படுகிறோம்; இப்படிச் சென்று மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமா?”**

**இது அவமானம்.**

எமது கதைகள் மற்றும் எழுத்துக்கள் தமிழகப் செய்தித்தாள்களில் வெளிவர வேண்டுமென நாம் காவடி எடுக்கத் தேவையில்லை. மாடுகளுக்குக் குறிசுடுவது போல, எமது இலக்கியத்திற்கு முத்திரை குத்தவேண்டாம்.

நாம் எந்த மண்ணில் இருக்கிறோம். எமது இருப்பின் அர்த்தம்.... இவற்றை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### குழந்தை சண்முகலிங்கம்

அரசியல் எல்லாவற்றிலும் கலந்து தான் இருக்கிறது. அரசியல் இல்லாமல் வாழ்வில்லை என்றாகி விட்டது.

எமது அறிஞர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டியதே.

### ஜெயராஜ் (கம்பன் கழகம்)

முக்கியமாக, அறிவுலகம் மான உணர்ச்சி பேணப்படவில்லை. பல்கலைக்கழகத்திற்கு இது பற்றி கவலை இல்லை. ஆனால் நாம் கவலைப்படுகிறோம்.

**“தமிழ் உலகத்துத் தலைமை எமது கைக்கு வந்து கொண்டிருக்கிறது; இதை நாம் உணராமல் - அவமானங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.**

**இத்தனை உயிர்த் தியாகம் இந்த மண்ணில் நிகழ்கிறது. இதற்குப் பிறகும் உல்லாசப்பயணம் போனோம்... நாடு பார்க்கப் போனோம்... என்று கூறுவது கேவலமானது -இது பெரிய அறியாமை.”**

பல்கலைக்கழகம் எமது அறிவுலகத்தைப் பேணப் போவதில்லை. இவர்களினால் எமது தியாகம் வீணாகிறது.

சமுதாயச் சிந்தனை இல்லாத சமுதாயம் அழிந்து போய்விடும். நாம் பொதுவாக வாழப் பின்நிற்கின்றோம். தனித்தனியாக வாழுகிறோம். ■

(நன்றி: ஈழநாதம்)

# எமக்காக போர் செய்த இந்தியாவை பிரேமதாசா திருப்பி அனுப்பியது தவறு

### முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா

எமக்காக இந்திய இராணுவம் போர் செய்தது. அக்காலத்தில் அது எமக்குப் பெரிய உதவியாக இருந்தது. இந்த நிலையில் இந்திய இராணுவத்தை பிரேமதாசா திருப்பி அனுப்பியமை மகவும் தவறு என, முன்னாள் சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா 'ராவய' செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு அழைக்கப்பட்டமை சரியா எனக் கேட்கப்பட்ட போது, "அது மிகவும் சரியானது; இந்தியா அக்காலத்தில் எமக்கு மிகவும் உதவியாக இருந்தது. போருக்காக யாருடைய உதவியையும் பெற்றுக்கொள்வது பிழையான செயலாக அமையாது. இதனை உலக சரித்திரம் புலப்படுத்தி இருக்கிறது. சீன - இந்தியப் போரின்போது இந்தியா அமெரிக்காவின் உதவியைப் பெற்றது என ஜே. ஆர். பதிலளித்தார்.

1957 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா -செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து நான் கண்டி யாத்திரை சென்றதற்குக் காரணம், வடக்கு -கிழக்கு மாகாணங்கள் சர்வசன வாக்கெடுப்பு இன்றி இணைக்கப்பட்டமையே ஆகும். முப்பது ஆண்டுகளின் பின் உருவாக்கப்பட்ட இலங்கை -இந்திய ஒப்பந்தத்தில் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது" என்று மேலும் அவர் கூறினார். ■

# இந்தியா ஆராய்கிறதாம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவர அனைத்து சாத்தியக்கூறுகள் பற்றி இந்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், இது குறித்து சிறீலங்கா அரசுடன் அணுகுவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் இந்திய வெளிவிவகார இணையமைச்சர் ஆர். எல். பாட்டியா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ராஜ்யசபாவில் எழுத்து மூலம் அளித்த பதிலொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்திய அரசின் பல்வேறு அமைப்புக்களும் இப்பிரச்சினை குறித்து பரிசீலித்து வருவதாகவும் குறிப்பிட்டார். ■

# ஒருங்கிணைந்த இலங்கைக்குள் இரு பாராளுமன்ற அமைப்பு?

### பொ. ஐ. முன்னணியின் தீர்வுத் திட்டம்

ஒருங்கிணைந்த இலங்கை என்னும் அமைப்பின்கீழ் சமமான இரு பாராளுமன்றங்களை அமைக்கும் திட்டம் ஒன்றையும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தமிழ் மக்களின் தலைவராக ஏற்றுக் கொள்வது குறித்த திட்டமொன்றையும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு கொண்டுள்ளதாக 'ராவய' செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசால் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டம் விரைவில் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப் பட இருப்பதாகவும் அது தெரிவிக்கிறது.

சிறீலங்காவின் ஜனாதிபதியின் கீழ் முழு நாட்டினதும் நிறைவேற்று அதிகாரம் இருக்கும் என்றும் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் பகுதிகளுக்கு அதிகாரங்களை வரையறை செய்து இரு பாராளுமன்றங்களை அமைப்பதே இதன் நோக்கம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை தமிழ்மக்களின் தலைவராக ஏற்றுக் கொள்வது தொடர்பான திட்டம் அரசிடம் இருப்பதாகவும், இரு தரப்பு பேச்சுக்களின் அடிப்படையிலேயே இது அமைய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ■

## அயல் நாட்டுச் செய்திகள்

# பேச்சுக்களில் முன்னைய ஆர்வம் இப்போது அரசிடம் இல்லை

### நவசம சமாஜ கட்சி பொதுச் செயலாளர் தெரிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆரம்பத்தில் காட்டிய ஆர்வத்தை இப்போது காணமுடியவில்லை என நவசம சமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்த குறுகிய காலத்தில் மக்கள் அதன் மீதான நம்பிக்கையை இழக்கும் நிலை உருவாகி வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர்மாநாட்டில் அவர் இக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கும் போது கட்சியிலிருந்து வாசுதேவ நாணயக்கார பிரிந்து சென்றிருப்பதால் கட்சி பலமிழந்து விடவில்லை.

தற்போது எமது கட்சியுடன் ஜே. வி. பி யினரும் உடன்பட்டு இணையும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் காணப்படுகின்ற இனவாதச் சாயம் நீக்கப்பட்டதும் தொழிலாளர் நலன்களுக்காக குரல் கொடுக்கும் சக்தியாக எம்மோடு இணையும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறுகிய காலத்தில் நாம் அரசிற்கு பிரதான சவாலாக அமையப் போகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ■

# சிறீலங்கா ஜனாதிபதி திருப்தி தமிழ் குழுக்கள் பரிதவிப்பு

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா 'மோதல் தவிர்ப்பு' நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி பூரண திருப்தி தெரிவித்திருப்பதாக தெரியவருகிறது. "மோதல் தவிர்ப்பு அமுல்செய்யப்பட்டுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளை அமைக்கின்றார்கள்" என்ற செய்திகளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுரத்த ரத்வத்த உண்மைக்குப் புறம்பானது என்று மறுத்துள்ளார்கள்.

இதேவேளை, மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், மோதல் தவிர்ப்பு சரிவர நடைமுறையில் இருப்பதாக தம்மைச் சந்தித்து தகவல் வெளியிட்டுள்ளனர் என சிறீலங்கா ஜனாதிபதி கூறியுள்ளார்.

இம்மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தால் தடுமாறிப்போயுள்ள கொழும்புத் தமிழ்க் குழுக்கள் பலவிதமான தமிழின துரோகக் கருத்துக்களை வெளியிடுகின்றன. பூநகரியிலிருந்து இராணுவ முகாமை அகற்றவேண்டிய தேவையுண்டா? என ஈ. பி. ஆர். எல். எவ். ஐச் சேர்ந்த கேதீஸ்வரன் சிறீலங்கா இராணுவத்திற்காக வக்காளத்து வாங்கியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்களில் இருக்கும் தலைவர் பிரபாகரனின் கையெழுத்துப் பற்றிய சர்ச்சை ஒன்றை கிளப்ப முயிற்சித்தவர்களுக்கு சிறீலங்கா ஜனாதிபதி தகுந்த பதிலடி கொடுத்துள்ளார்.

தலைவர் பிரபாகரனின் ஒப்பமிடப்பட்ட கடிதம் தன்னிடமிருப்பமாகவும், அது தலைவர் பிரபாகரனின் கையெழுத்துத்தான் என்று தனக்குத் தெரியுமெனவும் சிறீலங்கா ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். தேவை 'ஏற்படின் செய்தித்தாள்களுக்கு கடிதப் பிரதிகளை வழங்கி, தம்மால் அத்தாட்சிப்படுத்த முடியுமெனவும் சந்திரிகா கூறியுள்ளார்.

இவ்விதமாகப் போரைப் பயன்படுத்தி உடல்வளர்த்த, சுயநலத் தமிழ்க் குழுக்களும், சிறீலங்கா இராணுவவாதிகளும், ஆயுதப்பேரத்தரகர்களும் ஏற்பட்டுள்ள மோதல் தவிர்ப்பினை எவ்வழியிலாவது குழப்பிவிடவேண்டுமென தவிப்பதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. ■

# பொதுமக்களைக் கவராத இராணுவம் பெரும் நெருக்கடிக்குள்ளாகும்

### □ சண்டே ஐலண்டில் தராக்கி

மூன்றாம் உலக நாடு ஒன்றின் இராணுவம் பொதுமக்களின் கவனத்தைக்கவர தவறும்போது, அது பெரும் நெருக்கடிக்குள்ளாகும். இது இராணுவத்தினுள் சர்ச்சைகளை ஏற்படுத்துவதோடு, இராணுவத்தினரிடையே உறுதி குலைப்பதாக அமைந்துவிடுகிறது. இது இராணுவ 'ஆட்சேர்ப்பைப் பாதிப்பதாகவும் போய்விடும். இத்தகைய ஓர் நிலையை ஏற்படுத்துவதிலேயே பிரபாகரன் போன்ற நுட்பத்திறன் உள்ள இராணுவத் தலைவர்கள் அக்கறையாக இருப்பார்கள். இவ்வாறு சண்டே ஐலண்டில் அதன் அரசியல் விமர்சகர் தராக்கி குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ வரலாற்றையோ விதிமுறைகளையோ ஆழமாக நோக்குபவர்கள் மரபுவழி ரீதியில் போரிடும் இராணுவம் இதன் சக்தியை படிப்படியாக இழந்துவந்திருப்பதை அவதானிக்க முடியும் என்றும் தராக்கி அதில் குறிப்பிட்டுள்ளார். ■

# பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாக புதிய அரசியல் யாப்பு இருக்க வேண்டும்

### இல்லாவிடில் பயனற்றது என்கிறார் வாசுதேவா

"இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணக்கூடியதாக புதிதாக வரையப்படவுள்ள அரசியலமைப்பை உருவாக்காவிடில், அதனால் எதுவித பயனும் கிடைக்கமாட்டாது" -இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு, விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற சமாதான விழாவில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், "சிங்கள மக்கள் எவ்வளவுக்கு சமாதானத்தை அடியொற்றி செயற்படுகிறார்களோ அவ்வளவுக்கு நாம் சமாதானத்தை அண்மிப்போம். இந்நாட்டில் சமாதானத்திற்கான முதற்படியை எடுப்பது பெரும்பான்மை சிங்கள மக்களினதும், அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசினதும் பொறுப்பாகும்" எனத்தெரிவித்தார். ■

# வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண ஏனைய கட்சிகள் உதவ வேண்டும்

### □ அமைச்சர் பீரிஸ் கோரிக்கை

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு, ஏனைய அரசியல் கட்சிகள் ஒத்துழைப்புத்தர வேண்டும். இவ்வாறு நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் வண. பலிப்பான சந்தானந்த தேரருடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் அமைச்சர் மேலும் கூறுகையில், சுயலாபங்களுக்காக அரசியல் அமைப்பு உருவாக்கப்படக்கூடாது என்றும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு முயற்சித்துவருகிறது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் பெரும்பான்மை சமூகத்தின் உரிமைகளைத் தியாகம் செய்யாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் எனவும் அங்கு அமைச்சர் சுட்டிக்காட்டினார். ■

# வட - கிழக்கு பிரச்சினைக்கு நிலையான தீர்வு அவசியம்

"வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வு அவசியம்; இதனை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது." இவ்வாறு 'தினமின' செய்தித்தாள் தனது ஆசிரிய கருத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்படுகையில், "நிலையான தீர்வுக்கு பல இன மக்களும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும் என்றும், இதேவேளை கடந்தகால அனுபவங்களைப் போன்று இதனையும் இடறவிடாமலும், சோரவிடாமலும் -இருதரப்பினரும் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ■

# கண்காணிப்புக் குழுவில் இடம் பெறும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் படைத்துறை அனுபவம் பெற்றவர்கள்

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமுலுக்கு வந்துள்ள 'மோதல் தவிர்ப்பு' ஏற்பாட்டைக் கண்காணிக்க உள்ள குழுக்களுக்குத் தலைமைதாங்கும் வெளிநாட்டு அவதானிகள் பலர், குடிசார் (சிவில்) அதிகாரிகளாக உள்ள போதும் இவர்கள் படைத்துறை அனுபவம் உடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் ஏற்கனவே கொழும்பு வந்துசேர்ந்தவர்கள் படை அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர்.

தாம் உடனடியாக யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக அந்த அவதானிகள் படை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறீலங்கா அரசு கோரினால், மேலும் அவதானிகளை அனுப்பி வைக்கமுடியும் என கனடா, நோர்வே, நெதர்லாந்து என்பன கூறியுள்ளன. ■

# “தேசியத் தலைவரின் பரிசு எனது முயற்சிக்கு உத்வேகத்தைத் தந்தது”

## தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவி சுதர்சனா

"தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தோற்றி தேசிய மட்டத்தில் தெரிவாகி தேசியத் தலைவரின் பரிசையும் பாராட்டையும் பெறுவேன்" என்ற நம்பிக்கை என்மனதில் திடமாக வேரூன்றியிருந்த போதிலும், அதிகூடிய புள்ளியைப் பெற்று முதல் மாணவியாக சித்தியடைய வேண்டும் என எதிர்பார்க்கவில்லை. முதல் மாணவியாகி தேசியத் தலைவரின் பரிசைப் பெறுவதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்கிறார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியான சுதர்சனா மகேந்திரன்.

> “தேசியத் தலைவரின் பரிசைப் பெறும் பாக்கியம் கிடைத்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய ஊக்குவிப்புக்கள் எதிர்காலத்திலும் தொடர்ந்து கற்பதற்கான ஒரு உந்து சக்தியாக எனக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.”





**1994 ஆகஸ்டில் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தேசியமட்டத்தில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை (8 டி) பெற்றதுடன், அதிகூடிய புள்ளியான 710 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் தேசிய மட்டத்தில் முதல்தர மாணவியாக தேர்வு செய்யப்பட்டதுடன், தமிழ்ப் பாடத்தில் அதிகூடிய புள்ளியான 91 ஐயும் பெற்று இரட்டிப்பு மகிழ்ச்சியில் திளைத்திருந்த சுதர்சனாவை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.**

இச்சந்திப்பின் போது அவரிடமிருந்து அறிந்து கொண்டவற்றைத் திரட்டி, வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.

நான் ஆரம்பக் கல்வியைக் கற்கின்ற காலத்திலேயே அம்மா மிகுந்த அக்கறை காட்டுவார். பாடசாலை விட்டு வந்ததுமே எனது கொப்பி, புத்தகங்களை எல்லாம் பார்த்து திருப்தியடைந்த பின்பே மதிய உணவு தருவா. ஆரம்ப காலத்தில் இருந்தே உடனிருந்து அம்மா காட்டிய ஒத்துழைப்பும் ஊக்கமுமே, இந்தப் பரிசைப் பெறுவதுற்கு வழிசமைத்தது எனக் கூறலாம்.

எங்கள் குடும்பத்தில் அண்ணா, அக்கா, தங்கை ஆகியோர் உள்ளனர். இவர்கள் எல்லோருமே நன்றாகப் படிக்கக் கூடியவர்கள். 1992 இல் நடைபெற்ற தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் அக்கா தேசிய மட்டத்தில் இரண்டாவதாகத் தெரிவாகி தேசியத் தலைவரின் பரிசை பெற்றுக் கொண்டார். அவருக்கு கணிதத்தில் நூறுபுள்ளிகள் கிடைத்தன. அன்றிலிருந்து நானும் தேசிய மட்டத்தில் முதல் பத்து பேர்களுள் ஒருவராக வந்து தேசியத் தலைவரின் பரிசைப் பெறவேண்டும் என மனதுக்குள் திடசங்கற்பம் பூண்டேன்.

நாங்கள் எல்லோருமே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளோம். பாடசாலையில் படிக்கும்போது ஒவ்வொரு தவணையும் முன்னணியில் வருவேன்.

வருடந்தோறும் பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் ஒவ்வொரு பாடத்திலும் அதிகூடிய புள்ளியைப்பெறும் மாணவருக்கு பரிசில்கள் வழங்கப்படும். இதில் வருடா வருடம் குறைந்தது பத்துப் பாடங்களுக்கான பரிசில்கள் எனக்கே கிடைக்கும்.

தினமும் காலை ஐந்து மணிமுதல் ஏழுமணிவரையும் கற்பேன். மாலை பாடசாலையால் வந்து, மதிய உணவு அருந்தியபின், மூன்று மணி முதல் கல்வியைத் தொடர்வேன். எனக்குக் கிடைக்கும் நேரங்களை எல்லாம் நான் வீணடிப்பது கிடையாது. அதனைப் படிப்பிற்காகவே செலவிடுவேன். உடனுக்குடனேயே படித்து சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதால், பரீட்சைக்கென விசேடமாக நேரம் ஒதுக்கிக் கற்கவேண்டிய அவசியமேற்படவில்லை.

பொதுக்கல்வித் தேர்வு ஆகஸ்டில் நடைபெறுவதால் பாடசாலையில் அவசர அவசரமாகப் பாடத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படுகிறது. இதனால் மெல்லக் கற்கும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனினும் எமது பாடசாலையில் அத்தகைய மாணவர்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. பாடசாலையில் வாரந்தோறும் பரீட்சைகள் நடாத்தப்படுவதால், முதன் முதலாக பரீட்சைக்கு தோற்றுகிறோம் என்ற பதற்றமோ, பயமோ இருக்கவில்லை. பரீட்சை எழுதி முடிந்ததுமே எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது.

இத்தேர்வு ஆகஸ்டில் நடாத்தப்படுவதால், அவசரப்பட்டு பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருப்பதுடன், மீட்டல் செய்வதற்கு போதிய அவகாசம் இல்லாது போய்விடுகிறது. இதனால் பரீட்சைக்கென எல்லா மாணவர்களும் தம்மை முழுமையாகத் தயார்படுத்த முடிவதில்லை. இப்பரீட்சை ஓரிரு மாதங்களுக்கு பின் போடப்படுமானால், மாணவர்கள் இன்னும் சிறந்த புள்ளிகளைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என எண்ணுகிறேன்.

இப்பரீட்சையானது தமிழீழ மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். ஏனெனில் இப்பரீட்சைக்காக நாம் எம்மை முன்கூட்டியே தயார் செய்வதால், பாடத்திட்டம் முன்கூட்டியே முடிக்கப்படுகிறது. பரீட்சை ஒன்றை எழுதியதன் மூலம் அடுத்து நடக்கப் போகும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தயக்கமின்றி முகம் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது.

> “இப்பரீட்சையானது தமிழீழ மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். ஏனெனில் இப்பரீட்சைக்காகவே நாம் எம்மை முன் கூட்டியே தயார் செய்வதால் பாடத்திட்டம் முன் கூட்டியே முடிக்கப்படுகிறது. பரீட்சை ஒன்றை எழு-தியதன் மூலம் அடுத்து நடக்கப் போகும் க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தயக்கமின்றி முகம் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது.”

பொதுக்கல்விக் தேர்வு முடிவடைந்த பின்னரும் மூன்று மாதங்களும் மீட்டல் செய்யவும், நாம் எந்தப் பகுதியில் குறைவாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டு கிடைக்கும் கால இடைவெளிக்குள் எம்மைத் தேற்றிக்கொள்ளவும் முடிகிறது. இது மட்டுமன்றி, சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள் வரும்வரை காத்திராது, முன்கூட்டியே உயர்தரப் பாடங்களை நாம் கற்கத் தொடங்கக் கூடியதாகவும் உள்ளது.

விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கிடையாது. கிடைக்கும் ஓய்வு நேரங்களில் கதைப்புத்தகங்கள் படிப்பேன். சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவேன். நான் எழுதிய இரு சிறுகதைகளுக்கு முதல்பரிசு கிடைத்துள்ளது. வடதமிழீழ தமிழ் மொழி கலைத்திறன் செயற்பாட்டுப் போட்டியில் பங்கு பற்றி, கட்டுரை எழுதியபோது அதற்கு முதல் பரிசு கிடைத்தது. சங்கீதம், வாய்ப்பாட்டு ஆகியவற்றில் ஆண்டு ஒன்பதிலேயே தரம் நான்கு சித்தியடைந்து விட்டேன்.

பாடசாலையில் சகல ஆசிரியர்களும் அடிக்கடி ஊக்கம் அளிப்பார்கள். புத்திமதிகள் கூறுவார்கள். கணித ஆசிரியர், "'டி' எடுத்தால் மட்டும் போதாது, நீங்கள் எல்லோரும் 95 புள்ளிகளுக்கு மேல் எடுக்க வேண்டும்; அப்படியான ஒரு சிந்தனையே உங்களிடம் இருத்தல் வேண்டும்" என்பார்.

பரீட்சைகள் நடாத்தப்படுவதும், பரிசில்கள் வழங்கப்படுவதும் மாணவர்களை ஊக்குவிப்பதாகவே அமையும். தேசியத் தலைவரின் பரிசைப் பெறும் பாக்கியம் கிடைத்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய ஊக்குவிப்புகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து கற்பதற்கான ஓர் உந்து சக்தியாக எனக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சின்னவயதிலிருந்தே தமிழ்ப் பாடத்தில் நாட்டம் அதிகம். கதைப்புத்தகங்களை சின்ன வயதிலிருந்தே வாசிக்கும் பழக்கம் இருந்ததால், அப்போதிலிருந்தே தமிழ் மொழியில் தேர்ச்சியுடையவளாகத் திகழ முடிந்தது. அத்துடன் சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதத் தூண்டியவையும் அவையே. இதனால் தான் இம்முறை தமிழ்ப்பாடத்திலும் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளியாகிய 91 ஐ பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதற்கும் தேசியத்தலைவரின் பரிசு கிடைக்கவுள்ளதை எண்ணி இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

சின்ன வயதிலிருந்தே டாக்டராக வரவேண்டும் என்ற விருப்பம் என்னிடம் உள்ளது. அதனால் உயர்தரத்திற்கு உயிரியல் துறையை (Bio Science) தேர்ந்தெடுக்கப் போகிறேன் என்றார்.

மிகவும் மகிழ்வுடன் காணப்பட்ட சுதர்சனாவின் தாயாரிடம் மேலதிக விபரங்களை அறிந்திடும் நோக்கில்,

**பேச்சுக் கொடுத்தபோது...**

"எனது நான்கு பிள்ளைகளும் கல்வியே கண்ணாக இருப்பவர்கள்; அவர்களுக்கு நேரத்தை வீணாக்குவதில் விருப்பமே கிடையாது. நான் தாயார் என்ற வகையில் அவர்களுக்கான சகல கடமைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கிறேன். அவர்கள் படிப்பிற்காக எதையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**நேர்காணல்**

**சசிகரன்**

பிள்ளைகள் கெட்டிக்காரர் என்று நான் சொன்னால் அவர்களுக்குப் பிடிக்காது. மற்றவர்கள் சொல்ல வேண்டும் என்பார்கள். பாடசாலையில் சகல பாடங்களிலும் முதல் பரிசு பெறுவார்கள். அதற்காகக் கிடைக்கும் பணத்திற்கு புத்தகங்கள் வாங்குவார்கள். ஒரு பாடத்திற்கு நூறு ரூபா முதல் பரிசாகக் கிடைக்கும். வருடத்திற்கு ஆயிரத்து நூறு ரூபாவரை சுதர்சனாவிற்குக் கிடைக்கும்.

எனது நான்கு பிள்ளைகளுமே புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, யாழ்ப்பாணக் கல்லூரியில் இலவசமாகவே கல்வி கற்று வருகிறார்கள்" என்றார்.

**"பெற்றோரின் ஊக்குவிப்பும், பிள்ளைகளின் விடாமுயற்சியும் அவர்களனைவரதும் எதிர்கால இலட்சியங்களை நிச்சயம் வென்றெடுக்கச் செய்யும்"** என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து நகர்ந்தோம். ■

(நன்றி:ஈழநாதம்)

# தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு
## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதலிடம்
### தேர்வுப் பெறுபேறுகள் வெளியாகின

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட 1994 ஆம் ஆண்டுக்கான தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி தேசியரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி தேர்வுக்கு 16,500 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த ஒன்பது மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் மிகுதிறன் (டி) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி சுதர்சனா மகேந்திரன் 8 'டி'யைப் பெற்றதுடன், 710 புள்ளிகளைப் பெற்று தேசியரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், தமிழ்மொழிப் பாடத்தில் ஆகக்கூடுதலான புள்ளியை (91 புள்ளிகள்) பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ்மொழிப் பாடத்தில் அதிகூடுதலான புள்ளியைப் பெற்றமையைப் பாராட்டி, விடுதலைப் புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகம் பணப்பரிசு வழங்கி கௌரவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ■

# வட-கிழக்கு வாழ் தமிழர்களை, "மக்கள்" என அங்கீகரிப்பதே பிரச்சினைத் தீர்வுக்கு உதவும்

## ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் உபகுழுக் கூட்ட அமர்வில் 15 அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக வேண்டுகோள்

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 51 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் இம்மாதம் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதில், பங்கெடுத்துக்கொண்ட சர்வதேச கல்வி அபிவிருத்தி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதியால் வாசிக்கப்பட்ட அறிக்கையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் போராட்டத்தை, போர் மூலம் வெல்ல முடியாதெனவும், வடக்கு -கிழக்கு தமிழ் மக்களின் 'தாயகம' எனவும், 'தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமையை' ஏற்றுக்கொண்டு தீர்வை முன்வைக்குமாறு சிறீலங்கா அரசை வலியுறுத்தவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. இதனை, மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினூடாக, சிறீலங்கா அரசிற்கு வலியுறுத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டது. அவ்வறிக்கையின் முழுப்பகுதியும் கீழே தரப்பட்டுள்ளது.**

தலைவர் அவர்களே,

இலங்கைத் தீவின் ஆயுதப் போராட்டமும், மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிரான தொடர்ச்சியான வன்முறைகளும் கடந்த பல ஆண்டுகளாகஆழமான முறையில் கவனத்தை ஈர்த்து வருகிறது.

1984/11 ஆம் இலக்கமிட்ட 14. 03. 1984 நாளிடப்பட்ட இவ் ஆணைக்குழுவின் தீர்மானிப்பின் படி ஆயுத சம்பந்தப்பட்ட பங்காளர்களை சர்வதேசரீதியாக போராட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைச் சட்டங்களை முழுதாக மதித்து நடக்கும் படியும் அத்துடன் "மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மதிக்கும் அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றுக்கான பேச்சுவார்த்தைக்கு போகும்படி வலியுறுத்தியமையையும், நினைவுகூற விரும்புகின்றோம். இது 1987 மார்ச்சில் மீளவலியுறுத்தப்பட்டதையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

1992 பெப்ரவரி மாதத்தில் இவ் ஆணைக்குழுவின் தலைவர், சிறீலங்காவின் மனித உரிமை நிலைமைகள் குறித்து இவ் ஆணைக்குழு ஆழமான கவனம் செலுத்துவதாகவும், மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரத்தையும் மதித்து அதன் அடிப்படையில் தேசத்தின் வடக்கு -கிழக்கு பகுதிகளுக்கு நீண்டகால அமைதியை ஏற்படுத்தக்கூடிய அரசியல் தீர்வை தரக்கூடிய பேச்சுவார்த்தைக்கு போகும்படி சம்பந்தப்பட்ட எல்லாப் பங்காளர்களையும் வலியுறுத்தினார்.

தலைவர் அவர்களே, ஒரு ஆண்டின் பின்னர் 1993 பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற ஆணைக்குழுவின் 49 ஆவது அமர்வில் எம்மையும் உள்ளடக்கிய 15 அரசு சார்பற்ற நிறுவனங்கள், தீவின் வடக்கு -கிழக்கில் வாழும் தமிழ் மக்களை தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை சுதந்திரமாகத் தெரிவு செய்யக்கூடிய உரிமையுள்ள 'மக்கள்' என சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய அவசிய தேவையுண்டெனவும் இத்தகைய ஒரு அங்கீகாரம், கடந்த பல ஆண்டுகளாக மிகப் பெருமளவிலான மனித உயிர்களை பலியெடுத்துவரும் ஆயுதப் போராட்டத்திற்கு தீர்வினை ஏற்படுத்தக்கூடிய தளத்தினை உருவாக்கும் எனவும் வலியுறுத்தி இருந்தோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற 50 ஆவது அமர்வில் நாங்கள் உட்பட 17 அரச சார்பற்ற நிறுவனங்கள் 'தமிழர் தாயகத்தின் மேல் மேற்கொள்ளப்பட்ட பொருண்மியத் தடைகள் தொடர்வதையும் தமிழ் மக்கள் மேல் தொடர்ந்தும் பாகுபாட்டுணர்வுடன் சிறீலங்காவின் ஆயுதப்படையினர் விமான, எறிகணை, குண்டுவீச்சுக்களை தொடர்வதையும் ஆழமான முறையில் கண்டித்தோம். "அத்துடன் சிறீலங்கா அரசிற்கும் தமிழ் மக்களுக்கும் இடையுள்ள ஆழமான பிரிவினையை சிறீலங்கா ஆயுதப் படைகளை தமிழர்களுடைய எதிர்ப்பிற்கு எதிராகப் பயன்படுத்துவதன் மூலம் தீர்த்து வைக்க முடியாது" என்பதை அங்கீகரிக்க வேண்டிய தேவையுண்டு என வலியுறுத்தினோம்.

ஆகவே, தலைவர் அவர்களே, புதிதாக தெரிவு செய்யப்பட்ட சிறீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அண்மையில் தீவில் உள்ள ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரவென எடுக்கும் ஆரம்ப முயற்சிகளை வரவேற்கின்றோம். அதிலும் குறிப்பாக, 05. 01. 1995 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் கைச்சாத்திட்ட பகைமையுணர்வுகளை தவிர்த்துக் கொள்வதற்கான ஒப்பந்தத்தையும் (The declaration of cessation of hostilities) நிரந்தரமானதும், உறுதியானதும், நீதியானதுமான அமைதியை தீவில் நிலவச் செய்யவைக்க வேண்டும் எனும் பார்வையுடன் இரு தரப்பினருக்கும் இடையில் ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தையையும், நாம் வரவேற்கின்றோம்.

அத்துடன் நாம் சிறீலங்கா அரசு கடந்த ஆண்டு ஆவணி மாதத்தில் தமிழர் தாயகத்தின் மீதான பொருண்மியத் தடையில் ஒரு பகுதியினை விலக்கி கொள்ள வேண்டும் என எடுத்த முடிவின் மூலம் அமைதி முயற்சிக்கான சூழ்நிலையை உருவாக்கியமையை நாம் வரவேற்கின்றோம். ஆயினும் சிறீலங்கா அரசு இதுவரை பொருண்மியத் தடையை முற்றாக விலக்கத் தவறியதன் மூலம் பல அத்தியாவசிய பொருட்கள் தொடர்ந்தும் தடைக்குள்ளாவதையொட்டி நாம் எமது கவலையை தெரிவிக்கின்றோம். மேலும், வடக்கிலுள்ள தமிழர் தாயகத்தில் மின்சாரம் இன்மை இன்னும் தொடர்வதுடன் உண்மையில் தடை நீக்கப்பட்ட பொருட்களை கொண்டு செல்லப்படுவதை சிறீலங்கா இராணுவம் அனுமதிக்க மறுக்கிறது. சிறீலங்கா இராணுவ அணி அதிகாரிகளுக்கிடையில் தமது சுய நலன்களுக்காக போரை தொடர வேண்டும் எனும் ஆர்வம் வளர்ந்து காணப்படுவதினால் சிறீலங்கா இராணுவம் போரை தூண்டும் காரணியாக கடந்த பல ஆண்டுகளாகத் திகழ்வதை நாங்கள் இங்கு கவலையுடன் குறிப்பிட வேண்டியவர்களாக உள்ளோம். இவ்விடயத்தில், சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா கடந்த அக்டோபர் மாதத்தில் கூறிய "முன்னைய சிறீலங்கா அரசு இராணுவத்தின் மேல் போதிய கட்டுப்பாட்டை கொண்டிருக்கவில்லை" எனவும் மறுபுறத்தில் "இராணுவம் எது சரியென நினைக்கின்றதோ அந்த வழியில் செயற்படுவதை தன்னால் அனுமதிக்க முடியாது" எனவும் கூறிய வார்த்தைகள், எங்களுக்கு உற்சாகத்தை தருகிறது.

மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பான இரண்டு சர்வதேச மனித உரிமை மரபு ஒப்பந்தங்களும் எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு எனப் பிரகடனப்படுத்துகின்றன. சுயநிர்ணய உரிமை என்பது 'மனித சுயமரியாதை' எனும் கோட்பாட்டில் ஆழமாக வேரூன்றி நிற்கிறது. அத்துடன் மக்கள் தங்கள் சொந்த வரலாற்றின் முகவர்களாக செயற்பட விரும்புவதை அது இதயபூர்வமாக ஆதரிக்கிறது. இதுதான் ஜனநாயகம் எனும் நாணயத்தின் மறுபக்கம். மேற்கு சகரா வழக்கில் (ICJ REPORTS 1975) நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் 'மக்கள்' என்பதன் அடிப்படைத்தன்மை அகநிலையாகவும் புறநிலையாகவும் தனது தேசிய அடையாளங்களை வெளிப்படுத்தி அடையாளங்காணக் கூடிய நாட்டு எல்லையுடன் தொடர்பான ஒன்று என தெளிவுபடுத்தியுள்ளது.

தலைவர் அவர்களே, தமிழ் மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் நன்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லைகளில் இலங்கைத் தீவின் வடக்கு -கிழக்கில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பழைமை மிகு பாரம்பரிய மரபுகளை பகிர்ந்து கொள்பவர்களாகவும், உறுதியான கலாச்சாரத்தை கொண்டவர்களாகவும், 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறகின்றனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ள, காலத்தால் அழிபடாது வாழும் மொழியினை பேசுபவர்களாகவும் திகழ்கின்றனர். அத்துடன் மேலும் கூறுவதாயின் அவர்கள் தமது பாரம்பரிய தாயகத்தில் ஒன்றாக கூடி வாழ்தல் மூலமும் அந்நிய சிங்கள ஆட்சிக்கு எதிராக போராடுவதன் மூலமும் தாம் ஒருவர் எனும் அரசியல் மன உணர்வை அகநிலைப்பட்ட நிலையில் பெற்றுக் கொண்டவர்களாகவுள்ளனர். மிகத் தெளிவான முறையில் தம்மை 'மக்கள்' என அரசியலமைப்புப்படுத்திக் கொண்ட சுயநிர்ணய உரிமை உள்ளவர்களாக அவர்கள் உள்ளனர்.

தலைவர் அவர்களே, நாங்கள் செயலாளர் நாயகம் அவர்களை, இவ்விடயத்தை அவசர தலையீட்டுக்குரிய ஒன்றாக கருதி, அவருடைய தலையீட்டுக்குள்ள நியாயமான காரணங்களின் பேரில், இலங்கைத் தீவில் நடைபெறும் அமைதி தீர்வுக்கான முயற்சிகளை ஆழப்படுத்தும் நோக்கில் சிறீலங்கா அரசுக்கு பின்வருவன மிக அவசியமான தேவைகள் என வலியுறுத்த வேண்டும்.

01- இராணுவத்தீர்வானது, தீர்வுக்கான ஒரு வழியல்ல என உணர்வதுடன் இதில் உறுதியாக நிற்க வேண்டும். ஏனெனில் தங்களுடைய சுயநிர்ணய உரிமையை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டும் எனப் போராடும் மக்களுக்கு எதிராக போர் செய்வது சட்ட விரோதமானது அநீதியானது. அத்தகைய ஒரு போரில் வெற்றிபெற முடியாது. ஏனெனில் இது சட்ட விரோதமானதாகவும் நீதியற்றதாகவும் உள்ளது.

02- இலங்கைத் தீவின் வடக்கு -கிழக்கில் உள்ள தமிழர் தாயகத்தின் இருக்கை நிலையினை மதிக்கிறதும் தமிழ் மக்களுக்கு அவர்களுடைய அரசியல் நிலைப்பாட்டை தீர்மானிக்கும் உரிமை உண்டு என்பதை அங்கீகரிப்பதுமான அரசியல் தீர்வு ஒன்று உறுதியுடன் எய்தப்படல் வேண்டும். ■

# இந்தியாவும் அமெரிக்காவும் பாதுகாப்பு ஒப்பந்தம்

அமெரிக்க பாதுகாப்புச் செயலர் வில்லியம் பெரியும் இந்திய உள்நாட்டு அமைச்சர் எஸ். பி. சவானும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் மாலிகா அர்யுனும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர். இதில் ஐந்து அம்சங்கள் அடங்கியுள்ளன. 1994 வைகாசியில் அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டனும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் பேச்சுவார்த்தை நடத்தியதன்பேரில் புதிய பங்கு உறவு ஒன்று ஏற்பட்டுள்ளது. இருநாடுகளும் பரஸ்பரம் பாதுகாப்புக்கான கூட்டுறவின் முதன்மைத்துவத்தை அங்கீகரிக்கின்றன.

"அனைத்துலக பாதுகாப்புக்கான புதிய அச்சுறுத்தல்களைக் கருதியும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிபேண் பணிகளில் எமக்குள்ள பங்களிப்புக்களைக் கருதியும் எமது சொந்த நலன்களைக் கருதியும் இந்திய - அமெரிக்க இராணுவ ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துகிறோம். பிரதேசப் பிரச்சினைகளையும் உலகப் பிரச்சினைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு புதிய பரப்புக்களில் இருதரப்பு பாதுகாப்பு உறவுகள் வளரவேண்டும். ஆசியாவின் பாதுகாப்பிற்கும் உறுதிப்பாட்டிற்கும் ஏற்புடைய பங்களிப்பை வழங்குவதற்கு எமது இருநாடுகளுக்கு இடையிலான உறவுகள் உதவும் இத்தகைய செயற்பாடுகள் பனிப்போரை அடுத்துள்ள இன்றைய காலகட்டத்தில் உலக அமைதிக்கு வலுவூட்டும்" எனக்கூறும் ஒப்பந்தம் சிவிலியனுக்கும் சிவிலியனுக்கும் இடையிலான ஒத்துழைப்பு சேவைகளுக்கும், சேவைகளுக்குமிடையிலான ஒத்துழைப்பு, பாதுகாப்புப் பற்றிய ஆய்வுகள், பாதுகாப்புக்கான உற்பத்திகள் இடையிலான ஒத்துழைப்பு, நியமம் செய்த தகவல்களை பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

இப்பாதுகாப்பு ஒப்பந்தம், நரசிம்மராவ் காலத்தில் இந்திய புதிய வெளியுறவுக் கொள்கைகளை வெளிப்படுத்தி, அமெரிக்காவின் பக்கம்சார்வதை உறுதி செய்கின்றது என்பது அவதானிகள் கருத்து. ■

# கொழும்பில் தமிழர்கள் சுதந்திரமாக நடமாடலாமா?

## சட்டத்தரணி கேள்வி

கொழும்பில் தமிழர்கள் சுதந்திரமாக நடமாட முடியாதா? இவ்வாறு தமிழ் சட்டத்தரணி ஒருவர் நீதி அமைச்சர் பீரிசுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மார்கழி மாதம் முதலாம் நாளன்று எழுதப்பட்ட இக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், கொழும்பு கிருல்ல சந்தியில் வைத்து தம்மிடம் ஆலோசனை பெறுவதற்காக வந்த, தமது கட்சிக்காரர்களான நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்தக் கைது பொலிசாரால் நியாயப்படுத்தப்பட முடியுமானால், கொழும்பிலுள்ள எந்தவொரு தமிழரும் கைது செய்யப்படலாம். அதற்கு நிவாரணமே கிடைக்காமல்போகும். எனவே இந்த அப்பாவி மக்களை விடுவிப்பதில் தவறிவிட்டதால், அவர்களுக்கு உரிய நட்ட ஈடு கிடைக்க அடிப்படை மீறல் வழக்குத் தொடர உத்தேசித்து இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். ■

# சிங்கள தேசம்: பலம் ஏற்படுத்திய மனமாற்றம்

**"சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாகவுள்ள போர் ஒரு பக்கத்தால் நடக்கட்டும்; போரை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் இன்னொரு புறத்தால் நடக்கட்டும்.**

**இராணுவம் தன்னால் ஆனமட்டும் முயற்சிக்கட்டும். அரசியல்வாதிகளும் தங்களுக்குரிய பணியைச் செய்வார்கள்."**

இந்த விசித்திரமான இரட்டை அணுகுமுறைதான், இதுவரைநாளும் சந்திரிகா அரசு கடைப்பிடித்த சமாதானப் பேச்சிற்கான அணுகு முறையாகும்.

சந்திரிகா அம்மையாரின் அரசு பதவியேற்று சமாதானத்திற்கான கதவை அது திறந்த நாளிலிருந்து போர் நிறுத்தம் ஒன்றின் அத்தியாவசிய தேவை பற்றி, தலைவர் பிரபாகரன் பல தடவைகள் எடுத்துக் கூறிவிட்டார். ஆனால் சந்திரிகா அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. அதன் விளைவை சென்ற ஆண்டு ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மூன்று மாதங்களில் அது அனுபவித்துவிட்டது. மூன்று கப்பல்களையும் 30 இற்கு மேற்பட்ட படையினரையும் அது இழந்து விட்டது. போர் நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்குமேயானால் இந்த அழிவுகளை அரச படைகள் சந்தித்திருக்கவே தேவையில்லை. பேச்சுவார்த்தைகளும் காத்திரமான முறையில் தொடர்ந்திருக்கும்.

போர் நிறுத்தம் செய்தால் இராணுவ முகாம்கள் பலவற்றை அகற்ற வேண்டிவந்துவிடும் - விடுதலைப் புலிகள் கிழக்கிற்குள் நுழைந்து விடுவார்கள் - கடலிலே விடுதலைப் புலிகளின் செயற்பாடு அதிகரித்துவிடும் என்ற பல காரணங்களைக் கூறி போர் நிறுத்தத்தை சிங்கள அரசு தவிர்க்க முனைகின்றது. தமிழ் மக்களை அகதிகளாக்கிவிட்டு, தமிழரின் நிலமெங்கும் பரவலாக இராணுவ முகாம்களையும் வைத்துக்கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகின்றேன் என்று சந்திரிக்கா அரசு உறுதிமொழிகளை அள்ளி வீசுவது வேடிக்கையாகவே இருக்கின்றது.

அகதிகள் பிரச்சினை தீர்க்கப்படுவதில், போக்குவரத்துத் தடைகள் நீக்கப்படுவதில், தமிழ் மக்கள் தங்களது சொந்த மண்ணில் அச்சமின்றி உலாவுவதற்கு இடங்கொடுக்கப்படுவதில் இவ்வளவு தாமதமும் தயக்கமும் இருக்கின்றதெனில், எவ்விதம் சிக்கலான இந்த இனப்பிரச்சினைக்கு அரசு ஒரு தீர்வுத்திட்டத்தை வழங்கப்போகின்றது? யாழ் குடாநாடு மீதான முற்றுகையையும் தொடர்ந்து கொண்டு, இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தைகளிலும் அரசு ஈடுபட முனைவது, உண்மையில் அர்த்தமற்ற ஒன்றேயாகும்.

பேச்சுவார்த்தைக்குரிய உகந்த சூழலை உருவாக்கும் இந்த ஆரம்ப முயற்சிகளிலேயே அரசு இவ்விதம் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தொடங்கியிருப்பது ஒரு நல்ல அரசியல் அணுகு முறையாகாது என்றே கூறவேண்டும்.

அதேவேளை கடந்த ஒக்ரோபர் முற்பகுதியில், ஆனையிறவிலிருந்து ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை நடைபெற இருந்ததையும் அது இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதையும் சண்டே லீடர் (09-10-1994) செய்தித்தாள் விரிவான முறையில் பகிரங்கப்படுத்தியுள்ளது. "வானவில்" (**Rainbow**) என்ற பெயரில் இந்த நடவடிக்கை நடைபெற இருந்ததாம். இதில் 18,000 படைவீரர்கள் பங்குபற்றத் தயாராக ஆனையிறவுத் தளத்தில் குவிக்கப்பட்டிருந்தனராம். கிளிநொச்சியைக் கைப்பற்றுவது தான் அந்த இராணுவ நடவடிக்கையின் இலக்காக இருந்ததாம்!

இந்த "வானவில்" நடவடிக்கை நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. முன்னைய சனாதிபதிக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையிலிருந்த இழுபறிநிலையால் அது கைவிடப்பட்டதா அல்லது வேறு ஏதாவது இராணுவ காரணிகளால் அது கைவிடப்பட்டதா என்பது தெளிவாகவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் ஊகிக்கக் கூடியதாக உள்ளது. அந்த "வானவில்" நடவடிக்கையின் உடனடி இலக்கு "சண்டே லீடர்" கூறியது போல கிளிநொச்சியாக இருந்திருக்கலாம். ஆனால் சிங்களப் படைத்தலைமை வரைந்துள்ள ஏதோ ஒரு புதிய போர் முறைத்திட்டத்தின் (Military Strategy) ஒரு அங்கமாகவே அந்த இராணுவ நடவடிக்கை திட்டமிட்டிருக்கப் பட வேண்டும். அந்தப் புதிய போர்முறைத் திட்டத்தின்மூலம் செயலிழந்து போயுள்ள குடாநாடு மீதான முற்றுகைக்கு ஒரு புதிய வடிவம் கொடுக்க இராணுவத் தலைமை தீர்மானித்திருக்கலாம் என்ற ஊகம் எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

பூநகரி முகாமை அப்புறப்படுத்திப் பாதை திறக்க இராணுவத் தலைமை விடாப்பிடியாக மறுத்து வருவதைப் பார்க்கும் போது, மேற்குறித்த ஊகம் ஒரு கற்பனை போலத் தென்படமாட்டாது.

இராணுவத் தலைமை அத்தகையதொரு போரை விரும்பினாலும் புதிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதை அனுமதிக்கமாட்டார். அவர் ஒரு நிரந்தர சமாதானத்தையே விரும்புகின்றார் என்ற நம்பிக்கையை இன்று பெரும்பாலான மக்கள் கொண்டுள்ளனர். ஆனால் அந்த நம்பிக்கையைப் பலப்படுத்தும் உருப்படியான முயற்சிகளில் சந்திரிகா அம்மையார் இன்னமும் ஈடுபடவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

நடந்து முடிந்துள்ள சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலில் என்றும் இல்லாத அளவுக்கு 62 விழுக்காடு வாக்குகளைப் பெற்று சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாகியுள்ளார். இது அவரே எதிர்பார்த்திராத ஒரு வெற்றியாகும். அதுவும் காமினி திசநாயக்காவின் சாவைத் தொடர்ந்து ஐ. தே. கட்சிக்கு அனுதாப வாக்குகள் சென்றடைந்துவிடுமோ என்ற சந்தேக நிலையில் இருந்த அரசியல் நோக்கர்களுக்கும் இது ஒரு அதிர்ச்சியூட்டும் விடயமாகவே இருந்திருக்கும்.

போரை வெறுப்போரின் விகிதாசாரம் சிங்கள தேசத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவது உண்மையில் பாரிய ஒரு மாற்றம் தான். சிங்கள மக்களிடம் தோன்றியுள்ள இந்த மனமாற்றங்களுக்குக் காரணங்கள் எவை என்பதை ஆராய்ந்து பார்த்து உண்மைகளைத் தெரிந்து வைத்திருப்பது தமிழினத்திற்கு நன்மை பயக்கக் கூடியது.

பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து சிங்களத் தலைவர்களது கைகளிற்கு ஆட்சி அதிகாரம் கைமாறியதிலிருந்து (1994 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்) ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்களத் தலைவரும் அவர் சார்ந்த கட்சியும் தமிழினத்திற்கெதிராக இனவாதம் பேசுவதிலும் இன அழிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதிலுமே குறியாக இருந்து வந்துள்ளன என்பது வரலாறு. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் தமிழினத்துக்கெதிரான இனவாத செயற்பாடுகளே வாக்கு வேட்டைக்கான தூண்டில் இரையாக சிங்கள அரசியல்வாதிகளுக்கு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளன. இலங்கைத் தீவின் முதலாவது பிரதமர் **திரு. டி. எஸ். சேனநாயக்கா** ஆட்சிபீடம் ஏறியதும் முதற்செய்த வேலை, மலையகம் வாழ் தமிழ் மக்களது குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதுடன், கிழக்கு மாகாணத்தைச் சிங்களமயப்படுத்துவதற்காக அடியெடுத்துக் கொடுத்ததுதான்.

அடுத்து வந்த **பண்டாரநாயக்கா** அரசும் பேரினவாத வழிமுறையில் தான் செயற்பட்டது. தமிழினத்திற்கு பிராந்திய சபை முறையை வழங்குவதாக உறுதியளித்த அவர், இறுதியில் அதைக் கைவிட்டதும் சிங்கள மொழி மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்து தமிழினத்தை வேறு ஒருவழியால் ஒடுக்கியதும் தான் அவர் செய்த வேலை.

அவர் விட்ட இடத்திலிருந்து **திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா** தொடர்ந்தார். தமிழரின் கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றைப் பறித்ததுடன், அரசியலமைப்பு ரீதியாக தமிழினத்திற்கிருந்த ஒரேயொரு பாதுகாப்பையும் இடதுசாரி நண்பர்களுடன் இணைந்து பறித்தார். அடுத்து வந்த **ஜே. ஆர். ஜெயவர்தனா** அப்பட்டமாகவே இனவாதம் பேசி தமிழின அழிப்பில் பகிரங்கமாகவே இறங்கினார்.

**"அகதிகள் பிரச்சினை தீர்க்கப்படுவதில், போக்குவரத்துத் தடைகள் நீக்கப்படுவதில், தமிழ் மக்கள் தங்களது சொந்த மண்ணில் அச்சமின்றி உலாவுவதற்கு இடங்கொடுக்கப்படுவதில் இவ்வளவு தாமதமும் தயக்கமும் இருக்கின்றதெனில், எவ்விதம் சிக்கலான இந்த இனப்பிரச்சினைக்கு அரசு ஒரு தீர்வுத்திட்டத்தை வழங்கப்போகின்றது?"**

அரசியல்வாதிகளினது இனவாதப் பேச்சுக்களையும் இனஅழிப்புச் செயற்பாடுகளையும் சாதாரண சிங்கள மக்களும் அங்கீகரித்திருந்தார்கள் என்ற கசப்பான உண்மையையும் இங்கே சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

1994 தேர்தல்களில் பேரினவாதம் பேசி வாக்குத் திரட்ட முயன்ற **டி. பி. விஜேதுங்காவும் சிறிமா திசநாயக்காவும்** தோல்வியடைந்து விட்டனர் என்பது உண்மைதான். ஆனால் சிங்கள மக்களின் கோபத்திலிருந்து தப்புவதற்காக எழுதிய ஒரு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தவரும் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கி இலங்கைத் தீவைச் சிங்களமயமாக்க முயன்றவருமான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவை சிங்கள மக்கள் ஒரு தேசியத் தலைவனாகத்தான் மதித்தனர்; மதிக்கின்றனர்.

இது மட்டுமல்ல, 1977 இல் இனவெறியைக் கக்கிய ஜே. ஆர். 1982 சனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி பெற்றார் என்ற வரலாறும் 1983 இல் இனவெறிச் செயற்பாடுகளை ஊக்குவித்த அதே ஜே. ஆர். 1988 வரை சிங்கள மக்களின் தனிப்பெருந் தலைவனாக முடிசூட்டப்பட்டிருந்தார் என்ற வரலாறும் உதாசீனம் செய்யப்படக்கூடியவையல்ல.

தமிழர்களின் இல்லங்கள் தோறும் நடந்த சாவீடுகளும் துன்பச்சுமைகளும்தான் சிங்கள மக்களின் மனமாற்றத்திற்கு காரணம் அல்ல. அதற்குப் பதிலாக சிங்கள மக்களின் இல்லங்களில் நடந்த சாவீடுகளும் அவர்கள் சுமந்த துன்பங்களும்தான் அதற்குக் காரணம் என்ற கசப்பான உண்மையையும் உலகம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். சிங்கள அரசுகள் தமிழினம் மீது சுமத்திய இந்தப் போரின் எதிர் விளைவாக 7000 இற்கு மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். இன்னும் ஆயிரக்கணக்கில் படுகாயமடைந்து அங்கங்களை இழந்துள்ளனர்.

இவ்வளவு பெருந்தொகை உயிர்களை இழந்தும் கூட, சிங்களப் படைகளால் போரை வெல்ல முடியவில்லை. அத்துடன் போரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கை தொடர்ச்சியாக ஓங்கி வருவதால் போர் மூலமான வெற்றியில் சிங்கள மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். இதனால் வெறுப்பிற்கும் அவநம்பிக்கைக்குமுரிய ஒரு விடயமாகவே போர் மாறிவிட்டது.

**"உண்மையில் சிங்கள மக்களின் மனமாற்றத்திற்குக் காரணம், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலமும் தமிழ் மக்களின் உறுதிப்பாடும்தான்; எது எப்படியோ சிங்கள தேசத்தில் பிறந்துள்ள புதிய மனமாற்றத்தை விடுதலைப் புலிகள் இயக்கமும் வரவேற்கின்றது. ஆயினும் தமிழரின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண உதவும் வகையில், இந்த மனமாற்றம் ஆழமானதாக இருக்குமா என்பது கேள்விக்குறியாகவே இன்னமும் இருக்கின்றது".**

இந்த நிலையிலேயே, போரை நிறுத்தி தமிழரின் இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்ற மனமாற்றம் சாதாரண சிங்கள மக்களிடமும் ஏற்படத் தொடங்கியுள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மனமாற்றம் வெறும் அரசியல் விழிப்புணர்ச்சியால் ஏற்பட்டது என்று கூற விழைபவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்பவர்களாகவே இருப்பர். உண்மையில் சிங்கள மக்களின் மனமாற்றத்திற்கு காரணம், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவபலமும் தமிழீழ மக்களின் உறுதிப்பாடும் தான். எது எப்படியோ சிங்கள தேசத்தில் பிறந்துள்ள புதிய மனமாற்றத்தை விடுதலைப்புலிகள் இயக்கமும் வரவேற்கின்றது. ஆயினும் தமிழரின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உதவும் வகையில் இந்த மன மாற்றம் ஆழமானதாக இருக்குமா என்பது கேள்விக்குறியாகவே இன்னமும் இருக்கின்றது. ■

**நன்றி: 'விடுதலைப் புலிகள்'**

# பொறியியல்...

எனது கல்வி வளர்ச்சிக்கு யோகாசனப் பயிற்சியும் ஒரு காரணம். இப்பயிற்சியை நான் பெற்றுக்கொண்டதற்குப் பின்னர், ஞாபக சக்தி வளர்ந்தது. கிரகித்தல், அவதானித்தல் என்பன ஏற்பட்டதனால் படிப்பில் கூடுதல் கவனம் ஏற்பட்டது.

நான். க. பொ. த. சாதாரண தேர்வுக்குத் தோற்றும்வரை தனியார் கல்வியை நாடவில்லை. கல்லூரியிலேயே கல்வியைத் தொடர்ந்தேன். இந்தளவு தூரம் கல்வியில் கிடைத்த எனது வெற்றிக்கு கல்லூரி அதிபர் திரு. க. நடராசா மற்றும் ஆசிரியர் பெரிதும் உதவினர்" என்றார்.

காட்லிக் கல்லூரி அதிபர் திரு. க. நடராசா அவர்களை கல்லூரி அலுவலகத்தில் வைத்து சந்தித்து, அகில இலங்கை ரீதியில் கணிதத்துறையில் இரண்டாவது இடத்தைப்பெற்ற மாணவன் இராஜேந்திரம் முகுந்தன் பற்றிக் கேட்ட போது:

"எமது கல்லூரிக்கு புகழை ஏற்படுத்திய இந்த மாணவன் நல்ல திறமைசாலி; ஆழமாகச் சிந்திக்கின்ற திறமையும் கொண்டவர். இவர் கல்லூரிக்கு ஒழுங்காக வருவது மட்டும் அல்ல, பாடங்களையும் தவறாமல் கிரகித்துக்கொள்வார். மற்றைய மாணவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தார்.

இவர் ஆங்கில அறிவு உள்ளவர். ஆங்கிலப் புத்தகங்களைப் படிப்பதில் அதிக அக்கறைகொண்டவர். உடற்பயிற்சியில் ஆர்வம் குறைந்திருந்தாலும் சதுரங்க விளையாட்டில் ஒரு வீரர்.

இவரிடத்தில் அமைதி, ஒழுக்கம், நன்னடத்தை என்பன முதன்மையான நல்ல குணாதிசயங்களாக இருந்தன. மாணவ முதல்வராகவும் இருந்தார். பாடசாலை ரீதியாக நடைபெற்ற ஆங்கிலப் போட்டியிலும் பரிசு பெற்றிருந்தார்.

இக்கல்லூரி இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட போதிலும் கல்வித்தரம் தளர்ச்சி அடையவில்லை. ஆசிரியர்கள், மாணவர்களுக்காகத் தங்களைத் தியாகம் செய்தவர்கள். மாணவர்கள் கல்வி மீது கொண்ட அன்பினால் இக்கல்லூரியின் கல்வித்தரம் மேலும் உயர்ந்துள்ளது.

இக்கல்லூரியில் கணிதத்துறையில் மாணவர்கள் தகுதிபெறுவது குறைவானாலும், **கணித** பாடத்தில் இக்கல்லூரி உச்சப் புள்ளியைப் பெற்றுள்ளது. மாவட்ட மட்டத்தில் முதல் பதினொரு இடங்களில் கணிதத்தில் இக்கல்லூரி ஐந்து இடங்களைப் பெற்றிருக்கின்றது.

ஆண்டுதோறும் இக்கல்லூரியில் இருந்து வர்த்தகத் துறைக்கு 90 விழுக்காடு (வீதம்) மாணவர்களும் கணிதத்துறையில் 65 விழுக்காடு மாணவர்களும் உயிரியல் துறையில் 85 விழுக்காடு மாணவர்களும் தகுதிபெற்றுவருகின்றனர்.

இம்மாணவனின் தந்தையாரும் ஒரு பொறியியலாளர் இவரும் தந்தையைப்போன்று உயர்வடைய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்" என்றார். ■

# இனப்பிரச்சினையும் இந்திய அரசும்;

**இனப்பிரச்சினை தொடர்பாக இன்று இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? இன்று இது, பலராலும் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்றாகவுள்ளது. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காணப்போவதாகச் சிறீலங்கா அரசு அறிவித்துள்ள நிலையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை இதுவரை எதிர்த்து வந்த இந்திய அரசு, இதனை எவ்வாறு பார்க்கின்றது -அணுகுகின்றது என்பது முக்கியமாகின்றது.**

வெளிப்படையான பேச்சில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். ஆனால் இந்தியாவைப் பொறுத்து ஐக்கிய இலங்கைக்குட்பட்டதான தீர்வு என்பதே அதன் விருப்பாகும். ஆனால் இந்தியா இதுவரை மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளை உற்று நோக்கின், 1987 ஆம் ஆண்டில் உருவான இந்திய -சிறீலங்கா சமாதான உடன்பாட்டிற்கு உட்பட்டதாகவே சமாதானத் தீர்வு இருக்க வேண்டும் என்பதும், இதில் விடுதலைப் புலிகள் இயக்கம் புறந்தள்ளி வைக்கப்பட வேண்டும் என்பதுவுமே அதன் விருப்பமாக இருந்து வந்துள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு ஆட்சிக்கட்டில் ஏறியது. மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின்படி, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதான ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு



காணப்பட வேண்டும். ஆகையினால், விடுதலைப்புலிகளுடன் ஏதோ ஒருவகையில் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு உள்ள்தெனலாம். இதில் பிரச்சினைக்குத்தீர்வு என்பது இரண்டாம் கட்ட நிலையே ஆகும்.

இந்த வகையில் தான், விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முன்னர், "இந்தியாவின் நிலைப்பாடு" முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதன் அடிப்படையில் சிறீலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையும், இனப் பிரச்சினை விவகாரத்தால் தீர்மானிக்கப்படும் அம்சமாக மாறியது.

இதேசமயம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசும், இந்திய அரசும் மிக நெருக்கமான உறவைப் பேணுவதற்கான அடித்தளத்தை இடுவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றன. இது சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கடந்த கால ஆட்சியின் போதும் வெளியுறவுக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சமாக இருப்பினும், தற்போதைய நெருக்கமானது புதிய அரசியற் சூழ்நிலையை அனுசரித்த கொள்கையே ஆகும்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசும், இறுதி நேரத்தில் இந்தியாவிடம் பூரணமாக சரணாகதி அடைந்ததாயினும், முன்னர்நடந்து முடிந்த கசப்பான அனுபவங்கள், நெருடல்களாகவே இருந்து வந்தன. இந்நிலையில், சிறியளவு இடைவெளிகளும், சந்தேகங்களும் இருக்கத்தான் செய்தன. ஆனால், பொ. ஐ. மு. அரசோ அவ்வாறன நெருடல்கள், இடைவெளிகள் கூட ஏற்படாமல் இந்தியாவுடன் "நட்புறவை" இறுக்கமான நிலையிலேயே வைத்துக்கொள்ள தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மிகப்பெரிய அண்டை நாட்டுடன் சிறிய நாட்டின் நட்புறவென்பது, பொதுவாகவே 'பணிந்து போதல்' என்பதன் வேறுபதமே ஆகும். இந்த வகையில், இந்தியாவின் மேலாதிக்கத்தை சிறீலங்கா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்றே கூறமுடியும்.

இதற்கு ஒரு உதாரணமாக, இரணவிலவில் அமையவுள்ள அமெரிக்கா வானொலி ஒலிபரப்பு நிலையம் -'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' பற்றி இந்தியாவுடன் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் உரையாடியதாகும். இது ஒரு வகையில் சிறீலங்காவின் வெளியுறவுக் கொள்கையினையே இந்தியாவிடம் கொடுத்தது போன்றதாகும்.

இந்த வகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் இந்திய விஜயம் தொடர்பான விவகாரமும் நோக்கப்பட வேண்டியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா பதவிப் பிரமாணம் செய்த பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், தனது முதல் வெளிநாட்டு விஜயம் இந்தியாவிற்கே என நாசுக்காகத் தெரிவித்திருப்பினும், அது எவ்வேளையிலுமோ மிகவிரைவிலோ மேற்கொள்ளப்படலாம் என்று தெரிவிக்கவில்லை.

ஆனால், தற்பொழுது இடம் பெறும் நடவடிக்கைகள், வெளியாகும் செய்திகள் சந்திரிகா குமாரதுங்கா விரைவிலேயே இந்தியா செல்லத்திட்டமிட்டிருந்தார் என்பதை வெளிக்காட்டுபவையாகவே இருந்தன. இது தொடர்பான தகவல்களும் முடிந்தளவில் மறைக்கப்படுவதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டன எனலாம்.

> **"பொ. ஐ. முன்னணி இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை என்பதோடு, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுயாட்சியுடன்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்குமா என்ற கேள்வியும் பலமாகவே உள்ளது."**

ஆனால், இன்று இதுகுறித்த விடயங்கள் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில், சந்திரிகா குமாரதுங்கா ஏப்ரலில் நடைபெறவுள்ள "சார்க்" மாநாட்டிற்கு முன்னதாகவே இந்தியா செல்லலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இது இந்திய -சிறீலங்கா உறவு உயர் மட்ட ரீதியில், மிக ஒருமைப்பாட்டுடன் அந்நியோன்னியத்துடன் பேணப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டும் முக்கியமானதொரு குறியீடாகும்.

இந்த வகையில், இனப்பிரச்சினை தொடர்பான விடயமும் - குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விடயமும் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் விஜயத்தின்போது இந்தியாவுடன் தீவிரமாக அலசப்பட்டிருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இவ்விவகாரத்தை சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரும், இந்தியத் தலைவர்களும் மிக ஆழமாக மனம்விட்டு ஆராய்ந்தார்கள் என்பதை, அவர்கள் தற்பொழுது வெளியிட்டுக் கொண்டிருக்கும் அறிவிப்புக்களே வெளிக்காட்டுபவையாகவுள்ளன.



இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர்.

> **"சந்திரிகா அரசு, இந்தியாவுடன் 'நட்புறவை' இறுக்கமான நிலையிலேயே வைத்துக்கொள்ள தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது; இந்த 'நட்பு' ரீதியிலான கீழ்ப்படிவிற்காகவே இந்தியா, இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா அரசை சற்று நகர்த்துவதற்கு இடம்கொடுத்துள்ளதென்று கூறப்படுகின்றது."**

இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய உயர் தலைவர்களுடன் பேச்சு நடத்திய சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் வெளியிடும் தகவல்களின் படி, இந்தியா விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எவ்வித முட்டுக்கட்டையும் போடவில்லை என வலியுறுத்தப்படுகின்றது. "விடு

## சந்திரிகாவிற்கு எதுவரை அனுமதி

தலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்ததை இந்தியப் பிரதமர் வரவேற்றுள்ளார்; பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டும் என அவர் விரும்புகிறார், இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதானது எமது பிரச்சினை தீர்வது போன்றது" என இந்தியப் பிரதமர் தன்னிடம் தெரிவித்ததாக லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறாக, கதிர்காமர் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா காட்டும் நல்லெண்ணத்தை வெளிப்படையாகக் கூறிக்கொண்டபோதிலும், இந்தியா இது குறித்து பெரிதாகப் பேசுவதாகத் தெரியவில்லை.

இது நரசிம்மராவின் வழமையான மௌனமா? அன்றி, இந்திய இராணுவம் இலங்கை மண்ணை விட்டு வெளியேறிய பின்னர் கடைப்பிடித்து வரும் மௌனத்தின் தொடரா? எனவும் தெரியவில்லை.

ஆனால், சிறீலங்கா மிக நெருங்கிய நட்புப் பாராட்டும் நிலையில், இந்திய அரசும் இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறீலங்கா அரசின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடப் போவதில்லை. என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கின்றது போல் தெரிகின்றது. ஆனால், இதற்காக சிறீலங்கா இந்தியாவிற்கு வழங்கிய உறுதிமொழிகள் என்ன என்பது முக்கியமான விடயமாகவே இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்து இனப்பிரச்சினை விவகாரத்தில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று, இந்திய மாநிலங்களின் உரிமைகளுக்கு அப்பாற்பட்ட அளவில் அல்லாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பது. அடுத்தது, தனித்துவமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் ஏனைய குழுக்களுடனும் பேச்சு நடத்த வேண்டும் என்பதாகும்.

ஒருவகையில் கூறப்போனால் இந்திய -சிறீலங்கா சமாதான உடன்பாட்டிற்கு உட்பட்டதான தீர்வு ஒன்று காணப்பட்டால் போதுமானது என்பதாகும். இதற்கு ஆதரவு வழங்க இந்தியாவும் தயாராகவே இருந்து உள்ளது.

இந்தவகையில் சந்திரிகா அரசும், இந்தியாவிற்கான உறுதிமொழிகளையும் வழங்குவது இலகுவானதாகவே இருந்திருக்கும். ஏனெனில், பொ. ஐ. முன்னணி இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை என்பதோடு வடக்கு -கிழக்கு இணைந்த தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சுயாட்சியுடன் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமா என்ற கேள்வியும் பலமாகவே உள்ளது. ஏனெனில் இனப் பிரச்சினைக்கு சிங்களவர் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வே முன்வைக்கப்படும் என்பது சந்திரிகா அரசின் அறிவிப்பாகும்.

இந்தவகையில் இந்தியாவுடன் ஒரு உடன்பாடு காண்பது பெரும் சிக்கலுக்குரியதொன்றாக இருக்க மாட்டாது. விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை இந்திய அரசிற்கு விருப்பமளிக்கும் ஒன்றாக இருக்க மாட்டாது என்றாலும், இந்தியா இவ்விடயத்தில் சிறிது விட்டுக் கொடுப்புக்கு தயாராக வந்திருக்க முடியும்.

ஆனால், விடுதலைப்புலிகள் விவகாரத்தில் இந்தியாவின் கொள்கைகளில் பெரும் மாற்றம் எவையும் ஏற்பட்டுள்ளதா என்றால் அதற்கு இல்லை என்பதற்கான ஆதாரங்களே உள்ளன. இதற்கு "முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியா அனுப்புமாறு சிறீலங்கா அரசை இந்திய அரசு கேட்க உள்ளது" என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா கூறியிருப்பது சிறந்த உதாரணமாகும்.

இந்தவகையில் பார்க்கும் போது, இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா அரசின் "நட்பு" ரீதியான கீழ்ப்படிவிற்காக அதனை சற்று நகர்வதற்கு இடம் கொடுத்துள்ளதென்றே கூறவேண்டும். ஆனால், இது எல்லைக்கு உட்பட்டது என்றே கருத இடமுண்டு. இது சிறீலங்காவிற்கு போதுமானதும்கூட.

ஆனால், இது சிறீலங்கா அரசிற்குத் தெரியாத விடயமுமல்ல. இந்தியாவுடன் சிறீலங்கா அரசும் கூட்டாக மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கை என்று கூட வேண்டுமானால் கூறலாம். ஆகையால் இது சிறீலங்காவிற்குச் சங்கடம் அளிக்கும் விடயமாகவும் இருக்க மாட்டாது. ஏனெனில், சந்திரிகா அரசும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தெளிவாகக் கொண்டிருக்கவில்லை என்பது மட்டுமல்ல, இராணுவ அழுத்தத்திற்கும் பணிந்து செயற்படுவதால், இந்தியாவின் விருப்பிற்கும் மேலாகக் கூடுதலான ஒரு சுயாட்சித் திட்டத்தை முன்வைக்கவோ அதன் மூலம், விடுதலைப் புலிகளுடனான நெருக்கம் வலுவடையும் என்றோ எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை.

**தமிழீழத்திலிருந்து ஜெயராஜ்**

அத்தோடு உலகின் பல பாகங்களிலும் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்படவேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ள நிலையில், அதற்கு முட்டுக்கட்டைபோட்டு குழப்புவதன் மூலம் தனக்குக் கெட்ட பெயரை சம்பாதிக்க இந்தியா விரும்பாமல் இருக்கவும் கூடும். ஆனால் அமைச்சர் பட்டியாவின் அறிவிப்பானது இவை யாவற்றையும் மீறி இன்ப்பிரச்சினையில் கடிவாளத்தை தனது கையில் எப்பொழுதும் வைத்திருக்க இந்தியா விரும்புவதையே காட்டுகின்றது. இதன் மூலம் சிறீலங்கா அரசின் ஓட்டம் இந்தியாவின் வட்டத்திற்குட்பட்டதாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கத்தேவையில்லை. ■

## இலண்டனில்


# தமிழீழ பொருண்மிய ~ விஞ்ஞான கண்காட்சி




தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தந்தை, கேணல் கிட்டு நினைவாக இலண்டன் வோல் தம்ஸ்ரோ நகர மண்டபத்தில் 14. 01. 1995 சனிக்கிழமையன்று பி. ப 3 மணி தொடக்கம் -பி. ப 5. 45 மணி வரை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (பிரித்தானியக் கிளை) தமிழீழ பொருண்மிய -விஞ்ஞானக் கண்காட்சி ஒன்றை நடாத்தியது.

தமிழீழத்தின் சுதந்திரமான தற்காப்பு பொருண்மிய மேம்பாட்டுக்காக, எமது தேசத்தின் மூலவளங்களையும், எம்மக்களின் ஆற்றல்களையும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட தமிழீழ ஆய்வு நிறுவனமே (ROOT), காலவோட்டத்தில் தேசத்தின் தேவை கருதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (Tamil Eelam Economic Development Organisation -TEEDOR) ஆக விரிவுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. "எமது தேசம் விடுதலை அடையும் நாளில், எமது மக்களின் சமூக -பொருண்மியமும் விடுதலை பெற வேண்டும்" என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் உயரிய நோக்கிற்கிணங்க, கேணல் கிட்டுவினால் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த போதே இவ் அமைப்புக்கு அத்திவாரமிடப்பட்டது. அதனால் இவ்வமைப்பின் தந்தையாகக் கருதப்படும் கேணல் கிட்டு அவர்களின், இரண்டாம் ஆண்டு வீரவணக்க விழாவின் முன்னோட்டக் காட்சியாக இக்கண்காட்சி இடம் பெற்றமை சாலப் பொருத்தமானதாக இருந்ததுடன், பார்வையாளரின் பாராட்டுதலையும் பெற்றுக்கொண்டது.

எமது மக்களின் சமூக, பொருண்மிய மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு த. பொ. மே. நிறுவனம் விவசாயம், கடற்றொழில், விலங்கு வேளாண்மை, கிராமிய உற்பத்தி, பனை - தென்னை வள அபிவிருத்தி, கைத்தொழில், சத்தி, உணவு பதனிடுதல், வர்த்தகம், உட்கட்டுமானம் (நகரத் திட்டமிடல், போக்குவரத்து, தொலைத் தொடர்பு, விமான நிலையங்கள், கடற்போக்குவரத்தும் -துறைமுகங்களும்) ஆகிய பிரிவுகளாக விரிந்து சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்



களுடன், தொலைநோக்கில் தற்காப்பு பொருண்மிய நடவடிக்கைகளையும் அடித்தளமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதனை சிறீலங்கா தேசத்தவர்கள் மட்டுமல்ல, தமிழீழம் சென்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள், ஆய்வாளர்கள் கூட பாராட்டியுள்ளனர்.

இதன் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு துணைபோகக்கூடிய நம்மவர்களில் பலர் அனுபவத் தேர்ச்சி பெற்றோர், பல்கலைக் கழக மாணவர்கள், பட்டதாரிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், பல்துறை சார்ந்த கல்விமான்கள் ஆகியோர் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்துறைசார் வல்லுநர்களின் சிந்தனைகளும், ஆற்றல்களும், உழைப்பும் எமது தேசத்தை நோக்கி நகர்த்தப்பட வேண்டும். இத்தகைய உயரிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இவ் விஞ்ஞானக் கண்காட்சி அமைக்கப்பட்டது. இக் கண்காட்சியில் இடம்பெற்றவை இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன.

பிரித்தானியா, அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளின் அனுபவங்களை தமிழீழத்தின் மூலவள ஆற்றலுக்கேற்ப எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை, கண்காட்சியில் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் வெளிப்படுத்தி நின்றன. குறிப்பாக, தமிழீழத்தின் சக்தி, கல்வி, உட்கட்டுமானம் ஆகியவற்றிக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, இவை ஒவ்வொன்றுக்கும் விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் அளிக்கப்பட்டன. அத்துடன் இவை படவிளக்கங்களுடன் 3 கணனிகள் மூலம் பார்வையாளர்கள் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில், காண்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சக்திப் பகுதியினர், தமிழீழ சக்திவளத்தினை மீளப்பெறக் கூடியவை, மீளப் பெற முடியாதவை என இருவகைப்படுத்தி தமது ஆக்கங்களைக் காட்சிக்கு வைத்திருந்தனர். எமது தேசம் கடல் வளமும், காற்றுவளமும், சூரிய ஒளியும் நிறைந்தது. இவற்றைப் பயன்படுத்தி சக்தியைப் பெறுவதற்கான விஞ்ஞான ரீதியான அணுகுமுறைகள் எப்படி அமையலாம் என்பதற்குச் சிறப்பான முறையில் விளக்கம் அளிக்கப்பட்டு, குறிப்பாக சூரியசக்தி (SOLAR POWER) யைப் பயன்படுத்தி எவ்வாறு மின்சாரத்தை வழங்கலாம் என்பதை மாதிரிஅமைப்புக்கள் மூலம் செயன்முறைப்படுத்திக் காட்டினர். உயிரியல் வாயு (BIO GAS) மூலம் சக்தியைப் பெறும் வழிவகைகளும் விளக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒரு கணனி மூலம் தமிழீழத்தின் விவசாயக் கோலங்கள், உணவு பதனிடல், பனை வள அபிவிருத்தி, தமிழீழக் கைத்தொழில் கோலங்கள், த. - பொ. மே. நிறுவனத்தின் தாயகத்து கண்காட்சிகள் என்பன காண்பிக்கப்பட்டன. இன்னொரு கணனி மூலம் உட்கட்டு மானங்களான, தமிழீழ நகரத்திட்டமிடல், போக்குவரத்து, விமான நிலையங்களுக்கான திட்டமிடல், கடற் போக்குவரத்து, துறைமுகங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன. மூன்றாவது கணனிமூலம் மாதிரி அமைப்பாக உருவகப்படுத்தப்பட்ட தமிழீழ தொலைத் தொடர்பு அமைப்பு காண்பிக்கப்பட்டது. கண்காட்சியில் பங்கெடுத்த தொலைத் தொடர்பு பகுதியினர் தமிழீழ மாதிரி உருவப் படத்திலேயே தமிழீழ நகரங்களைக் குறிப்பிட்டு, எங்கெங்கே உள்ளூர் தொலைத்தொடர்பு வசதிகளும், எங்கெங்கே சர்வதேசத் தொலைத்தொடர்பு வசதிகளும் அமைக்கப்படவுள்ளன என்பதை தெளிவுபடுத்தினர்.

மாணவர்களுக்கும், தேசத்திற்கும் பயன்படக்கூடிய ஆக்கமுறையான கல்வியைக் கற்பித்தல் மூலம், அந்நிய நாடுகளுக்கு கல்விக்காகவோ, தொழில் வாய்ப்புக்களுக்காகவோ தமிழீழ மாணவர்கள் போகத் தேவையில்லை என்பதையும் கண்காட்சியில் பங்கெடுத்த கல்விப் பகுதியினர் தெளிவுபடுத்தினர்.


சுருங்கக் கூறின் பரீட்சார்த்தகரமாக இடம்பெற்ற மேற்படி கண்காட்சி, எமது தேசம் எத்தனை வளமுடையது என்பதையும் அதனைப் பயன்படுத்த த. - பொ. மே. நிறுவனம் எவ்வாறு பாடுபட்டு வருகின்றது என்பதையும் தமிழீழத்தின் சமூக - பொருண்மிய மேம்பாட்டிற்காக அந்நிய நாடுகளில் வதியும் எம்மவர் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பதையும் வெளிப்படுத்தி நின்றதெனக் கூறுவதில் தவறில்லை. ■

---

## இலண்டனில்

# கேணல் கிட்டுவினதும், அவருடன் காவியமான ஒன்பது வீர முத்துக்களினதும்

## இரண்டாவது வீரவணக்க விழா



**14. 01. 95** சனிக்கிழமையன்று, இலண்டன் வோல் தம்ஸ்ரோ நகர மண்டபத்தில் மாலை 6. 15 மணியளவில், மேற்படி வீரவணக்க விழா, தமிழீழத் தேசியக் கொடியேற்றத்துடன் தொடக்கி வைக்கப்பட்டது. மண்டப வாசலில் வைக்கப்பட்டிருந்த கிட்டண்ணாவின் படத்திற்கு அனைத்து மக்களும் மலர்தூவி வணக்கம் செலுத்தினர். அருகே கிட்டண்ணாவினால் வரையப்பட்ட 29 ஓவியங்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அவ் ஓவியங்கள் அனைத்தும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தினதும், அதன் மீது கிட்டண்ணா கொண்டிருந்த ஈடுபாட்டையும் பிரதிபலிப்பனவாக அமைந்தன. வர்ண மின்விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்ட தமிழீழத் தேச உருவப் படம், மண்டப அரங்கத்தின் அருகே எழுச்சியுடன் காட்சி தர, அதன் பக்கத்தில் தேசியக் கொடிக் கம்பம் கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்தது. . "ஏறுது பார் கொடி ஏறுது பார்..." என்ற கொடி வணக்கப்பாடல் ஒலிக்க,



மண்டபத்தில் இருந்த அனைத்து மக்களும் மரியாதை வணக்கம் செலுத்தி நிற்க தேசியக் கொடியை செல்வி. மான் அவர்கள் ஏற்றி வைத்தார்.

கொடி வணக்கத்தைத் தொடர்ந்து இரு மணித்துளி அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. அமைதி வணக்கத்திற்காக சாய்ந்த தலைகள் விழா நிகழ்வு காண நிமிர்ந்து கொண்டன.

விழாவின் முதல் நிகழ்வாக, "தியாகத்தில் மாவீரன் கிட்டு" எனும் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது. இதனை திருமதி ராகினி இராஜகோபால் அவர்களின் மாணவிகள் வழங்கினர். இவர்கள் "நெஞ்சிலே இரத்தம் கொட்டும்..." எனும் பாடலுக்கு, நீல நிற ஆடைகளுடன் உணர்வுபூர்வமாக நடனமாடிய காட்சி, கிட்டண்ணா கடலில் பயணம் செய்ததை நினைவிற்குக் கொண்டு வந்ததுடன், இந்திய அரசின் துரோகத்தையும் வெளிப்படுத்தி நின்றது.

தொடர்ந்து சட்டவாளர் சிறிஸ்கந்தராசா அவர்களின் 'K-ITTU -The Inimitable Hero' எனும் ஆங்கில உரை இடம்பெற்றது. இவர் தமது உரையில், கிட்டண்ணாவின் ஆளுமையை விளக்கியதுடன், அந்நிய நாடுகளில் தமிழ்மொழி, தமிழர் பண்பாடு ஆகியவற்றை மறந்து வாழுகின்ற எம்மக்களின் சிந்தனைக்கு, "உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது...." "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் யாதுமிலை..." எனும் வரிகளையும் விட்டுச் சென்றார். தமிழ் வாசிக்கத் தெரியாது, எழுதத் தெரியாது, பேசத் தெரியாது என்பதால் நாம் ஊமையராய், செவிடராய், குருடராய் நிற்கின்றோம் எனவும் தெளிவுபடுத்தினார்.

அடுத்த நிகழ்வாக, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களால் இயற்றப்பட்ட "மாங்கிளியும் மரங்கொத்தியும் ..." என்ற பாடலுக்கு திருமதி ராகினி இராசகோபாலின் மாணவிகள் சிறப்பான அபிநயத்துடன் நடனம் ஆடினர். இவர்களில் இருவர் கிளியாகவும், மரங்கொத்தியாகவும் வந்து அபிநயம் காட்டிநிற்க, ஏனைய மூவரும் தாயகத்தை விட்டுச்சென்று இடம் பெயர்ந்து வாழும் அடிமைத்தனமான வாழ்வின் அவலத்தை வெளிப்படுத்தி நின்றனர். தொடர்ந்தும் திருமதி ராகினி இராசகோபாலின் மாணவிகளில் ஒருவரான செல்வி சாமினி இராசகோபால் "எரியும் நெருப்பில் உயிர்விட்டு தமிழ் ஈழம் காத்தவன் கிட்டு..." என்ற பாடலுக்கு அபிநயம் காட்டி நடனமாடினார்.

அடுத்த நிகழ்வாக, "காவிய நாயகன் கிட்டு" என்னும் தலைப்பில் கரவைக் கவி அவர்கள், கிட்டண்ணா யாழ் தளபதியாகவிருந்த போது காட்டிய வீரத்

தொடர்ச்சி 17 ஆம் பக்கம்...

### யேர்மனியில்

# தளபதி கேணல் கிட்டு அவர்களின் நினைவு நாள்



*21. 01. 1995 (சனிக்கிழமை) அன்று DORTMUND நகரின் MUNSTER STR இல் அமைந்த ALBRECHT -BRINKMANN -SC-HULE மண்டபத்தில் தளபதி கேணல் கிட்டு அவர்களை நினைவுகூர்ந்து, கலை நிகழ்ச்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யேர்மன் கிளை கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தியது.*

*காலையில் கட்டுரை, பேச்சு, கவிதை, ஓவியம் ஆகிய துறைகளில் போட்டிகள் நடாத்தப்பட்டு, மாலை நடந்த கலை நிகழ்ச்சிகளின்போது பரிசளிப்பும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.*

*விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தில் இருந்து வருகை தந்திருந்த அனைத்துலகப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள், பரிசில்களை வழங்கியதோடு சிறப்புச் சொற்பொழிவும் நிகழ்த்தினார்.*

*"நமது மண்ணை நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் என்பது ஒரு முதன்மையான விடயம்; அந்த விடயத்தில் முதல் அடி எடுத்து வைத்தவர் கேணல் கிட்டு.*




*நமது தாயக பூமியை மீட்டெடுத்தல், அங்கு குடிசார் நிருவாகத்தை நிறுவுதல், அந்த நிலப்பரப்பை எங்களுடைய பாதுகாப்புக்குரிய இடமாக மாற்றுதல், எதிரியை முடக்குதல் ஆகிய விடயங்களில் கேணல் கிட்டு ஒரு வரலாற்றுச் சாதனையைச் செய்தவர்.*

*அப்படி எம்மால் மீட்டெடுக்கப்பட்ட எமது பூமிக்கு, அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள பல்வேறு செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டார். எமது போராட்டத்தை எம்மவர் மத்தியில் மட்டுமல்ல, வெளிநாட்டவர் மத்தியிலும் விளக்க அவர் பாடுபட்டார்.*

*அனைத்துலகச் சூழலுக்கு ஏற்ப, வல்லரசுகளின் செயல்களுக்குத் தக்கவிதமாக, ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாட்டிற்கு ஏற்றவகையில் எங்களுக்கு ஒரு வெளிநாட்டுக் கொள்கையைத் தயாரிக்கும் நோக்கோடு அவர் நாட்டிற்குப் பயணமானார்" என, திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் குறிப்பிட்டார்.*

*பரிசு பெற்றவர்களின் ஆக்கங்கள் மேடையேற்றப்பட்டன. 'தாயகத்தாகம் தணியவில்லை', 'உரிமைக்காக' ஆகிய நடனத் தொகுப்புக்களும் 'தளபதி கிட்டு கதை' என்ற கதாப்பிரசங்கமும் கலைப் படைப்புக்களாக அமைந்தன. நடனங்கள் உருக்கமாகவும், கதாப்பிரசங்கம் பாராட்டுப் பெறும் வகையிலும் அமைந்தன.*

*தளபதி கேணல் கிட்டு அவர்களைப் பற்றிய நினைவுகளைச் சுமந்து, விடுதலை உணர்வுகளுடன் வருகை தந்திருந்த ஆயிரத்திற்கும் அதிகமான தமிழீழ அபிமானிகளை, விடுதலைக் கனலுக்குள் நிறுத்திய நிகழ்ச்சியாக இது அமைந்தது.* ■



### சுவிசில்

# தளபதி கேணல் கிட்டுவினதும் சக 9 போராளிகளினதும் இரண்டாவது ஞாபகார்த்த எழுச்சி விழா

பாக்குநீரிணை பெருங்கடற் பரப்பில் இந்திய அரசின் வல்லாதிக்க துரோகச் சதிக்குப் பலியான தளபதி கேணல் கிட்டுவினதும் மற்றும் ஒன்பது போராளிகளினதும் இரண்டாவது ஞாபகார்த்த எழுச்சிவிழா சுவிசில் லுசேர்ன் (Luzern) மாநிலத்தில் 15. 01. 1995 இல் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சுவிசின் பல பாகங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான தமிழீழ தேசபக்த மக்கள் வருகை தந்திருந்தனர்.

இவ்விழாவில் தொடக்க நிகழ்வுகளாக தமிழீழத் தேசியக் கொடியேற்றலும் அமைதிவணக்கமும் இடம்பெற்றதைத் தொடர்ந்து, தளபதி கேணல் கிட்டுவிற்குப் பிடித்த பறைமேளத்துடன் இசை தொடங்க "வந்தது இந்திய இராணுவம்..." என்ற பாடலை விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் பாடினார்கள். இங்கு நாம் பல காலமாகக் கண்டிராத பறைமேளத்தைக் காணக் கூடியதாக இருந்தது. இதையடுத்து தீப, மலர் வணக்கம் செலுத்தும் வைபவம் இடம்பெற்றது. வரவேற்புரை நிகழ்த்திய திரு. அன்ரன் பொன்ராஜாவைத் தொடர்ந்து வினோத உடைப் போட்டி நடந்தது. இது சந்திரிகா -கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் சந்தித்து உரையாடுவதாகவும் அன்னை பூபதியாகவும் அகத்தியராகவும் தமிழீழத்தில் அகதிகளாகவும் அமைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் எழுச்சிக் கானங்கள் இசைத்தனர். இப்பாடல்களில் பெரும்பாலானவை கேணல் கிட்டுவைப் பற்றியதாக அமைந்தது. இதையடுத்து பேச்சு, கவிதை என்பனவும் லூசேர்ண் -சூரிச் தமிழ் சிறுவர் பாடசாலை மாணவிகளின் நடனங்களும் இடம்பெற்றன. மேலும் சுவிசில் முதன்முறையாக ஒரு புதுமையை கலை, பண்பாட்டுக் கழகத்தினர் படைத்தனர். அதாவது ஒரு புகைப்படமானது, எடுக்கப்பட்டதற்கு 30 வினாடிகளிற்கு முன் அது எத்தகைய செயற்பாட்டினை அல்லது காட்சியினை கொண்டிருந்திருக்கும் என்பதை செய்து காட்டினார்கள். அக்காட்சிகள் இவ்வாறு அமைந்தன. போராட்ட சூழ்நிலையில் தாம்பட்ட கஸ்டங்கள், பூநகரி முகாம் தாக்கப்படும்போது அவர்கள் ஒவ்வொருவரினதும் வெளிப்பாடு, வீரமரணமடைந்த போராளியின் பூதவுடல் வரும்போது அவர்களின் நிலை என வித்தியாசமாக புகைப்பட நாடகமாக அமைந்திருந்தது. இதற்குப் பின்னணி இசை வழங்கிய யாழ். சீலன் அவர்கள் அதை இன்னும் மெருகேற்றினார்.



இவற்றினைத் தொடர்ந்து பேர்ண் தமிழர் கலை, பண்பாட்டு மன்ற மாணவிகளின் நடனங்களும் கிராமியப் பாடல் நிகழ்ச்சியும் மழலைப்பேச்சும் அமைந்தது. இடைவேளையினைத் தொடர்ந்து திருமதி தாமரைச்செல்வனின் நடனமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரனின் சிறப்புரையும் இடம்பெற்றன. தொடர்ந்து பேர்ண் தமிழர் கலை, பண்பாட்டு மன்றத்தினரின் 'தேசக்காற்று' என்ற நாடகம் மேடையேறியதைத் தொடர்ந்து தளபதி கேணல் கிட்டு ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு யாழ். சீலன் அவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். இதையடுத்து கலைஞர்கள் அனைவரும் மேடைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழத் தேசியக் கொடியினை திரு. ந. முரளிதரன் இறக்கினார். கலைஞர்கள் யாவரும் சேர்ந்து "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்றே நீ கூறு" என்ற பாடலைப் பாட, பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டி அப்பாடலைப்பாட விழா முடிவுற்றது.

*16. 01. 1995 அன்று சுவிசில் சியோன் (Sion) மாநிலத்திலும் அம்மாநில மக்களால் தளபதி கேணல் கிட்டுவினதும் மற்றும் ஒன்பது போராளிகளினதும் இரண்டாம் ஆண்டு ஞாபகார்த்தக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.* ■

# சந்திரிகா ஜே. ஆரைச் சந்தித்தார் இந்திய உறவிலும் புதிய உற்சாகம்

*சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்கா, சிறீலங்காவின் முன்னாள் சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளார்.*

*சந்திரிகா தனது நேரமீதம் இல்லாத நேர அட்டவணைக்கு நடுவிலும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை அவரது வாசத்தலத்துக்கு சென்று சந்தித்துப்பேச நேரத்தை விசேடமாக ஒதுக்கிக் கொண்டார் எனத்தெரிகிறது.*

*இவ்வாறே, நேரமின்மையினால் இந்தியக் குடியரசுதின வைபவத்தில் கலந்துகொள்வதில்லை என, சிறீலங்கா சனாதிபதி முதலில் திட்டமிட்டிருந்தபோதிலும் பின்னர் திடீரென அம்முடிவை மாற்றி, அவ்வைபவத்தில் சந்திரிகா கலந்துகொண்டுள்ளார்.*

*இதற்கிடையே ஐக்கிய தேசியக் கட்சிக்கு புத்துயிர் ஊட்டும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும் அனுராதபுரத்திலிருந்து கொள்கை விளக்கக் கூட்டங்களைத் தொடங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1978 ஆம் ஆண்டில் தான் அமுலாக்கிய அரசியல் அமைப்பு சாசனம் பற்றி அதன் சூத்திரதாரிகளுள் ஒருவரான பீரிசுடன் சேர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு விளக்கி வருகிறார்.* ■




என்னாலே இனி அவனில்லை என்ற நிஜத்தை ஜீரணிக்கவே முடிய வில்லை.

இப்படித்தான் வெளியில போனவன் வருவான் என்றது போல, சைக்கிள் சத்தம் கேட்டால் பரபரப்புடன் வாசலைப் பார்த்து ஏமாந்து, என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் நிம்மதி என்ற சொல்லின் அர்த்தத்தைத் தொலைத்து விட்டேன். சிரிப்புக்கு முகவரி தேடினேன். இந் நிலையில் தான் ஆரணி சொன்னாள், அண்ணாவைப் போல, வளர்ந்த பிறகு நானும் புலியாகத் தான் போவேன்; அண்ணாவைச் சுட்டவனை சுடுவன் என்று. இதைக் கேட்டு அதிர்ந்து போனேன். ஓங்கித் தலையில் சம்மட்டியால் அடித்தது போல. இல்லை, இல்லவேயில்லை, இனியொரு துயரைத்தாங்கும் மனநிலை எனக்கில்லை. இவளும் போய் பிறகு என்ன நடந்ததோ, எப்ப நடக்குமோ என்று அணு அணுவாகத் துடிக்க இனிச்சக்தியில்லை. போதும் இந்த நிலை. இனியொரு முறை அந்த அனுபவம் வேண்டாம். இதன் விளைவாக இரவு பகல் எனது கணவரைத் தூண்டினேன். அவருக்கோ தாயக மண்ணைவிட்டு பிரியமனமில்லை. பிள்ளையின்ர எதிர்காலத்தில் உங்களுக்கு அக்கறையில்லை. உங்கட சுயநலம் தான் பெரிதாகத் தெரிகிறது என்று பலவாறு ஓதிய பிறகு தான் வேண்டாவெறுப்பாகக் கிளம்ப ஆயத்தங்கள் செய்தார். அவருடைய சகோதரன் குடும்பமாக அவுஸ்திரேலியாவில் இருந்தது உதவியாக இருந்தது. அக்கா எக்காரணம் கொண்டும் கிளம்ப மறுத்து விட்டாள். அசோக்கும், அத்தானும் வாழ்ந்த வீட்டில தான் தன்ர காலம் முடியுமென்று பிடிவாதமாக இருந்து விட்டாள்.

இதோ 10 வருடங்கள் கண்ணை மூடிக்கொண்டு பறந்துவிட்டது. தமிழில் மழலை பேசிய ஆரணி, தமிழை மறந்து, தமிழில் கதைப்பதுகூட அவமானம் என்ற நிலைக்கு வந்துவிட்டாள். அதாவது என் மகள் வளர்ந்து விட்டாள். அவுஸ்திரேலியாவில் காலடி வைத்த ஆரம்பகாலத்தில், தூக்கத்தில்கூட பெரியம்மாவையும் துவாரகாவையும் நினைத்தழுதாள். வந்தவுடன் அவரிற்கும் வேலைகிடைக்கவில்லை. அதைவிட தாய் நாட்டையும் நண்பர் குழாத்தையும் நினைத்து வேதனைப்படாத நாளேயில்லை. வேலையாலவந்து வேப்பமரத்து நிழலில, சாய்மனைக் கதிரையில் படுத்திருந்து, பேப்பர் வாசித்துப் பழகின அவராலே மூடிய வீட்டிற்குள் அடைபட்டிருக்க முடியவில்லை. மூச்செடுக்க முடியாதது போல் ஒரு நிலை. என்னைப் பொறுத்தவரை, ஏதோ உத்வேகத்தில் கிளம்பிவிட்டேன். ஆனால் இங்குள்ள சூழல், மனிதர்கள் எல்லாமே அந்நியம்போல, நான் இங்கே ஒட்டாதது போல் ஓர் உணர்வு.

ஏதோ சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பதைப் போல, கழற்றி விட்டால் யாழ்ப்பாணத்தை நோக்கி தலைதெறிக்க ஓட வேணும் போல ஒரு வெறி. இங்கே கதைக்கக் கூட ஆட்களில்லாத மாதிரி மௌனம். ஒரே மௌனம். அங்கே பக்கத்து வீடு, முன்வீடு என்று அரட்டை அடித்துப் பழகின எனக்கு வாய்ப் பூட்டு. மொத்தத்தில் நான் இங்கே, என் உயிர் அங்கே. ஆனாலும் எல்லாம் மகளுக்காக, அவளின்ர வாழ்வுக்காக என்று என்னை நானே தேற்றிக் கொண்டு வாழத்தலைப்பட்டேன். ஆனாலும் குரங்கு மனம் ஊரைப் பற்றி நினைத்து பெருமூச்சு விடத் தயங்காது. காலப் போக்கில் கணவரிற்கு வேலை கிடைத்துவிட அவரின் பொழுது அதோடு கழிந்தது.

ஆரணியும் புதிய சூழல், புதிய நண்பர்கள் கிடைக்க பழசை மறக்க ஆரம்பித்தாள். துவாரகா, அசோக் பற்றிக் கேட்பது வாரத்துக்கு ஒரு தடவையாகி, மாதத்திற்கு ஒரு தடவையாகி, பிறகு இல்லாமலே போய் விட்டது. ஆரம்பத்தில் அவள் மழலை மொழியில் கதைக்கும் ஆங்கிலத்தைக் கேட்க எனக்குப் பெருமையாக இருக்கும். மேலும் பேச மாட்டாளா என்றதைப் போல, இப்ப ஆங்கிலத்தை நிறுத்தித் தொலைக்க மாட்டாளா என்று மனம் தவிக்கிறது. எத்தனை, *Mind your own business, I don't care* களைக் கேட்டிருப்பேன். தான் நினைச்சது தான் சட்டம். உடுப்புக்கள் கூட, ஓங்வொரு வருசமும் கொஞ்சம் கொஞ்சமா மேலேறி இப்ப மினியில் நிற்கிறது. இதையும் எதிர்த்தால் எங்கே அதுவுமில்லாமல் போய்விடுமோ என்று பயந்து நான் வாயே திறப்பதில்லை. நினைத்த நேரம் வீட்டிற்கு வருவாள், போவாள், ஏனென்று கேட்க முடியாது. எந்த நேரமும் ஆங்கில இசையால் வீடு இரண்டுபடும். தலைவிதியே என்று சகிக்கிறேன்.

## "ஏதோ சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பதைப் போல, கழற்றிவிட்டால் யாழ்ப்பாணத்தை நோக்கி தலைதெறிக்க ஓடவேணும் போல ஒரு வெறி."

பத்தாததற்கு சுற்றுலா என்ற பெயரில் ஊர்சுற்றி நண்பர்களுடன் கும்மாளமடித்துவிட்டு வருவாள். எமது பண்பாடு மனதை உறுத்த, இருக்கமுடியாமல் வாயைக்கொடுப்பேன். லாரவின்ற அம்மா கேட்கிறதில்லை, சோனியாவை அம்மாவே அவவின் *Boyfriend* ஓட அனுப்பி வைத்தவர் என்று தொடங்கி வீடு இரண்டுபடும். சுற்றுலாப்படங்களைப் பார்த்து எனக்கு அதிர்ச்சி. முடியை நீட்டாக வளர்த்து, ஒரு காதில் தோடு போட்ட கழுதையொன்று, எல்லாப் படத்திலும் இவளோட உரசியபடி. சகிக்க முடியாமல் மெல்ல கதை கொடுத்தால், தோளைக் குலுக்கியபடி *We're classmates* என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள். ஓரேயொரு நிம்மதி. வீட்டை விட்டு ஓடும் பதினாறு வயது *fashion*ஐ பின் பற்றாமல் எங்களோடு இருக்கிறாளே என்றுதான். இதுவே ஒரு பாக்கியமாக எதனையும் நான் கண்டு கொள்வ்திலலை. அவரிற்கோ இதைக் கண்டு கொள்ள நேரமில்லை. மீறிச் சொன்னால் எல்லாம் உம்மால தானே என்று நெற்றியிலடித்த மாதிரிப் பதில் வரும். அவள் இங்கே வளர்ந்த பிள்ளை. அவர் சொல்லியா புத்தி கேட்கப் போகிறாள். இப்ப புதிசா தலைக்கு சாயங்கள் பூசத் தொடங்கியிருக்கிறாள். இன்றைக்கு நண்பியின் வீட்டு விருந்துக்கு, நரை நிறச் சாயம் பூசியபடி போயிருக்கிறாள். எங்கடை காலத்தில, நரைச் சாலும் என்று பயந்து, கருவேப்பிலை காய்ச்சி தலைக்கு வைத்தது ஞாபகத்துக்கு வருகிறது. என்ன கேடு கெட்ட நாகரிகமோ.

அக்கா துவாரகா பற்றி பெருமையாக எழுதியிருந்தாள். படிப்பில, விளையாட்டில எல்லாத்திலையும் முதல் தான். தாய்க்கு எல்லா உதவியும் செய்து கொடுத்து விட்டுத் தான் பள்ளிக்கூடம் போவாளாம். பள்ளிக்கூடம் விட்டவுடனே பதினைந்து நிமிடத்தில் வீட்டில நிற்பாளாம். தானுண்டு, தன் வேலையுண்டு என்று படிப்பே கண்ணாக. அவள் ஒரு தரமாவது எதிர்த்துக் கதைக்க மாட்டாளா என்று, தான் நினைப்பதுண்டாம். வாசிக்க இப்படியும் ஒரு பிள்ளையா என்று பெருமைப் பட்டாலும் அடிமனதில் ஒரு ஊமை வலி. என்ர பிள்ளையும் அங்கேயென்றால் இப்படித்தானே இருந்திருப்பாள். எல்லாம் என்னாலதான். இவளைப்பற்றி பெருமையாக நானென்ன எழுதுவேன். துவாரகா பற்றி சொன்னால் தோளைக் குலுக்கியபடி *That is Duwaraka, This is Arani* என்று ஆங்கிலத்தில *style* ஆக சொன்னாள் என்றா எழுத முடியும். எதை எழுதுவேன். எல்லாமே என்னால் வந்த வினை.

அசோக்கைப் பார்க்கிறேன். இந்த ஆரணி புலிக்குப் போகுமென்றே சின்னம்மா பயந்தனீங்கள், அவன் சிரிக்கிறான். என்னுடைய சுயநலத்தைக் குத்திக் காட்டுவது போல, பெருங்குரலெடுத்துச் சிரிக்கிறான். இந்தப் பிள்ளைபோன சரியான பாதையை உணர முடியாததாலதானே எனக்கிந்த கதி. நாற்பது வயசில தமிழ் பண்பாட்டை யோசிக்கும் நானெங்கே! பன்னிரெண்டு வயசில தமிழுக்கு உயிர் விட்ட அவனெங்கே! புதிய கோணத்தில் அவனைப் பார்க்கிறேன். சுயநலமேயற்ற தெய்வப்பிறவியாக கோயிலில் உறையும் தெய்வத்திற்குச் சமானமாக என்னை ஒரு புழுப்போல உணருகிறேன்.

என்ரை பிள்ளை தப்பவேணும் என்ற ஒரே நோக்கில் வந்த நான், இந்தப் பத்து வருடமும் கண்டதென்ன. அந்நிய மண்ணிலே அந்நியனாக வாழ்ந்து மிஞ்சியதென்ன. கவலையும் துக்கமும் தான். நான் இங்கே வந்தது, இல்லாமல் ஆகி விடாதா.

காலச்சக்கரத்தை ஒரு பத்து வருடம் பின்னோக்கி தள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அசோக் என்னை மன்னிப்பாயாடா. இந்த சுயநலப் பேய்க்கு பாவ மன்னிப்பு தருவாயாடா, அவன் எம்முடன் வாழ்ந்த அந்தப் புனிதமான காலத்திலே, விரும்பி முணுமுணுக்கிற பாடல் சாட்டையடியாக என் காதில் ஒலிக்கிறது.

"நடந்து வந்த பாதை தனை திரும்பிப் பாரடா! நீ நாச வேலை செய்த பின்னால் வருந்துவாயடா!"

**நான் செய்தது தப்பு; பெரிய தப்பு. நாங்களிங்கே வந்திருக்கவே கூடாது. எங்களிற்கு என்றொரு தேசம் வேணும். எங்கடை பண்பாடு தலை நிமிர்ந்து வாழ வேணும். என்ர மண்ணில தான் என்னுடைய பிள்ளை வாழ வேணும். எங்களுக்கென்று ஒரு தனிப் பெருமை மிக்க வரலாறு. பண்பாடு, தேனினும் இனிய மொழி இருக்கென்று அவள் உணர வேணும். ஆங்கிலம் தெரியுமென்றதைவிட, என்னுடைய தமிழ் எனக்குத் தெரியும் என்று அவள் பெருமைப்பட வேண்டும். தமிழனாகப் பிறந்ததற்கு அவள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். தமிழிற்காகப் போராடி உயிர் துறந்த அந்தப் புனித உள்ளங்களின் வீர வரலாறுகளை அவள் தெரிந்து பெருமைப்பட வேண்டும்.**

இங்கேயே இருந்து, அவளை உயிரோடு கொல்வதைவிட, நாங்கள் வந்த பாதை வழியே மீளவும் தாயகம் போய் விட வேண்டும். எனது முடிவு அவரிற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆரணி அழுவாள் ஆர்ப்பாட்டம் செய்வாள். தன் சொந்தக் காலில் நிற்கக்கூடிய வல்லமை இன்னும் வராததாலே அடங்கி விடுவாள்.

அசோக்கைப் பார்க்கிறேன். கள்ளமில்லாமல் சந்தோசமாகச் சிரிக்கிறான்.

ஆரணியும் தமிழ்ப் பெண்ணாக மாறுவாள்.

நீ காட்டிய பாதையில் நடப்பாளடா.

மானசீகமாக அவனைக் கையெடுத்துத் தொழுகிறேன். நான் பண்ணிய தப்பிற்கு பிராயச்சித்தம் தேடப் போகிறேன். எனது அடி மனதில் நம்பிக்கை எனும் சிறு வெளிச்சம், விடி வெள்ளியாக மலருகின்றது. இந்தப் பத்து வருட வாழ்க்கையில் முதல் தரமாக நிம்மதி என்னை வந்து தழுவ, மகிழ்ச்சியோடு சிரித்தபடி ஆரணியின் வரவிற்காகக் காத்திருக்கிறேன். ■

## மார்கழி அழகு

சுற்றிய போர்வை விலக...
சுருக்கென்று குத்திய குளிர்,
என்னைத் தட்டி விட எழுந்தேன்.
அதிகாலை
வெளியே வந்த போது
அரவமற்றிருந்தது தெரு.
கருப்புச் சேலை விரிப்பாய்
நீண்ட தார் வீதியில்...
என்னைப்போல ஓரிருவர்.
மார்கழி அழகு... 'மகாலட்சுமி'
உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும்.
சும்மா சொல்லக் கூடாது.
மார்கழி மாதம் பேரழகு.
எட்டு மணிவரை கட்டிலிற் கிடப்பவனுக்கு
இந்த எழில் எப்படித் தெரியும்.
நல்லூர் மணியடிக்கும் நாலரை மணிக்கு...
கொள்ளையழகு கொலுவிருக்கும்
வாசலுக்கு வந்து பார்த்தால்...
மார்கழி அழகு 'மகாலட்சுமி'
'ஆதியும் அந்தமுமில்லா'...
பள்ளியெழுச்சிப் பாடல்கள்
ஒவ்வொன்றும் முடிய, முடிய
அந்தமணியும்
அரோகராச் சத்தமும்,
முடியும், துணியும் முறுக்கிய கூந்தலில்
நீர் சொட்ட வந்தெழுப்பும்
என் மனைவி அழகும்,
எல்லாம் ஒன்றாகி
மார்கழி அழகு 'மகாலட்சுமி'.

- புதுவை இரத்தினதுரை

**1994 முத்தமிழ் விழாவில் சர்வதேச சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.**

## சிறு கதை




தமிழீழத்திலிருந்து
**செல்வி. ச. வதனா**

நேரமோ சிறகடித்துப் பறக்கிறது. சற்று முன்தான் ஐந்து மணியைப் பார்த்த மாதிரி இருக்கிறது. பார்த்தால் 5. 30 ஐத்தாண்டி, 6 மணியை நோக்கி வேகமாக முட்கள் நகருகின்றன. வின்ரர் குளிர் வேறு, இருளைச் சீக்கிரம் வரவழைக்கிறது. இன்னும் ஆரணியைக் காண வில்லை. எரிச்சல், எரிச்சலாக வருகிறது. என்ன பெண் இவள்! எங்கட காலத்தில் விளக்கு வைச்ச பிறகு வீட்டுக்கு வந்திருப்போமா.

> **"ஆரம்பத்தில் அவள் மழலை மொழியில் கதைக்கும் ஆங்கிலத்தைக் கேட்க எனக்குப் பெருமையாக இருக்கும், மேலும் பேச மாட்டாளா என்றதைப் போல இருக்கும். இப்ப ஆங்கிலத்தை நிறுத்தித் தொலைக்க மாட்டாளா என்று மனம் தவிக்கிறது. தான் நினைத்ததுதான் சட்டம்.உடுப்புக்கள் கூட , ஒவ்வொரு வருசமும் கொஞ்சம் கொஞ்சமா மேலேறி இப்ப மினியில் நிற்கிறது. இதையும் எதிர்த்தால் எங்கே அதுவுமில்லாமல் போய்விடுமோ என்று பயந்து நான் வாயே திறப்பதில்லை."**

வரத்தான் விடுவார்களா. ஆரணிக்கு இதெல்லாம் புரியுமா? எங்கடை காலத்து பழக்கவழக்கம், பண்பாடுகளை எடுத்துச் சொல்லப் போனால் ஓரிடத்தில் நின்றுதான் கேட்கிறாளா. காதைப் பொத்திக் கொண்டு பழம்புராணம் காணும் என்று கத்தத்தான் தெரியும். எங்கடை பண்பாட்டின் அருமை, பெருமைகளை அறியக்கூட என்ர பிள்ளைக்குக் கொடுத்து வைக்கவில்லை. எப்ப தான் புரிந்து கொள்ளப் போகிறாளோ! சில நேரங்களில், அவளின் கதைகளுக்கு ஓங்கி ஆசைதீர மாறி மாறி அறைய வேணும் போல கைகள் பரபரக்கும். ஆனால் இங்கே அதைக்கூட செய்ய இயலாதே.

என்னுடைய கணவர் வேலை முடிந்து வந்து சேரவே இரவு 8. 30 ஆகிவிடும். வரும் போது அனேகமாக தலைவலிப் பாட்டுடன் வருவார். அந்த நேரம், ஆரணியைப் பற்றி சொல்லவா முடியும்? போதாதற்கு ஆரணி வேறு வீட்டிலிருப்பாள். அவள் காதில் விழுந்தால் அவ்வளவு தான். தொலைத்து விடுவாள். இரவில் படுக்கையில் கதை எடுத்தால் இரண்டு, மூன்று தரம் ம், ம் சத்தம் வரும். பிறகு கொரட்டைச் சத்தம் வரும். இருளிற்குத்தான் என் கவலைகளை, பயங்களைச் சொல்லலாம். சனி, ஞாயிறுகளில் கூட அவரிற்கு அலைச்சல் தான். மகளின் படிப்புச் செலவு, வீட்டுச் செலவு போன்ற எல்லாச் செலவையும் அவரே சமாளிக்க வேணும் என்றதால், பகுதி நேர வேலையும் செய்து அற வேண்டிய தலைவிதி. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில 4 மணிக்கு வேலை முடிய 4. 30 க்கு டாணென்று வீட்டை வந்து நண்பர்கள் சூழ அரட்டை அடிச்ச மனுசன்..... அது எவ்வளவு சந்தோசமான காலம். இங்கே கதைக்கக்கூட ஆளில்லாமல், பூட்டிய வீட்டுக்குள் நடைபயிலுவது ஒரு வாழ்க்கையா! அங்கேயென்றால் பக்கத்துவீட்டு சுதா, விஜி, தங்கம்..... என்று ஒரு பட்டாளமே வரும். கல, கலவென்று எங்கடை வீடிருக்கும். எங்களுடையதும், அக்காவுடைய வீடும் ஒரே வளவுக்குள். யார் வீட்டு சமையல் என்று கூடப் பாராமல் பசி வந்த வீட்டில சாப்பிட்டதும், சிரித்து மகிழ்ந்ததும் ஒரு காலம். அந்த வீட்டைவிட்டு கிளம்புவம் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. நாங்கள் நினைத்தா எல்லாம் நடக்கிறது.

என்னையறியாமல் கண்கள் மேலே பார்க்கின்றன. அசோக் சிரிக்கிறான். சின்னம்மா என்று அவன் கூப்பிட்டதைப் போல ஒரு சிலிர்ப்பு. என்னுடைய கையால தூக்கி வளர்த்தபிள்ளை. அக்காவின் பிள்ளை என்றாலும், அவனைப் பொறுத்தவரை நான் தான் அம்மா. அக்காவிற்கு ஏதாவதொரு வருத்தம் சிறு வயது முதலே மாறிமாறி வரும். அசோக் பிறந்த கையோடு, ஒரு வருசம் படுத்த படுக்கை. அறிவு வராத பிஞ்சுப்பருவம் முதல் மழலை பேசும் வரை அவனை வளர்த்தெடுத்தது நான் தான். இதால சின்ன வயசில அவனுக்கே சந்தேகம் தன்ர தாய் யாரென்று. என்னைச் சித்தி என்று சொல்லித்தந்தாலும் அம்மா என்று வாய் நிறையக் கூப்பிடுவான். அறிவு வந்த பிறகு கூட சித்தி என்று கூப்பிட மனமில்லாமல் சின்னம்மா என்று தான் கூப்பிடுவான். அனேகமாக காலை முதல் இரவு வரை எம்மோடு தான். படுக்கை மட்டும் தாய் வீடு. எமக்குக் குழந்தையில்லாத கவலையைப் போக்கியவன் அவன்தான். எம்மைப் பொறுத்தவரை அசோக்தான் எங்கடை மூத்த பிள்ளை. எங்கடை செல்லப் பிள்ளை. எங்கடை பிள்ளையில்லாக் கவலை போகட்டும் என்று, அக்காவும் கண்டு கொள்வதில்லை.

இப்படியே காலம் உருண்டோட, ஏழு வருசத்திற்கு பிறகு அக்காவுக்கு துவாரகாவும் எனக்கு ஆரணியும் ஆறுமாச இடைவெளியில் பிறந்தனர். ஆனாலும் என்னைப்பொறுத்தவரை ஆரணி இரண்டாவது பிள்ளைதான். அசோக்கைப் பொறுத்தவரையும், துவாரகாக்கும் ஆரணிக்கும் வித்தியாசமில்லை. இன்னும் சொல்லப் போனால் ஆரணியைத்தான் கூடத் தூக்கித்திரிவான். அவளும் அண்ணா, அண்ணா -என்றபடி அவனையே சுற்றியபடிதான்.

காலச்சக்கரமும் சுழன்றது. செல், பொம்பர் என்று எங்கடை மக்களைப் பிடித்த பீடையும் தொடர்ந்தது. எங்கடைபிள்ளைகளும் வளர்ந்தார்கள். அசோக்குக்கு 12 வயது நடக்கும் போதுதான், எங்கடை குடும்பத்தில் முதல் துர்அதிர்ஸ்டம் நிகழ்ந்தது. வேலைக்கு முழுமையாகப்போன அத்தானை பகுதிச் சிதறல்களாக, பெட்டி கூடத் திறக்க முடியாமல் கொண்டாட வைத்தது பொம்பர். யாரையும் பேசிக் கூட அறியாத அப்பாவி மனுசனுக்கு இந்தக்கதி. நாங்கள் எல்லோரும் ரொம்பவும் உடைந்து போனோம். அக்கா திக்பிரமை பிடித்த மாதிரி நினைத்த நேரம் அழுவதும் அரட்டுவதுமாக. ஒரு காலத்தில் புடவைக்குப் போட்ட ரவிக்கை இம்மியளவு பொருந்தாவிட்டாலும், நேரத்தைப் பற்றிக் கவலையில்லாமல் வேறு புடவை உடுத்து வரும் அக்கா ரொம்பவும் மாறிவிட்டாள். எதை உடுக்கிறோம் என்ற அக்கறையே இல்லாமல், எல்லாமே ஒன்று தான் என்ற ஞானிபோல, ஏதோ வாழ்க்கையை வாழவேணும் என்றதுபோல. முன்னர் சிரிப்பும் பகிடியுமாக எங்கடை வீட்டில் காலத்தைக் கழிக்கும் அசோக்கின் போக்கிலும் மாற்றமிருந்தது. அவன் பெரிதாக அழவில்லை. சோகத்தை தன்னுள் பூட்டிக் கொண்டான். ஏதோ சிந்தனை வயப்பட்டவனாக எங்கோ வெறித்தபடியிருப்பான். கேட்டால் அரைச்சிரிப்புச் சிரிப்பான். அந்த சிரிப்போ, அவனது கண்களை எட்டாத போலிச் சிரிப்பு. காலம் போக சரி வரும். சரிவர வேணும் என நம்பினோம். ஆனால் எல்லோரது நம்பிக்கையையும் காற்றாக்கி விட்டு போய்விட்டான், போராட்டத்தில் புலியாகி தன் பங்களிப்பைச் செலுத்த. நான் எதிர்பார்த்த மாதிரி அக்கா அழுது புலம்பவில்லை. அசோக்கின் முடிவு சரி என அடிமனதில் அவளும் உணர்ந்திருக்க வேணும்.

எனக்குத்தான் தாளமுடியவில்லை. போதாதற்கு ஆரணிவேறு "அண்ணா எங்கேயம்மா", என்று அரித்தபடி. அவளுக்கும், துவாரகாக்கும் உண்மை நிலை விளங்காவிட்டாலும் நிழற்படம் போல ஓரளவு புரியும் வயது. அவர்கள் பிறந்த காலந்தொட்டு கண்டது பங்கரையும் செல்லையும், பொம்பரையும் தானே. இப்படியே ஒரு வருடம் வேகமாகச் சுழன்றது.

அசோக், நண்பர்களுடன் நினைத்த நேரம் வரத்தொடங்கினான். அது இரவு 12 மணியென்றாலும் நானும், அக்காவும் போட்டி போட்டபடி சமைப்போம். அவன் போனபிறகு எனக்கு நித்திரை வராது. ஒரு இரவில்லை எத்தனை இரவுகள் சிவராத்திரி! கண்ணை மூடினால் அவனின் நினைவு, அரை குறையாக தூக்கம் வந்தால், அவன் காயம்பட்டு சின்னம்மா சின்னம்மா என்று தவிப்பது போல கனவு வந்து திடுக்கிட்டுப் பதறுவதும், சாப்பிடக் கூட மனம்வராது. என்ர பிள்ளை சாப்பிட்டானோ, இந்த எரிக்கிற வெயிலில காலில் செருப்புமில்லாமல் எப்படித்துடிக்கிறானோ. ஒவ்வொரு நாளும் பேப்பரில், நெஞ்சு நடுங்க வீரச்சாவுப் பெயர்களை வாசிப்பதும், தூரத்தில் சூட்டுச்சத்தம் கேட்டால் பதறி அழுவதும், எவ்வளவு பயங்கர காலம்! மனந்தாங்காமல் அசோக் கிட்ட கெஞ்சியிருக்கிறேன், விட்டுட்டு வா ராசா என்று. அவன் சிரித்து விட்டுச் சொல்லுவான், எல்லாரும் இப்படிச் சுயநலமாக இருந்தால், வீட்டுக்கு வீடு தன்ர அப்பாவின் கதிதான் நடக்குமென்று. என்னுடைய ஆசைக்காக அவனின் பாதை மாறாது. நாங்கள் மாறினோம். இது தான் வாழ்க்கை என்று ஏற்றுக் கொண்டு போலியாக சிரித்துப்பேசி காலத்தை போக்காட்டினோம். ஆனாலும் செல் சத்தம் கேட்க மனம் ஒரு தரம் அவனைச் சுற்றிவரும். பூனை குறுக்கே போனால் கூட பயம். என்ன கெட்ட செய்தி வரப் போகுதோ என்று எந்நேரமும் மனம் அலைபாயும். எங்கும் எதிலும் பயம், பயம். இப்படியே கலக்கத்தில் காலம் கழிய ஆரணியின் ஆறாவது பிறந்த நாளும் வந்தது. அசோக் நண்பர்களுடன் கட்டாயம் வருவதாக, ஆரணிக்கு வாக்களித்திருந்தான். அண்ணனுக்கு கடலை வடை பிடிக்கும். லட்டு விரும்பிச் சாப்பிடுவார் என்று அவனுக்கு பிடித்ததெல்லாம் பார்த்துப் பார்த்து செய்து வைத்து விட்டு, கேக் கூட வெட்டாமல் வாசலுக்கும் கேற்றுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள். வாகனச் சத்தம் கேட்டதும், எல்லாரும் ஆவலாக வாசலைப் பார்ப்போம். அது தெருவால் போகும் காராயோ லொறியாயோ இருக்கும். நேரமோ ஆறு மணியைத் தாண்டுகிறது. அசோக்கின் சத்தமில்லை. பலாலிப் பக்கமாக சூட்டுச் சத்தங்கள் தான் கேட்கிறது. எல்லோருடைய முகங்களிலும் ஒரு இனம் புரியாத பீதி. இரவு 8 மணி போல, சோகமே உருவாக அவனுடைய நண்பர்களிருவர் வந்தனர். அவர்கள் சொல்ல முதலே நிலைமை புரிந்து நாம் கதறத் தொடங்கி விட்டோம். எங்களால் இந்த இழப்பை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

என்ர அசோக், நான் வளர்த்தெடுத்த பிள்ளை, போய்விட்டான். அந்த சின்ன உயிரை எடுக்க கடவுளுக்குக் கூட மனம் வந்ததே. சின்னப்பூப்போல, எவ்வளவு மிருதுவாக புல் கூட நோகாமல் நடப்பான். கள்ளமில்லாமல் சிரித்தபடி, நொடிக்கொருதரம் -சின்னம்மா சின்னம்மா என்று வலம் வந்தவனை, இனி எங்கே காணப்போகிறேன். அந்த பிஞ்சு உடலை ரவைகள் சல்லடை போட்ட நேரம் என்ன நினைத்தானோ, எதைச் சொல்லத்தவித்தானோ, உயிர் பிரியும் நேரம் வலிக்குமாமே, என்ர செல்லம் எப்படித் துடித்தானோ. இனி எங்கே இப்படியொரு பிள்ளையைக் காணப் போகிறோம். எதையெல்லாமோ நினைத்துப் புலம்பினோம். மனம் தான் ஆறவில்லை.

அவனையும், அவனது தோழர்கள் மூவரது உடல்களையும் பூக்கள் அலங்கரித்த வாகனத்தில், மக்கள் மலர் தூவி கண்ணீர் அஞ்சலி செலுத்த, இறுதி ஊர்வலம் அனுப்பி வைத்தோம். வீதியோரமெங்கும் சுவரொட்டிகள், அவனது வீரத்தை அஞ்சாத தன்மையைப் பறை சாற்றின. காயம்பட்ட நிலையிலும் இறுதி வரை பின் வாங்காமல் தீரத்துடன் போராடியது குறித்து கதைகதையாக அவனது நண்பர்கள் பெருமையாகச் சொன்னார்கள்.

அக்கா நாளடைவில் ஓரளவு மனம் தேறினாலும் என்னால் முடியவில்லை. தூங்கினாலும் அவன் நினைப்பு, விழித்தாலும் மனம் அவனையே சுற்றிச்சுற்றி. என்ர வீட்டிலேயே அவன் முழுநாளும் வலம் வந்ததாலும் நானே வளர்த்ததாலும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# அந்தப் பிரதேசம் அவர்களின்...

பலமாகவும் வடக்கிலிருந்து கேட்பதாகவும், எந்தப் போர் நாட்டமுள்ளவராக இருந்தாலும்கூட சமாதானத்திற்கான ஆர்வக்குரலுக்குச் செவிமடுக்காது செவிடனாக இருக்கமுடியாது எனவும் சிறீலங்கா ஜனாதிபதி வலியுறுத்தினார். அத்துடன், இந்தியாவின் அமைதிப்படையின் தலையீடு, நிலைமையை மேலும் சிக்கல் உள்ளதாக மாற்றியது எனவும் அச்சமயம் கைச்சாத்தான இந்திய -இலங்கை ஒப்பந்தம் பிரச்சினையின் யதார்த்தத் தன்மைக்கு எவ்வகையிலும் பயன்தரவில்லை எனவும் கூறினார்.

ஆயினும் இச்செவ்வியின் போது, சிறீலங்கா ஜனாதிபதி தப்புக்கணக்கொன்றையும் போடத்தவறவில்லை. அவர் இராணுவத் தாக்குதல்கள் ஏற்படும்பொழுது, கெரில்லாக்கள் மக்களிடம் பாதுகாப்புத் தேடுவார்கள் எனவும் மக்கள் சமாதானத்தின் மேல் அதிக அக்கறையை வெளிப்படுத்தும்போது, அவர்கள் அதற்குப் பணிய வேண்டி ஏற்படும் எனவும் கூறியுள்ளார். இதன்மூலம் சிறீலங்கா ஜனாதிபதி, தமிழ்த் தேசியத்தின் ஏழுச்சியைச் சரிவர விளங்கிக்கொள்ளவில்லை எனத்தெரிகின்றது. தமிழ்த் தேசியம் சிங்களத் தேசியத்தால் ஆயுத ஒடுக்குமுறைக்கு உள்ளானபோது தமிழ் மக்களே தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி, தமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்தனர். இதனைச் சிங்கள பௌத்த பேரினவாதம் ஆயுதப் பலப்பிரயோகமுள்ள இராணுவ அமைப்பினால் ஒடுக்கமுனைந்தபொழுது, மக்களே புலிகளாகி, புலிகளே மக்களைப் பாதுகாக்கும் தமிழீழத் தேசியப் பாதுகாப்பை (National Security of Tamileelam) வழங்கும் அமைப்பாக மாறினர். ஆகவே "புலிகள் வேறு; மக்கள் வேறு அல்ல." இதையே யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தம்மைச் சந்தித்த அனைத்துலக செய்தியாளர்களிடம், "தமிழ் மக்கள் எனும் பயிர்களின் வேலியாக விடுதலைப் புலிகள் நிற்கின்றனர்" என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

எனவே மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப் பார்க்காது, இருவரையும் வேறு வேறான தொகுதியாகக் கருதி அவர்களை அந்நியப்படுத்துவதன் மூலம் விடுதலை உணர்வை மழுங்கடிக்கலாம் என்ற பயனற்ற வழியில் சிந்திக்காது, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டிய தேவை சந்திரிகாவிற்கு உண்டு.

இச்செவ்வியின்போது, வடக்கு -கிழக்கின் புனரமைப்புக்கு, மின்சாரம் வழங்கல், தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தல், சாலைகளைத் திருத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு தாம் முன்னுரிமை அளிக்க விரும்புவதாகக் கூறியுள்ளார். அத்துடன் விரைவில் சிறீலங்காவின் தொழில்நுட்ப உயர் ஆலோசகர்கள் குழுவொன்று யாழ்ப்பாணம் செல்ல விருப்பதாகவும் விடுதலைப் புலிகள் வழங்கும் மனித வலுவைக்கொண்டு, இவர்கள் விடுதலைப் புலிகளின் வழிகாட்டலில் திருத்த வேலையில் ஈடுபடுவார்கள் எனக் கூறியுள்ளார். இது எந்நேரத்திலும் தொடங்கலாம் எனவும் விளக்கியுள்ளார்.

"சந்திரிகா அவர்கள் புனரமைப்பு, புனர்வாழ்வுக்குக் காட்டும் அக்கறையை மக்களும் விடுதலைப் புலிகளும் என்றுமே வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை; ஆனால் இவைகளால் மட்டும் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியாது. தமிழர் பிரச்சினையை இனங்கண்டு, அதற்கு ஏற்புடைய அரசியல் தீர்வை முன்வைப்பதனாலேயே உண்மையான அமைதியை ஏற்படுத்தலாம். இதற்கு விடுதலைப் புலிகள் நீட்டும் நேசக்கரத்தை ஐயத்துடன் நோக்காது, நம்பிக்கையுடன் செயற்படவேண்டியவர் சிறீலங்கா ஜனாதிபதி. மாறாக ஐயமும் அவநம்பிக்கையும்தான் சிறீலங்காவின் போக்காக இருந்ததினாலேயே தமிழீழக் கோரிக்கை அவசியமாயிற்று என்பது வரலாறு. வரலாறு தரும் பாடங்களை உணராதுவிடின், வரலாறு தோற்றுவிக்கும் புதிய அமைப்புக்களைக் கிரகித்தே ஆகவேண்டும்" என, அரசியல் அவதானி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். ■

# சட்டவாக்கமும்...

ஆயினும் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களுக்கு அவர்களது தாயகத்தை போன்ற நிலையிலேனும் (Defacto Home land), சிறீலங்கா அங்கீகரிப்பதை அனுமதிக்கமாட்டார்கள் எனவும், பல ஆண்டுகளாக சிங்கள பௌத்த பேரினவாதிகளால் நசுக்கப்பட்ட நிலையிலேயே எழுபதுகளிலே தமிழர்கள் ஆயுதமேந்தவேண்டி நேரிட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுபூர்வமாக வரைவமைக்கப் பட்டுள்ள தமிழ்ப் பிரதேச எல்லைகளை உள்ளடக்கிய தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப் படவேண்டுமென கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளதாகவும் 'த டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைதித் தீர்வின்மேல் ஆர்வம் காட்டுவதில்லை என, சிறீலங்கா அரசு செய்துவந்த விசமத்தனமான பிரச்சாரத்துக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் செவ்வி ஆப்பு வைத்துள்ளது. விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தியமை, அமைதிவழித் தீர்வினை உற்சாகப்படுத்துவதாக அமைந்துள்ளதென அனைத்துலக அரசியல் அவதானிகள் பாராட்டியுள்ளனர்.

'டெலிகிராப்' செய்தித்தாள் பதினொரு ஆண்டுகாலப் போருக்கு முடிவுகாணக்கூடிய தீர்வை விடுதலைப் புலிகள் அளித்துள்ளதாகப் புகழ்ந்துள்ளது. ■

# தமிழீழத் தேசியத் தலைவர்...

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அன்று மாலையே கொழும்பு திரும்பியுள்ளனர். பூநகரிப் பாதை திறப்பு விடயத்தில் தாம் விட்டுக் கொடுக்கப் போவதில்லை எனவும், அபிவிருத்தி வேலைகள் நடைபெறவேண்டும் எனவும் தலைவர் பிரபாகரன், வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளார் என அறியப்படுகின்றது. பூநகரி முகாம் அகற்றப்பட்டால் மாத்திரமே, பூநகரிப் பாதை திறக்கப்படும் எனவும் இதுவிடயத்தில் அரசு எடுக்கவிருக்கும் முடிவே அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கு இடமளிக்கும் எனவும் தலைவர் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தை என்ற பெயரில் தமிழினத்தை, தொடர்ந்தும் ஏமாற்ற இடமளிக்க நாம் தயாராக இல்லை எனவும் தேசியத் தலைவர் அவர்கள் தெளிவாக- எடுத்துரைத்துள்ளார். ■

# பாதிக்கப்பட்ட மாணவர்கள் உளநலன்கள் பற்றி ஆராய்வு

போரின்போது பெற்றாரை, உறவினரை இழந்து அநாதைகளான அல்லது வேறுவகைப் பாதிப்புக்குள்ளான மாணவர்களின் உளநலன் பற்றிய ஆய்வு ஒன்றை கனடா 'மக் மாஸ்டர்' பல்கலைக்கழகம் மேற்கொள்ள இருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களின் மன நிலையில் கடந்தகால போர்களும் வன்செயல்களும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என்பதைக் கண்டறிவதும், அத்தகைய தாக்கங்களிலிருந்து அவர்களைக் காப்பதற்கு வழிவகைகளை மேற்கொள்ளுவதுமே மேற்படி ஆய்வின் நோக்கம் ஆகும்.

இந்த ஆய்வு வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவென மட்டக்களப்பு, குருநாகல், பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலிருந்து தமிழ், முசுலிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சமூகநலப் பணிகளில் ஆற்றலுள்ள 75 பேர் உளநல ஆய்வாளர்களாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த உளநல மருத்துவர் திருமதி அனாடோனி, கனடாவைச் சேர்ந்த செல்வி அபர்ணா சிவசுப்பிரமணியம், இலங்கை குடும்ப புனர்வாழ்வு நிலைய இணைப்பதிகாரி திருமதி இந்திராகாந்தி பெரேரா, மருத்துவ கலாநிதி எஸ். சிவயோகம், பிதா டேமியன் ஆகியோர் இத்திட்டத்திற்குப் பொறுப்பாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ■

# தீர்வை முன்வைக்க இயலாது...

விடுதலைப் புலிகளால் சிறீலங்காவிடம் வழங்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை எனக்கூறியுள்ளனர். இதன்மூலம் சந்திரிகா பண்டாரநாயக்கா எதையாவது கூறி, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு கடின நிலையை ஏற்படுத்துகிறார்கள் என்பதை உலகுக்குக் காட்ட முற்படுகிறார் என்பது உறுதியாகின்றது.

இது ஒரு புறமிருக்க, மக்களின் அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கே விடுதலைப் புலிகள் முன்னுரிமை அளித்துவருவதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளதாக, இலண்டன் 'த டைம்ஸ்' செய்தியாளர் கிறிஸ்தோபர் தோமஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து அறிவித்துள்ளார். இவ்வகையில் மக்களின் அன்றாடப் போக்குவரத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பூநகரி முகாமை அகற்றும்படி கேட்பது முன்நிபந்தனையல்ல. விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காவுக்கும் இடையிலான பேச்சுக்களின் தொடக்கம் முதலே மக்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு முதன்மைத்துவம் கொடுப்பதே தமது முன்னுரிமை என வலியுறுத்தி வருகின்றனர். அத்துடன் தேசநிர்மாணப் போக்கினை (Nation Building Process) உறுதிப்படுத்துவதற்கு பரஸ்பர நம்பிக்கைகளை வளர்க்கக்கூடிய செயற்பாடுகள், விட்டுக்கொடுப்புக்கள் அவசியமானவையாகவும் உள்ளன. இந்த அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள், சிறீலங்காப் போர்க் கைதிகளை விடுவித்து, தமது நல்லெண்ணத்தை உறுதிப்படுத்தி வந்தனர். ஆயினும் சந்திரிகா திடீரென முன்நிபந்தனைகள் எனவும் புதிய கோரிக்கைகள் எனவும் விமர்சிப்பது அவர், தீர்வினை எட்டமுடியாது தவிப்பதினை திசைதிருப்புவதற்கே என அவதானிகள் கருதுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள், மிகத்தெளிவாக தமது அரசியல் தீர்வுக்கான உள்ளக் கிடக்கையை 'சுயாட்சியுடன் கூடிய சமஸ்டி' எனும் சொற்றொடர் மூலம் விளக்கிய நிலையில், சந்திரிகா பண்டாரநாயக்கா "எனது அரசு அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு முன்னோடியாகத்தான் பகைமைத்தன்மைக்கான போக்குகளை மாற்றியமைத்தது; ஆயினும் அரசியல் பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளின் முன்னுரிமையில்லையாயின், எமக்குப் பேச்சுவார்த்தையில் ஆர்வம் இல்லை. எதுவித பலனையும் தரமாட்டாது எனும் அச்சத்தை தரக்கூடிய பேச்சுவார்த்தை எமக்குத் தேவையில்லை. இன்னும் விடுதலைப் புலிகளுக்கு அமைதி தேவையா இல்லையா என்பது பற்றி எமக்குத் தெரியவில்லை" எனக் கூறியுள்ளமை அரசியல் அவதானிகள் இடையே வியப்பையும் பலத்த ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

"கெரில்லாக்களுக்கு அமைதி தேவையில்லை எனக்கூறி, அவர்கள் தொடர்ந்தும் கஸ்டங்களை ஏற்படுத்துவார்களாயின், நான் போர் செய்யப்போவதாகக் கூறாவிட்டாலும் உறுதியானதும் நேர்மையானதுமான அரசின் நன்கு ஆயுதமயப்படுத்தப்பட்ட இராணுவத்தினால் நிச்சயமாகப் போரில் வெல்லமுடியும் என்பேன்" எனச் சந்திரிகா கூறியுள்ளமை தூரநோக்கில் இராணுவத் தீர்வினை அவர் சிந்திக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதாக விமர்சகர்கள் கருதுகின்றனர். ■

# சிறீலங்கா இராணுவவாதிகள்...

வும், அப்பொழுது தமது இரத்த நாளங்கள் கொதித்ததாகவும் கிழக்கிலிருந்து இராணுவ அதிகாரி ஒருவர் செய்தி அனுப்பியிருக்கிறார்.

சிறீலங்கா இராணுவவாதிகளுக்கு வழமைபோல் தமிழ்க் குழுக்களின் ஆயுதக் கும்பல்கள் துணைபோகத் தொடங்கியுள்ளனர். இவர்கள் விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பினை மீறுவதாக இட்டுக்கட்டிய செய்திகளைக் கொழும்புக்கும் வெளியூர்களுக்கும் அனுப்பி வருகின்றனர். சிறீலங்கா இராணுவவாதிகளுக்குச் சோடைபோகாத வகையில் தமிழ்க் குழுக்கள் அமைதி வழித்தீர்வைக் குழப்புவதற்குத் துடியாய்த் துடிக்கின்றனர். இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டு குழுத்தலைமைகளின் அர்த்தமற்ற போக்குக்குப் பலியாக வேண்டாமென, இக்குழுக்களில் இயங்குபவர்களை விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். அத்துடன் தம்மிடம் சரண் அடையும்படியும், தம்மிடம் சரண் அடைபவர்களுக்குப் பாதுகாப்பும் புனர்வாழ்வும் அளிப்பதை உறுதிசெய்வதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இதனையடுத்து வவுனியா, மன்னார் பிரதேசங்களில் சிலர் தமது குழுக்களை விட்டு விலகி, விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்துள்ளதாகவும், இவர்களுக்கு விடுதலைப் புலிகள் புனர்வாழ்வு அளித்துவருவதாகவும் அறியப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க சிறீலங்காக் கடற்படையினர் வடக்கு கடலில் 20 வயதுடைய நடேசன் சிறீதரன், 21 வயதுடைய அந்தோணிப்பிள்ளை, 20 வயதுடைய அன்ரனி, 14 வயதுடைய அருளப்பு எனும் மீனவர்களைச் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம்செய்து கைது செய்ததாகவும் பின்னர், துன்புறுத்தி விடுதலை செய்ததாகவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் இராணுவப் பலப்படுத்தல்களில் ஈடுபடும் சிறீலங்கா இராணுவத்தினர் மோதல் தவிர்ப்புக் காலத்தை, தாக்குதல்திறனைக் கூட்டுவதற்கான காலமாகப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. இவ்வகையில் ஜெரி டி சில்வா, இராணுவத்தின் கட்டளைத்துறை உட்பட உட்பிரிவுகளை நன்கு கட்டியெழுப்பிவருவதாகச் சிறீலங்காச் செய்தித்தாள்கள் பாராட்டியுள்ளன.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இராணுவ பலத்தின் அதிகரிப்பு, நவீனத்துவப்படுத்தல் என்பன நடைபெறுவதைத் தடுப்பதற்கு, எதுவித சரத்துக்களும் இல்லாததினால் தாராளமான முறையில் இராணுவ வலுவூட்டல் நடைபெற இடமுண்டு. இதற்காகத்தான் சிறீலங்கா போர் நிறுத்தத்தை மேற்கொள்ளாது, தந்திரமான முறையில் மோதல் தவிர்ப்பை மேற்கொண்டுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது. அதனாலேயே, "மோதல் தவிர்ப்பால் விடுதலைப் புலிகள் நன்மை அடைகிறார்கள்" என்ற சந்திரிகாவின் கூற்று உண்மைக்குப் புறம்பானது எனக் கூறப்படுகின்றது. ■

# பாதுகாப்பிற்கு இராணுவத்தையே தொடர்புகொள்ள வேண்டும்

திணைக்கள தலைவர்கள் குடிசார் நிர்வாக விடயங்களில் அரச அதிபருடனும், பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக படை அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு -அம்பாறை -பொலநறுவை மாவட்டங்களுக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கப்பு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கச்சேரியில் மாவட்ட திணைக்கள தலைவர்களை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகள் ஆயுதங்களின்றி நடமாடலாம். சோதனைச் சாவடிகளில் பரிசோதனைகளின் போது பொதுமக்களைப் போல சோதனைக்கு உட்படுத்தப்படலாம். ஆயுதங்களுடன் வருவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது நல்லெண்ண அடிப்படையில் திரும்பவும் அவர்கள் இருந்த நிலைகளுக்கு திருப்பி அனுப்பவே எண்ணியுள்ளோம்.

தற்போதைய மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் சமாதான முயற்சிகளுக்கும், அரசியல் தீர்விற்கும் முதற்படியாக இந்த ஆண்டு சமூக வாழ்வில் அமைதியையும், சமாதானத்தையும் சேர்க்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ■

# உயர்தர பரீட்சை '94

# யாழ். மாவட்டத்தின் முன்னணி மாணவர்கள்

## பொறியியல்துறையில் முகுந்தன்

### (காட்லிக் கல்லூரி)



வடமராட்சியில் புகழ்பூத்து, ஒளிவீசி வளர்ந்துவந்த கல்லூரிகளில் காட்லிக் கல்லூரியும் ஒன்று. இந்தக் கல்லூரி இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளாகக் கல்வித்தரத்தில் தனியிடத்தை வகித்து, இன்றும் தளராது தக்கவைத்துக் கொண்டிருக்கின்றது.

காட்லிக் கல்லூரி ஆண்டாண்டுதோறும் பல கல்விமான்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இந்தக் கல்லூரியில் கல்விபெற்று வெளியேறியவர்களில் அதிகமானோர் அதிசிறந்த கல்விப் பெறுபேறுகளைக் கொண்டுள்ளனர்.

பல பொறியிலாளர்களையும், மருத்துவர்களையும், விஞ்ஞானிகளையும், சட்டத்தரணிகளையும், விரிவுரையாளர்களையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இக்கல்லூரியின் பெருமை சிறீலங்காவில் மட்டும் அல்ல, உலக நாடுகளில்கூட இருந்துவருகின்றது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்து, அமரத்துவம் அடைந்த அ. துரைராசா அவர்களையும் இக்கல்லூரி பெருமகனாக்கியது.

இவர்களின் வரிசையில் இக்கல்லூரிக்குப் பெரும்புகழை ஈட்டியவர் இராஜேந்திரம் முகுந்தன். இவர் அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரத் தேர்வில் கணிதத்துறையில் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்று கல்லூரிக்கு மேலும் புகழ் சேர்த்தவர்.

தேர்வுப் பெறுபேறுகள் காட்லிக் கல்லூரியில் வெளியான அன்று, இவர் முதன்மை விடயமாக கொழும்புக்குப் புறப்பட இருந்தபோது, தும்பளை வீதியில் அவரது இல்லத்தில் பயணம் புறப்படும் நிலையில் சென்று அவரை நெருங்கியபோது, அவர் மற்றைய நண்பர்களுடன் மகிழ்ச்சியாகக் கதைத்துக் கொண்டிருந்தார். இவரிடம், நீங்கள் தேர்வு எழுதிய பின்னர், உங்களுக்கு நான்கு 'ஏ' தேர்வுப் பெறுபேறுகள் கிடைக்கும் என்ற தென்பு ஏற்பட்டதா என்று கேட்டதற்கு, "நான்கு பாடங்களும் எழுதி முடித்த பின்னர் எனக்கு இவ்வாறு தென்பு ஏற்பட்டது; ஆனால் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடம்பெறுவது பற்றி அப்போது சிந்திக்கவில்லை. கணிதம் என்றால் எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பாடம். இதனாலேயே நான் கணிதத்துறையை விரும்பினேன். சிறுவயதிலும் மற்றைய பாடங்களைவிட, கணித பாடத்தில் நல்ல புள்ளி பெறுபேறுகள் கிடைத்து வந்தன.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

## மருத்துவத்துறையில் ஜானகி

### (விக்னேஸ்வராக் கல்லூரி)

"பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்டதும், எனது சொந்த மண்ணில் சேவை செய்வதையே எனது இலட்சியமாகக் கொண்டுள்ளேன். ஊரோடு இருந்து மக்கள் வைத்திய வசதியின்றி படும் துன்பங்களை நேரில் உணர்ந்து கொண்டவள் நான். புலமைப் பரிசில் கிடைத்து வெளிநாடு சென்று பயிலும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் எனது மண்ணின் தேவை கருதி, அந்தச் சந்தர்ப்பத்தையும் உரிய முறையில் பயன்படுத்தி அறிவை வளர்க்கத் தயங்கேன்."

ஊரில் இருந்து எமது மக்கள் மருத்துவ வசதிகளின்றிபடும் அவலங்களைக் கண்டு, அதற்கு என்னால் இயன்றவரை உதவ வேண்டும் என்ற இலட்சியத்துடனேயே விஞ்ஞானத்துறையில் புகுந்து கொண்டேன் என்கிறார், கர



வெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவியான ஜானகி பொன்னம்பலம்.

1994 ஆகஸ்ட் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி மாவட்ட ரீதியில் உயிரியல் துறையில் முதலிடத்தைப் பெற்று பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பைத் தட்டிக்கொண்ட செல்வி ஜானகியைப் பாடசாலையில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மிகவும் அமைதியான சுபாவமுடைய அவரை அணுகி, ஈழநாதம் ஊடாக மாணவர் உலகிற்குத் தங்களை அறிமுகப்படுத்த விரும்புகிறோம் என்ற எமது நோக்கினை வெளிப்படுத்தியதும், மகிழ்வுடன் எமது கேள்விக்கணைகளுக்குப் பதிலளித்தார். அதனை இங்கு பிரசுரிக்கிறோம்.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

நேர்காணல்
சசிகரன்
சிவகுணபாலன்
யோகரட்ணம்

## வணிகத்துறையில் மதிதரன்

### (கனகரட்ணம் ம. ம. வி)



"பாடசாலை இழந்த மானத்தைக் காப்பாற்றி, அதனை உயர்நிலைக்குக் கொண்டு வரவேண்டியது உங்கள் கடமை என பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் எம்மீது சுமத்திய பெரும் பொறுப்பை நிறைவேற்றிவிட்டேன் என்ற வகையில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்" என்கிறார் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தகத்துறை மாணவன் பேரின்பம் மதிதரன்.

அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் வர்த்தகத் துறையில் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும், மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்ட இவரை எம் வாசகர்களுக்காகச் சந்தித்தோம்.

பெரும் பூரிப்புடன் காணப்பட்ட அவர் "பாடசாலையில் ஆசிரியர்கள் கொடுத்த ஊக்குவிப்பே நான் பெற்ற பெறுபேற்றுக்குக் காரணம்; பொருளியல் ஆசிரியர், பரீட்சைகளை நடாத்தி அதிகூடிய புள்ளி பெறும் மாணவனுக்குப் பரிசில் தருவார். காணும் நேரமெல்லாம் பாடசாலையின் பெயரை உயர்த்த வேண்டும் என்பார். இவர் போன்ற ஆசிரியர்களை மறக்கமுடியாது. பரீட்சை முடிவு வெளியானதும் என்னைவிட மகிழ்ந்தவர்கள் அவர்களே.

வர்த்தகத் துறையைப் பொறுத்தவரையில் இலகுவில் புள்ளிகளைப் பெற்றுவிட முடியாது. நடைமுறை விடயங்கள் பெருமளவில் புகுத்தப்படும் கொழும்பு போன்ற தென்பகுதியில் இருப்பவர்களுக்கே இந்த மாற்றங்களை அறிந்து கொள்ளவும் திரட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

தென்பகுதியில் உள்ள மாணவர்களுடன் எம்மை ஒப்பிடுவது தவறானது. அங்கு கற்றல், கற்பித்தல் சூழ்நிலைகள் சகலருக்கும் சாதகமாகவேயுள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் போர் சூழ்நிலையில் இருந்து பரீட்சை நடக்குமா என்ற ஏக்கத்துடனேயே கற்கவேண்டிய நிலை இருந்து வருகிறது. அடிப்படை வசதிகளான போக்குவரத்து மற்றும் மின்சார வசதிகள்கூட இல்லாது கற்று வருகிறோம்.

இருந்தும் இம்முறை வெளியான பரீட்சை முடிவுகளிலிருந்து எமது கல்வித் தரம் வீழ்ந்துவிட்டது என எவரும் கருதுவார்கள் என்று நினைக்கவில்லை. இங்கு இவ்வளவு கஸ்டத்துடன் நாம் படித்தாலும் அது பயனற்றுப் போகிறது. பல்கலைக்கழகம் புகுவதே எமது முதல் இலட்சியமாக இருக்கின்றது. அதனால் அதி உச்ச புள்ளிகளைப் பெறவேண்டிய நிலை உருவாகிவிட்டது. இம்முறை எனது சகமாணவன் ஒருவர் ஏ, 3 பி எடுத்துள்ளார். இவர் மாவட்ட மட்டத்தில் 158 ஆவது இடத்தில் இருக்கிறார். இப்படிக் கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்றபோதிலும், 'தரப்படுத்தல்' என்ற

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

## கலைத்துறையில் பிரசாந்தன்

### (யாழ். இந்துக் கல்லூரி)

கலைத்துறையில் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றதன் மூலம், தனக்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்து நிமிர்ந்து நிற்கின்றார் செல்வன் சிறீவரதராசன் பிரசாந்தன். அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தர பரீட்சையில் கலைத்துறையில் 3 ஏ, பி எடுத்ததன்மூலம் மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெற்ற இவரைச் சந்திப்பதற்காக அவரது இல்லத்திற்குச் சென்றபோது, கொழும்பு சென்றுவிட்டார் என்ற செய்தி கிடைத்தது.

இருந்தும் அவரது ஆற்றலை அவர் வாயால் பெறுவதிலும் பார்க்க பெற்றவர்களிடமிருந்து அறிந்து கொள்வதும் ஒரு மாறுபட்டதாக இருக்கும் என்பதால், அவரது தந்தையாரிடம் பேச்சுக்கொடுத்தோம்.

"அவரை யாரும் படி, படி எனக்கூறுவது கிடையாது. தானாகவே, தான் விரும்பிய நேரத்தில் படித்துக்கொள்வார்; பதினைந்து நிமிடங்கள்கூட வீட்டில் இருந்து படிப்பது மிகவும் அபூர்வம். ஆயினும் படித்துக் கொண்டிருக்கும் போதே படிக்கும் விடயத்தை மிகவும் தெளிவாகக் கற்று, அப்படியே உள்வாங்கிக் கொள்ளும் திறமை அவரிடம் இருந்தது. அதுவே அவரது சித்திக்குக் காரணம் என நான் கருதுகிறேன்.

கோப்பாய் நாவலர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற அவர், புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி கூடுதலான புள்ளிகளைப் பெற்றதன் மூலம் யாழ். இந்துக் கல்லூரியில் சேர்ந்துகொண்டார். அங்கு க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 6 டி, 2 சி பெற்றதன் மூலம் உயர்தர வகுப்பிற்குச் செல்ல தகுதிபெற்றார். மகன் பொறியியல் மாணவனாக வரவேண்டும் என்பதே எனது நெடுநாள் ஆசையாக இருந்தது. ஆனால் அவர், எனது விருப்பத்திற்கு



மாறாக கலைத்துறையில் பயில முற்பட்டார். நீண்ட நாட்களாக எனக்கும் மகனுக்குமிடையே இது குறித்து கருத்து முரண்பாடுகள் இருந்து வந்தன. இறுதியில் அவர் தனது விருப்பப்படியே தானாகவே சென்று கலைப் பிரிவில் அமர்ந்து கொண்டார். பாடசாலை அதிபரிடம் சென்று இது பற்றி நான் கதைக்க முற்பட்டபோது, அவர் மகனின் விருப்பத்திற்கு இடையூறாக இருக்கவேண்டாம் என என்னைப் பணித்ததுடன், அவன் சாதனை படைப்பான் என என்னைத் தேற்றினார். அவர் சொற்படி இன்று மகன் சாதனை படைத்திருப்பது பெருமைக்குரியதே. சிலவேளை என் விருப்பப்படி அவர் கணிதத்துறையில் கற்றிருப்பின் அவரது எதிர்காலமே பாழாகிப் போயிருக்கும். அந்தப் பாவம் என்னைச் சார்ந்திருக்கும்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே மேடைப்பேச்சுக்களில் முதல் பரிசுகளைப் பெற்று, பல தங்கப் பதக்கங்களையும் தட்டிக் கொண்டுள்ளார். இது அவரது இன்றைய புகழுக்கு அடித்தளமாக அமைந்து விட்டது.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்



காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.

சென்ற இதழ் தொடர்ச்சி

எனது கிராமம் முல்லைத்தீவு, அப்போது எமது கிராமத்தை இந்திய இராணுவம் சுற்றி வளைத்தான், இந்திய இராணுவம் எமது கிராமத்திலுள்ள குடிசை வீடுகளை தீக்கிரையாக்கினான், அதில் எமது சிறு வீட்டையும் எரித்து சாம்பராக்கினான். அவ்வேளையில் அம்மாவிற்கு எனது தங்கை பிறந்தாள், பிறந்து முப்பத்தியொரு நாட்கள் முடிந்த பின் எங்கள் அப்பா இறந்து விட்டார். எமக்கு மிகவும் கஸ்ரமான நிலை ஏற்பட்டது. பின்பு அம்மாவும் இறந்து விட்டா, எல்லாவற்றையும் அறிந்த அம்மம்மாவும் அப்பப்பாவும் என்னையும் தங்கையையும் எடுத்து வளர்த்தார்கள். அம்மாவும் அப்பாவும் எம்மை விட்டு பிரிந்ததால் எம்மை நன்றாக வளர்க்க எவருமில்லை, அம்மம்மாவும் தாத்தாவும் வயது சென்றவர்கள், அம்மம்மாவினதும் தாத்தாவினதும் சொற்கேளாமல் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போது நான் சிறுபிள்ளை தானே, அவர்களுக்கு அமைந்து நடப்பது பயனுள்ளதாய் தெரியவில்லை. நாளடைவில் எனக்கு 13 வயது ஆயிற்றுது, எனக்கு ஓரளவு அறிவு தெரியலானது. எமது ஊரிலுள்ள சிறுவர்கள் படிக்கப்போவதைப் பார்த்ததும் எனக்கும் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று, ஊரில் உள்ள ஒரு பாடசாலையில் கல்வி கற்று வந்தேன், அங்கு எனக்கு நன்றாகப் படிக்க முடியவில்லை, காரணம் எமது வீட்டில் ஒரே கஸ்ரம், நான் படிக்கப் போகிறேன் என்று தாத்தாவிடம் கூறிவந்தேன், பின்பு மாமாக்களின் உதவியுடன் ஒரு பாடசாலையில் வந்து சேர்ந்தேன், இங்கு வந்து படித்த பின்னர் தான் நான் கல்வி கற்பது காந்தருபன் அறிவுச்சோலை என்பதை அறிந்து கொண்டேன், நான் இப்போது வீட்டில் இருந்ததை விட நன்றாக வளர்ந்து விட்டேன், உடல் வளர்ச்சி மட்டுமல்ல அறிவிலும் கல்வியிலும் வளர்ந்த ஒரு மாணவனாக தற்போது, ஆண்டு 4 இல் கல்வி பயின்று கொண்டிருக்கிறேன். பல்துறை சார்ந்த அறிவியல் ஊட்டும் பெற்றோராக என்னை அரவணைத்த தலைவர் மாமா அவர்களுக்கும், அப்பா, மாமாக்கள், ஆசிரியர் அனைவருக்கும் நன்றி உள்ள மாணவனாக வளர்வேன் என்பது உறுதி. ■

ஆ. ஜெயக்குமார்

## மருத்துவத்துறையில்...

கரவெட்டி நாவலர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த நான், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின், ஆண்டு ஏழு முதல் விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றேன். சாதாரண தரம் படித்துக்கொண்டிருக்கும் போது ஏற்பட்ட நிகழ்வுகள் என்மனதை உறுத்தியதைத் தொடர்ந்து, வைத்தியராக வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. அன்றுமுதல் விஞ்ஞான பாடத்தை விரும்பிக் கற்கத் தொடங்கினேன். சாதாரண தரம் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் (8 டி) பெற்றேன்.

அதன் பின்பும் மற்றவர்கள் உயர்கல்விக்காக நகரப் பாடசாலைகளை நாடியபோதும், நான் எனது பாடசாலையிலேயே தொடர்ந்து பயின்றேன். பாடசாலையில் எமக்கு நான்கு பாடங்களில் இரண்டிற்கு மட்டுமே நிரந்தர ஆசிரியர்கள் இருந்தார்கள். அதனால் தனியார் கல்வி நிலையத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எமக்கு இருந்த ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க முன்வந்தார்கள், அவர்களின் உதவியுடன் கல்வியைத் தொடர்ந்தோம்.

பரீட்சைக்கு முற்பட்ட காலப்பகுதியில் வடமராட்சியில் 'ஊற்று' நிறுவனம் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து, விரிவுரைகளையும் பரீட்சைகளையும் நடாத்தியது. இந்நிறுவனம் நடாத்திய பரீட்சையில் தோற்றிய பின்புதான் கல்வியில் எனது நிலையை நான் உணர்ந்துகொண்டேன். விலங்கியல் பாடத்தில் எவ்வளவு தூரம் பின் நிற்கிறேன் என்பதை உணர்ந்துகொள்ள அந்தப் பரீட்சை ஓர் அளவுகோலாக அமைந்து விட்டது. அதன் பின்பே விலங்கியலில் கூடிய கவனம் செலுத்தி ஊன்றிப் படித்தேன்.

பாடசாலைக் கல்வியுடன் தனியார் கல்வி நிறுவனமும் பெரும் பங்காற்றியது என்பதை மறுக்க விரும்பவில்லை. பாடசாலையில் ஆய்வுகூட வசதிகள் உள்ளன. பெரியளவில் சகல வசதிகளும் அங்கு இல்லாத போதிலும், அடிப்படை வசதிகள் இருந்தன. அதன் மூலமும் எனது கல்வியை வளப்படுத்திக் கொண்டேன். தூர இடங்களுக்குச் சென்று கல்வி கற்பதை நான் என்றுமே விரும்பியது கிடையாது. காலையில் எழுந்து கற்கும் பழக்கம் சிறுவயதிலிருந்தே என்னிடம் இருந்ததில்லை. இரவில் ஏழு மணிமுதல் பத்துமணி வரையுமே படிப்பிற்காகச் செலவிடுவேன்.

பரீட்சை எழுதிமுடிந்ததும் நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்தியைப் பெறுவேன் என்ற நம்பிக்கை எழுந்தது. ஏனைய பிரதேச மாணவர்களின் கல்வித் தரத்தை எடை போட்டுக்கொள்ள எனக்கு வாய்ப்பு இல்லாது போனதால் மாவட்ட ரீதியில் முதலிடம் கிடைக்கும் என்ற சிந்தனையே என் மனதில் எழவில்லை.

என் சகோதரர்கள் இருவர் மருத்துவ, பொறியியல் துறைகளில் கற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் அவர்கள் இங்கு இல்லாததால் கல்வியில், அவர்களது உதவி எனக்குக் கிடைக்காது போய்விட்டது. அந்த வகையில் நான் துரதிஸ்டசாலி என்றே கூறலாம்.

இந்தக் கல்லூரியில் சிறந்த பெறுபேறுகள் வராமைக்குக் காரணம், சாதாரணதரம் கற்று சித்தியடைந்தவர்கள் உயர் கல்விக்காக நகரப் பாடசாலைகளை நாடியோடுவதும், கற்பிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பதுமே என நினைக்கிறேன். விஞ்ஞானத்துறை வளர்ச்சியடையாமைக்குக் காரணம், சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள்கூட கலை, வர்த்தகத்துறைகளை நாடுவதே. ஒரு சிலர் மட்டுமே மற்றைய துறைகளை நாடுகின்றனர்.

பல்கலைக்கழக கல்வியை முடித்துக் கொண்டதும், எனது சொந்த மண்ணில் சேவை செய்வதையே எனது இலட்சியமாகக் கொண்டுள்ளேன். ஊரோடு இருந்து மக்கள் வைத்திய வசதியின்றி படும் துன்பங்களை நேரில் உணர்ந்து கொண்டவள் நான். புலமைப்பரிசில் கிடைத்து வெளிநாடு சென்று பயிலும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் எனது மண்ணின் தேவை கருதி, அந்தச் சந்தர்ப்பத்தையும் உரிய முறையில் பயன்படுத்தி அறிவை வளர்க்கத் தயங்கேன் என்கிறார் ஜானகி பெருமையுடன்.

அமைதியாக அருகில் அமர்ந்து செவிமடுத்திருந்த அதிபரிடம் அவரது மாணவிபற்றி கேட்டபோது, கடந்த காலங்களிலும் எமது பாடசாலை பல சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. இருந்தபோதிலும் உயிரியல் துறையில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றது இதுவே முதல் தடவை என்பதில் பெருமையடைகிறேன்.

எமது பாடசாலை சனவரியில் பவளவிழாவைக் கொண்டாடியது. இவ்வேளையில் இம்மாணவி நிகழ்த்திய சாதனை அதற்கு மகுடம் சேர்த்தாற்போல் நிற்கிறது. இவர்களது குடும்பம், கல்விக் குடும்பம். இவரது கல்வி சீரானது. பரீட்சைக்கென கற்பது கிடையாது. சிறந்த ஒழுக்கமும், அமைதியான சுபாவமும் கொண்ட இவர், எமது பாடசாலை மாணவிகளின் சிரேஸ்ட மாணவத் தலைவி என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது விடயமே. இவர் பாடசாலை உயர்தர மாணவமன்றச் செயலாளராகவும் விளங்குகிறார். இவரது உயர் நிலைக்கு பாடசாலையே காரணம் என நான் கூறவரவில்லை. கல்வித் திணைக்களம் செய்துதரத் தயங்கியதை, பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சபையும் முன்னின்று செய்துகொடுத்தன. முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இருக்கவில்லை. அதனால் எமது கல்லூரியில் கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இரு பழைய மாணவர்களே இலவசமாக தாவரவியல், விலங்கியல் பாடங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். தற்போது 'புலமைப் பரிசில் நிதியம்' ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். இதன்மூலம் எமது பாடசாலையிலிருந்து சித்தியடைந்து பல்கலைக் கழகம் புகும் மாணவர்களின் உயர்கல்விக்கு புலமைப் பரிசில்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை வருங்கால மாணவர்கள் தமது கல்வியை வளர்த்திட ஓர் ஊக்குவிப்பாக அமையும்" என்றார். ■

## வணிகத்துறையில்...

அரசின் திட்டமிட்ட பழிவாங்கலுக்கு அவரும் இலக்காகிவிட்டார். உண்மையிலேயே எனக்கு அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடம் கிடைத்துவிட்டது என்பதில் எவ்வளவிற்கு மகிழ்ந்தேனோ, அதே அளவிற்கு நண்பனின் நிலை கண்டு வேதனை அடைந்தேன். முடிவுகள் வெளியாகிப் பல நாட்களாகியும் அவரைச் சந்திக்கும் மனத்துணிவு எனக்கு இல்லாது இருக்கின்றது.

'சாண் ஏற முழம் சறுக்கும் நிலை'யே இன்று தமிழீழ மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தன்நம்பிக்கையும் விடா முயற்சியும் இருந்தால் எதிலும் வெற்றி பெற முடியும் என்பதை, என் பாடசாலை வாழ்க்கையில் நான் உணர்ந்துள்ளேன்.

என்னுடைய பெறுபேற்றுக்கு பாடசாலை, தனியார் கல்வி நிலையம், ஈழநாதம் செய்தித்தாள் போன்றவற்றைக் காரணமாகக் கூறலாம். பாடசாலையில் ஆசிரியர்களின் தனிப்பட்ட ஊக்குவிப்புடன், வர்த்தக நூல் நிலையமும் இருப்பதைக் குறிப்பிடலாம். நான் எனக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்களில் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவேன். அங்கு எமக்குப் பயன்படக்கூடிய வகையில் பல புத்தகங்கள் உள்ளன. அவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வேன்.

இதைவிட தனியார் கல்வி நிலையத்திலும் கற்றேன். இரு இடங்களில் கற்பதால் இடையூறுகள் இருக்கவில்லை. இரு இடங்களையும், ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தினேன். மேலும் தேவையான நடைமுறை விடயங்களை ஈழநாதம் செய்தித்தாளின் மாணவர் அரங்கிலிருந்து திரட்டிக் கொண்டேன். மாணவர் அரங்கை ஒழுங்காக திரட்டிக் கற்றுக்கொண்ட ஒரு மாணவன், கடந்த பரீட்சையில் இருபது புள்ளிகளை மிகச் சுலபமாகப் பெற்றிருப்பான் என்பதில் ஐயமில்லை. நாளாந்தம் ஏற்படும் மாற்றங்களைத் திரட்டி மாணவர் அரங்கில் பிரசுரித்தால், வருங்கால வர்த்தகத் துறை மாணவர்களுக்கு அது பெரும் உதவியாக இருக்கும் எனக் கருதுகிறேன். அத்துடன் பரந்து பட்டளவில் ஆக்கங்கள் திரட்டி வெளியிடுவதினால் பலருடைய விளங்கங்களைப் பெற அது உதவியது.

நான் அதிகாலையில் எழுந்து கற்பது கிடையாது. அதற்கு எனது உடல் நிலையே காரணம். இரவில் பதினொரு மணிவரை கற்பேன். ஆரம்பக் கல்வியை யாழ். இந்த ஆரம்பப் பாடசாலையில் கற்ற நான், ஆண்டு ஆறு முதல் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலேயே கல்வியைத் தொடர்ந்தேன். சாதாரண பரீட்சையில் 5 டி, சி, 2 எஸ் எடுத்தேன். கணிதமே எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பாடம். இருந்தும் எனது சகோதரர்கள் வர்த்தகத்துறையில் கல்வி கற்றமையால் எனது உயர் கல்விக்கு பக்கபலமாக இருப்பார்கள் என்பதால், நானும் வர்த்தகத்துறையைத் தேர்ந்தெடுத்தேன். கல்வியுடன் பாடசாலை உயர்தர மாணவர் மன்ற தலைவராகவும், 'இன்ரறக்ற்' கழக உறுப்பினராகவும் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு ஓரளவு பங்களிப்பை வழங்கியுள்ளேன். நாடகத்துறையில் ஆர்வம் உள்ளது. இதுவரை ஐந்து நாடகங்களில் நடித்துள்ளேன்.

பல்கலைக்கழகம் புகவேண்டும் என்ற எனது இலக்கை அடைந்துவிட்டேன். பல்கலைக்கழகக் கல்வியை முடித்தாலும் தொடர்ந்தும் மேலே படிக்கத் திட்டமிட்டுள்ளேன். இது எனது தாயாரின் பெரு விருப்பமும்கூட" என்றார். ■

## கலைத்துறையில்...

தற்போது யாரும் அவருடைய விருப்பத்திற்குத் தடையாக இருப்பதில்லை. பாடசாலை கல்வியுடன் தனியார் கல்வியையும் அவர் நாடியிருந்தார். ஒவ்வொரு துறையிலும் பிரபல்யமான ஆசிரியர்களை அணுகித் தனது கல்வியை வளர்த்துக் கொண்டார். கல்விக்கு ஒதுக்கும் நேரத்தைவிட, மேடைப் பேச்சுக்களுக்கே கூடுதலான நேரத்தை செலவிட்டுவரும் அவர், தற்போது தன்னைக் கலைத்துறையிலேயே ஈடுபடுத்தி வருகிறார். பாடசாலையில் சிரேஸ்டமாணவத் தலைவராக இவர் இருந்துவருவதும் எமக்குப் பெருமையாகவுள்ளது. எதிர்காலத்தில் பல்கலைக்கழகக் கலைத்துறைப் பேராசிரியராக வர வேண்டும் என்பதே அவரது நீண்ட காலக் கனவாக இருந்து வருகிறது. அவருடைய கனவு நனவாகும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம்" என்றார் அவரது தந்தையார். ■

# பிரான்சில்
# தமிழ்ச்சோலை கல்வி நிலையம்
## முதலாம் ஆண்டு விழாவும் பொங்கல் விழாவும்

15. 01. 1995ஞாயிற்றுக்கிழமை Noisel என்னுமிடத்தில் 'தமிழ்ச்சோலை' கல்வி நிலையங்களால் பொங்கல் விழாவும் முதலாம் ஆண்டு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது கல்வி நிலைய மாணவ, மாணவிகளால் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

மேற்படி நிகழ்ச்சிக்கு கல்வி நிலையப் பொறுப்பாளர் ஆசிரியர் கதிர்காமநாதன் அவர்கள் தலைமை தாங்கினார். முதலில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரெஞ்சுக் கிளையின் தலைவர் திரு. பிரான்சிஸ் சேவியர் தலைமை உரை வழங்கினார். இதன்போது, அவர் நாம் அந்நியமண்ணில் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்றும் எமது சொந்தத் தாய்மொழியை எமது பிள்ளைகள் கட்டாயம் கற்கவேண்டும் என்ற அவசியத்தையும் எடுத்து விளக்கினார்.

அடுத்து, தமிழ்ச்சோலையின் மாணவ, மாணவிகள் 'ஏறுது பார் கொடி ஏறுது பார்' என்ற தமிழீழத் தேசியக் கொடிப் பாட்டை அவர்களுக்கே உரிய செல்ல மொழியால் பாடினார்கள். இதனைத்தொடர்ந்து 'ரொர்சி' தமிழ்ச்சோலை கல்வி நிலைய மாணவி செல்வி ஸ்வரனுதா ஜெயபாலன் பரதநாட்டியம் ஆடி, அனேகரின் பாராட்டுதலைப் பெற்றார். இதனையடுத்து விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக்கிளைப் பொறுப்பாளர் திரு. மனோகரன் அவர்கள் சிறப்புரை வழங்கினார். "வெளிநாடுகளில் வளரும் எமது தமிழ்ப்பிள்ளைகள் நாளை தமிழீழம் திரும்பும்போது, தமிழீழத்தில் உள்ள பிள்ளைகளோடு சரளமாகத் தமிழ்பேச, எழுதக்கூடிய நிலையில் அவர்களை நாம் தயார்படுத்தவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அத்துடன், "எமது சிறார்கள் தமிழரின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் வீரத்தையும் அறிந்துகொள்ள தமிழ்மொழி முதன்மையானதாகும்; எனவே ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளுக்கு தமிழ்மொழியை அக்கறையுடன் கற்பிக்க முன்வரவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

இவரின் பேச்சைத் தொடர்ந்து, 'நொசிலுகுறோன்' கல்வி நிலைய மாணவன் செல்வன் கரிகாலன் தமிழைப் பற்றியும், தமிழீழ விடுதலை பற்றியும் நிதானமாக, சிறப்பாகப்பேசி அனைவரினதும் கைதட்டலைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, ரொர்சி கல்வி நிலைய மாணவ, மாணவிகளான ஜனனி சிறீகாந்தன், யுவன் சிறீகாந்தன், லவன் சிறீகாந்தன், விஜிதா சோமசுந்தரம், ஜெசிதா சோமசுந்தரம், திவ்யா விஜயன், நிதாப்பிரி தியாகராஜா, கேமராஜி வைத்திலிங்கம் ஆகியோர் பாட்டுப் பாடி, சிறப்பாக அபிநயம் செய்தார்கள். மீண்டும் ரொர்சி கல்வி நிலைய மாணவிகளான ஜனனி சிறீகாந்தன், விஜிதா சோமசுந்தரம், ஜெசிதா சோமசுந்தரம் ஆகியோர் 'காக்கைச் சிறகினிலே' என்ற பாடலுக்கு புன்னகைத்தபடி அபிநயம் செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து 'செவனிலுறெம்பின்' கல்வி நிலைய மாணவி ரவி சாலினி 'சின்னஞ்சிறு கண்ணன்' என்ற பாடலுக்கு மிகவும் நன்றாக அபிநயம் செய்தார்.

தொடர்ந்து அதே கல்வி நிலையத்தைச் சேர்ந்த, செல்வன் நரேஸ் நல்லையா, செல்வன் கெவின் பாஸ்கரன் ஆகியோர் தமிழைப் பற்றியும் பொங்கல் பற்றியும் பேசினார்கள். அதுபோல் 'ரொர்சி' கல்வி நிலையை மாணவ மாணவிகளான யுவன், லவன், நிதாப்பிரி, கேமராஜி ஆகியோரும் தமிழில் பேசவேண்டும் என்ற ஆர்வத்துடன் பேசினார்கள். இவர்களின் தமிழ் உச்சரிப்பு நன்றாக இல்லாதுவிட்டாலும், துணிந்து பேச முன்வந்ததைப் பாராட்டுகின்றோம். அதனைத் தொடர்ந்து Chells கல்விநிலைய மாணவி செல்வி சோபியா பெர்ணாண்டோ 'சின்னஞ்சிறுகண்ணன்' என்ற பாடலுக்கு மீண்டும் அபிநயம் செய்தார்.

அடுத்ததாக, 'தமிழ்ச்சோலை' கல்வி நிலைய ஆசிரியைகளான திருமதி கலாநாதன் அன்பரசி, செல்வி அன்னலிங்கம் றெஜினா, திருமதி சிறீகாந்தன், செல்வி ஜெயவாணி கதிரமலை, செல்வி வேஜினி செல்வநாயகம், முன்னைநாள் ஆசிரியை திருமதி மைதிலி ஜெகதீஸ்வரன் ஆகியோரும் ஆசிரியர்களான திரு. தேவா, திரு. ரகு ஆகியோரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரெஞ்சுக் கிளைப்பொறுப்பாளர் திரு. குகன் அவர்களால் தமிழீழப்படம் பொறிக்கப்பட்ட கேடயமும், கரும்புலிகள் இசைத்தட்டும் அன்பளிப்புச் செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இக்கௌரவிப்பின்போது திரு. குகன் கூறுகையில், "ஓர் ஆசிரியத் தொழில் எத்தகைய கஸ்ரமானதும், பொறுப்பு வாய்ந்ததும், புனிதமானதும் என்பதை விளக்கினார். அதேவேளை பல தடைகளைத்தாண்டி, இப்பணிக்கு வந்துள்ளமைக்குப் பாராட்டுத் தெரிவித்தார். இதன்பின், தமிழீழத்தின் எதிர்கால இசைக் கலைஞர்களான செல்வன் ருபன், செல்வன் தமிழ்ச்செல்வன் ஆகியோரது ஓர்கன் இசையுடன் புரட்சிக் கீதங்கள் பாடப்பட்டன. பாடல்களைத் திரு. பொற்குமார், செல்வி ராஜி ஆகியோர் வழங்கினார்கள். தபேலா, டொல்கி ஆகியவற்றை நீண்டகாலமாக இத்துறையில் பங்காற்றிவரும் திரு. சதா அவர்கள் பிரமாதமாக வாசித்தார். அவருடன் இணைந்து பக்கவாத்தியங்களை திரு. தங்கேஸ், திரு. தர்மா ஆகியோர் வழங்கினார்கள்.

இறுதியாக தமிழ்ச்சோலைக் கல்வி நிலையப் பொறுப்பாளர், ஆசிரியர் கதிர்காமநாதர் அவர்கள் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள்கொண்ட அன்பளிப்பை வழங்கினார். இவ் அன்பளிப்பைத் தந்து உதவிசெய்தவர் திரு. கலாதரன் என்பதை கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவேறியது. ■

# யேர்மனியில்
# தைப்பொங்கல் விழா

போர் மேகங்களுக்கு மத்தியில் தமிழீழத்தில் சமாதானத்தின் ஒளிக்கீற்று மெதுவாகத் தோன்றுகின்றதனால், மக்கள் மத்தியில் சிறிது நிம்மதி. இந்த நிம்மதியுடன் பொங்கும் பொங்கல், இம்முறை தமிழீழத்திலும் உலகெங்கிலும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த வரிசையில் கடந்த 14. 01. 1995 இல் பிராங்போட் நகரில் உலகத் தமிழர் இயக்கம் சிறப்பாகப் பொங்கல் விழாவினைக் கொண்டாடியது. மாலை 5. 30 மணிக்கு கலாநிதி ஏவா மரியா புளும் (ம. கு.) அவர்கள் மங்கள விளக்கேற்றி, விழாவினைத் தொடக்கி வைத்தார். "கடந்த ஆண்டு பொங்கல் விழாவிற் பங்குபற்றியது நினைவுக்கு வருகின்றது" என்றுகூறி, கடந்த ஆண்டுப் பொங்கல் விழாவினை நினைவுகூர்ந்தார். "சகோதர, சகோதரிகளே" என்று தமிழில் பேசத் தொடங்கியதும் பார்வையாளர்களின் கரவொலி மண்டபத்தை அதிரவைத்தது. தொடர்ந்து அவர் பேசுகையில், "உலகெங்கும் அறுவடை நாள் கொண்டாடப்படுகின்றது; பயிர்கள், பழங்கள் எல்லாம் நன்கு விளைச்சலைத் தந்துநிற்கும் இலையுதிர் காலத்திலே, யேர்மன் மக்கள் அறுவடை நாளைக் கொண்டாடுகின்றார்கள். இலங்கையிலே போர் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிப் பல நாடுகளிலும் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அகதி அமைப்புக்கள் பலவழிகளிலும் உதவிபுரிந்து வருகின்றன. இதனால் இங்கும் ஞாயிறுதோறும் தமிழ் கல்வியும், மற்றும் விளையாட்டுப் போட்டிகள், கலை -பண்பாட்டை வளர்த்திட பல தமிழ்ச் சங்கங்கள் என்று செயற்பட்டு வருகின்றன. அவற்றிற்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் மேலும் பேசுகையில் மீண்டும் அமைதி, சமாதானம் ஏற்பட்டு எல்லோரும் மகிழ்ச்சியுடன் பொங்கல் விழாவினைக் கொண்டாடவேண்டும் என்பதே எங்கள் எல்லோருடைய விருப்பம்" என்று கூறினார்.

உலகத் தமிழர் இயக்கப் பிரதிநிதி திரு. நரேந்திரசிங்கம் அவர்களின் வரவேற்புரையில், "என்றோ ஒரு நாள் நாம் எல்லோரும் நாடு திரும்பவேண்டியவர்களே; அதுவரை தற்காலிகமாக எம்மை இங்கு தங்க அனுமதித்தமைக்கு இந்த நாட்டு அரசுக்கும், மக்களுக்கும் எமது நன்றிகள்" என்று குறிப்பிட்டார். நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கூடுதலான இடத்தைப் பிடித்தது நடனம், கும்மி, மீனவ நடனம், செம்பு நடனம், தாம்பாள நடனம் மற்றும் பல சிறுமியர்களது நடனங்களாகும். செம்பு நடனம், தில்லானா எனப்பல வகை நடனங்களை கண்ணுக்கு குளிர்ச்சியாவும், மனதைத் தொடும் வகையிலும் தமிழீழத்து நிகழ்வுகளை மையமாகக் கொண்டு மிகவும் சிறப்பாக அமைத்திருந்தார், வாணி நர்த்தனாலய அதிபர் நாட்டிய தாரகை திருமதி வானதி தேசிங்குராஜா. நாதஸ்வர இசை காற்றில் மிதந்துவர கைகளிலே தீபம் ஏற்றி தலையிலே செம்பு வைத்து, தாம்பாளத்திலே நின்று நடனமாடிய செல்விகள் துஸ்யந்தி, தமிழரசி ஆகியோர் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டனர். இவர்களுடன் இணைந்து சிறுமி தேசிங்குராஜா "புலிமாமா, புலிமாமா நான் வரட்டா போராட" என்ற பாட்டிற்கு ஆடிய நடனம் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

இவ்விழாவிலே, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்பட்ட, அதிஸ்டசீட்டிற்கான முதற்பரிசு வழங்கப்பட்டது. இப்பணத்தினை (5000 டி. எம்.) பிராங்போர்ட் பிரதிநிதி திரு. கனகராஜாவிடமிருந்து யேர்மன் துடுப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. சுவிற்றா வாங்கி, அதனை முதலாம் பரிசுக்குரிய பாக்கித்தான் நாட்டைச் சேர்ந்த திரு. சௌந்திரியிடம் கொடுத்தார்.

விழா நிகழ்ச்சிகளுக்கிடையே மாணவர் அமைப்பைச் சேர்ந்த மாணவர்களின் நகைச்சுவை நிகழ்ச்சி எல்லோரையும் வயிறு குலுங்க, குலுங்கச் சிரிக்க வைத்தது.

உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் திரு. காங்கேயமூர்த்தி அவர்கள் பேசுகையில் "நாம் எங்கிருந்தாலும் எமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்; அதன் அடிப்படையில்தான் உலகத் தமிழர் இயக்கம் இங்கே பொங்கல் விழாவினைக் கொண்டாடுகின்றது. அதுமட்டுமன்றி இங்கு வாழ்கின்ற எனது தமிழ்க் குழந்தைகள் தமிழ் கற்றிடவேண்டும் என்பதற்காக ஒரு கட்டமைப்பை உருவாக்கி, ஒரே பாடத்திட்டத்தின்கீழ் யேர்மன் முழுவதிலும் தமிழாலயம் அமைத்து, கல்விப்பணி புரிந்து வருகின்றது. உலகத் தமிழர் இயக்கத்துடன் பல தனியார் பாடசாலைகளும் சேர்ந்து செயற்படுகின்றன. எனவே பிராங்போர்ட்வாழ் தமிழ் மக்களும் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

தொர்டர்ந்த நிகழ்ச்சிகளில் மாணவர் அமைப்பின் நாடகம் மிகவும் பாராட்டப்பட்ட நாடகமாக அமைந்து. அதனைத் தயாரித்து வழங்கிய, திருமதி ஜெயந்தி நிமலன் பாராட்டையும் பெற்றார். இறுதியாக உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதியான திரு. லம்பேட் அவர்களின் நன்றியுரையுடன் பொங்கல்விழா சிறப்பாக முடிவடைந்தது. நிகழ்ச்சிகள் யாவும் உடனுக்குடன் தமிழ் மாணவர்களால் யேர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக அமைந்தாலும், சிறுமி உமா தமிழ் அறிவிப்பாளராக விளங்கியதும் மிகவும் பாராட்டைப்பெற்றது. யேர்மன் மொழி, நிகழ்ச்சி அறிவிப்பாளர் செல்வன் சிறீசங்கரும் பாராட்டப்படவேண்டியவரே. ■

# இலண்டனில் கேணல் கிட்டுவினதும்...

தையும் போராட்ட முன்னெடுப்புடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிய பங்கினையும், அவரால் வரையப்பட்ட ஓவியங்களில் காணப்படும் உண்மை -உயிர்ப்பு ஆகிய தன்மைகளையும் தொகுத்து வழங்கினார்.

இவரது உரையைத் தொடர்ந்து, இலண்டன் சைவ முன்னேற்ற சங்க கலை நிலைய வீணை ஆசிரியை திருமதி செந்தில்செல்வி வாமநானந்தனின் மாணவிகளினது "வீணாஞ்சலி" இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் போராளிப் பாடகர்களின் "தென்றல் தவழ்ந்து வரும் மண்ணில்..." என்ற பாட்டுக்கு இசைக்கப்பட்ட வீணா கானம் மிகச் சிறப்பாக இருந்ததை சபையோரின் கரவொலிகள் வெளிப்படுத்தின.

வீணாஞ்சலியைத் அடுத்து, பிரித்தானியக் கம்பன் கழகப் பாலகர்கள் வழங்கிய "களத்தில்" என்ற இசைக்கவிதை நிகழ்வு இடம்பெற்றது. அரங்கு நிறைந்து காணப்பட்ட பாலகர்களில் சிலர், தேசப்பற்றுக் கொண்ட தமிழீழத்து உழவர்களாகவும், சிலர் அந்நியநாட்டு வாழ்வில் மூழ்கிவிட்டு, 'தளபதி கிட்டு' சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கி குற்ற உணர்வுக்குட்பட்டு இறுதியில் தமிழீழ மக்களுடன் சேர்ந்து வாழ்பவர்களாகவும், மழலைகளுக்குரிய சிறு தவறுகளுடன் ஆனால் சிறப்பாக நடித்து பெரும் பாராட்டைப் பெற்றனர். அந்நிய நாட்டில் வாழ்ந்து விட்டு தமிழீழம் வந்தவர்களைப் பார்த்து "குண்டுச் சத்தம் கேட்டாயா..." என தமிழீழ உழவர்கள் குரல் எழுப்பியதுடன், இறுதியில் அன்புடன் உபசரித்து அவர்களையும் அரிவு வெட்ட வைத்த காட்சி, மண்டபத்தில் இருந்தவர்களுக்கு ஆழமான உணர்வொன்றை புரிய வைத்தது. மழலைகளான இவர்கள், தமிழீழம் காணும் மாமேதைகளாக வளர்ந்து வர வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

இடைவேளைக்கு முன் நிகழ்வாக நூல் வெளியீடு, இசைத்தட்டு வெளியீடு என்பன இடம்பெற்றன. கிட்டண்ணா அவர்கள் அந்நிய நாடுகளில் இருந்த போது, "என் இனியவளுக்கு..." என்ற தலைப்பில் எழுதிய கடிதங்களில் . தேச விடுதலைப் போராட்டம் சம்பந்தமான அவரது உணர்வுகளைப் வெளிப்படுத்தும் பகுதிகளைத் தொகுத்து தமிழீழத்தில் எழுதப்பட்ட நூல் ('என் இனியவளுக்கு') வல்வை நலன்புரிச் சங்கத்தின் பிரித்தானியாக் கிளையின் ஆதரவுடன் மறுபதிப்பு செய்யப்பட்டு, அதன் தலைவர் சிவகுமார் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் முதல் பிரதியை லெப். கேணல் புலேந்திரன் அவர்களின் துணைவியார் பெற்றுக் கொண்டார். அதேவேளை கிட்டண்ணாவினதும், ஒன்பது வீரமுத்துக்களினதும் நினைவாக தமிழீழத்தில் பாடப்பட்ட பாடல்களை உள்ளடக்கி 'அழியாத சுவடுகள்' என்ற 'ஒலி இழைத் தட்டு' ஒன்றும் வெளியிடப்பட்டது. இதனை மிருதங்கக் கலைஞன் முத்து சிவராசா ஆசிரியர் வெளியிட முதல் பிரதியை நடன ஆசிரியை ரஜனி சுரேஸ்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இடைவேளையைத் தொடர்ந்து, இலண்டன் கலைஞர்கள் வழங்கிய புலவர் சிவநாதன் அவர்களின் கலைப் படைப்புக்களில் ஒன்றான, 'சத்தியாஞ்சலி' என்ற நாடகம் இடம்பெற்றது. "விடுதலைக்கு வித்தான கேணல் கிட்டு எனும் மாவீரனின் உருவப் படத்திற்கு சத்திய சீலராகப் போற்றப்படும் காந்தி அவர்கள் வணக்கம் செலுத்துவதைப் பொறுக்கமாட்டாத இந்திய வல்லாதிக்கம் காந்தியையே சுட்டுக் கொன்று, தனது பிராந்திய வல்லாதிக்கப் பசியைத் தீர்த்துக் கொள்கின்றது" என்ற கருப்பொருளை வைத்து 'சத்தியாஞ்சலி' நாடகம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதில் பங்கெடுத்தவர்கள் யாவரும் சிறப்பாக நடித்ததுடன் இந்திய வல்லாதிக்கம், எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தடையாக எந்தளவிற்கு தனது மேலாதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது என்பதையும் சிறப்பாக வெளிப்படுத்தினர்.

கலைப்படைப்புக்களின் இறுதி நிகழ்வாக 'கிட்டுவின் ஓவியக் காட்சிகள்' என்ற தலைப்பில், நடன ஆசிரியை திருமதி பத்மினி குணசீலன், புலவர் சிவநாதன் ஆகியோர் இணைந்து வழங்கிய நாட்டியாஞ்சலி இடம்பெற்றது. மிகவும் பாராட்டைப் பெற்ற புதுமையான நிகழ்வாக

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

# நேப்பாள மக்களின் தீர்ப்பு...

நேப்பாளக் காங்கிரஸ் பெரு வெற்றி பெற்றது. முறைப்படி "கணேஸ்மான்சிங்" என்கிற மூத்த தலைவரே பிரதமராக வந்திருக்க வேண்டும். ஆனால் இந்தியத் தலையீட்டால் கொய்ராலா பதவிக்கு அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து இந்தியாவின் சுயரூபம் நேப்பாளத்தில் அம்பலமாயிற்று. நேப்பாளக் காங்கிரசிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமான உறவும் முறிந்தது.


## இந்திய எதிர்ப்பு வலுத்த விதம்

ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் அப்போதிருந்த நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சியும் கொய்ராலாவின் இந்தியச் சார்புப் போக்கிற்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தின. இந்திய அழுத்தத்திற்கு பணிந்த கொய்ராலா நேப்பாளத்தின் நாடாளுமன்றின் அனுமதியைப் பெறாமலேயே, நேப்பாளத்தின் இயற்கை மூலவளங்களை இந்தியாவின் நன்மைக்காகப் பயன்படுத்த அனுமதித்தார். 1991 ஆம் ஆண்டு மார்கழியில் நிர்வாகப் பங்கீடு, வணிகம், போக்குவரத்து போன்றவற்றில் இந்தியாவுக்குச் சாதகமான முறையில் நாடாளுமன்றிற்குத் தெரியாமலேயே உடன்பாட்டுக்கு கொய்ராலா வந்தார். அதிலும் இந்திய அரசு மகாக்காளி ஆற்றில் அணைகட்டி நீர்மின்சார ஆலையொன்றை அமைக்க 577 கெக்டயர் நேப்பாள மண்ணை 'தானக்பூர்' உடன்பாடு மூலம் இந்தியாவுக்குத் தாரை வார்த்தார். அதுபோலவே முன்னைய இந்தியப் பிரதமர் சந்திரசேகரின் உறவினரொருவருக்கு வணிகச் சலுகைகள் வழங்கியதாக டெல்லிப் பகுதிப் பொலிசார், நேப்பாளத்தின் முன்அனுமதியின்றி நேப்பாளப் பகுதிக்குள் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்துவதாக -நேப்பாளத்தில் குடியேறிய இந்தியத் தொழிலாளர்க்கு சாதகமான முறையில் சட்டங்கள் இயற்றியதாக -பல இந்தியரை நேப்பாளக் குடிமக்களாக்கும் வகையில் பிரசாவுரிமைச் சட்டங்களை மாற்றியதாக -கொய்ராலா மீது கடும்கண்டனம் கம்யூனிஸ்ட் கட்சியால் தெரிவிக்கப்பட்டது. இங்குள்ள விந்தை என்னவென்றால் இத்தகைய பல நடவடிக்கைகளை நேப்பாளத்தின் உயர் நீதிமன்றே சட்டவிரோதம் எனக் கூறிவிட்டமைதான். நேப்பாளத்தின் இயற்கை வளங்களை அந்நிய நாட்டிற்கு அளிப்பதாயின் நாடாளுமன்றின் 2/3 பெரும்பான்மை ஆதரவு வேண்டும் என உயர்நீதிமன்று தீர்ப்பளித்து விட்டது.

இவையெல்லாவற்றையும்விட இந்திய எதிர்ப்பு வாதத்தினை நேப்பாளத்திலே கொழுந்து விட்டெரியச் செய்த சம்பவமாக CPN (UML) கட்சியின் செல்வாக்கு மிக்க செயலாளரும் 'தானக்பூர்' உடன்பாட்டை மிகக் கடுமையாக எதிர்த்தவருமான மதன் பண்டாரி மிக்கசந்தேகமான முறையில் ஜீப் விபத்தொன்றில் சென்ற ஆண்டு மே மாதம் 16 ஆம் நாள் மாண்டுபோனார். இது தற்செயல் விபத்து என அரசு கூறிய போதும் பண்டாரியின் கொலை ஒரு உள்ளூர் சர்வதேச கூட்டுச் சதியெனக்கூறி பலத்த ஆர்பாட்டங்களை பொதுவுடமைக் கட்சிகள் நேப்பாளத்தில் தொடங்கின. றோவின் தலையீடு இதில் உள்ளது என்றும் றோவே இவ்விபத்தைத் திட்டமிட்டது என்றும் நேப்பாளத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனவே இந்தியதாசரான கொய்ராலாவை பதவி இறக்காமல் ஓயோம் என, பொதுவுடமைக் கட்சிகள் தொடங்கிய இயக்கத்திற்கு நேப்பாளக் காங்கிரஸ் கட்சியின் உயர் தலைவரான கணேஸ் மான்சிங்கும் தலைவரான பட்டாராயும் ஆதரவளித்தனர். இவ்வாறாக கொய்ராலா பதவி இழந்தார். இந்திய முகவராகவிருந்த அவர் எதிர்காலம் கேள்விக் குறியாகி விட்டது.

தொடக்கத்தில் 1949 ஆம் ஆண்டு கல்கத்தாவில் முளை விட்ட நேப்பாளக்கம்யூனிஸ்ட் கட்சி -நேப்பாள மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சி CPN (M) எனப்பட்டது. எனினும் பின்னர் சருவதேச பொதுவுடமை நிலைப்பாடுகட்கு ஏற்ப பலவாக இக்கட்சி சிதறியது. எனினும் 1990 ஆம் ஆண்டு காத்மண்டுக்கு வருகைதந்த மேற்குவங்க முதல்வர் ஜோதிபாசுவின் முயற்சியால் இரு பிரதான பொதுவுடமை கட்சிகள் இணைந்தே CPN (UML) ஐ உருவாக்கினர். இதன்மூலம் உலகின் ஒரேயொரு இந்து இராச்சியத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆட்சிசெய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சியும் உறுதியான பெரும்பான்மை பெறாத நிலையில், நேப்பாள அரசியலின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. இருப்பினும், இந்திய மேலாண்மைக்குப் பலத்த அடியினை நேப்பாள மக்கள் கொடுத்ததின் மூலம், தமது தேசிய கௌரவத்தை உலகத்தின் முன்னே உயர்த்திவிட்டனர் என்பதே நாம் மனம்கொள்ளவேண்டிய செய்தி. ■

# தாய்மண் நேசம்கொண்ட தோழனுக்கு கண்ணீர் அஞ்சலி



**திரு. செல்வராஜா ஞானசேகரம் (ஞானம்)**

**வேம்படி வீதி உடுத்துறை - தமிழீழம்.**

**தோற்றம்: 31.01.1964**
**மறைவு : 30.01.1995**

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
இத்தாலிக்கிளையின் முன்னைநாள் செயலாளர்

காலத்தடம் பதித்த தாயகம் பிரிந்து கடல்தாண்டி - நீ
கனதூரம் கடல் கடந்து வந்தவனே!
மேலைத்தேய மாயையில் தாய்மண் மறந்த மனிதங்களில் - நீ
தாயகத்தில் காதல் கொண்டு நடைபோட்ட பயணங்கள் எத்தனை
சீதனக்காற்றில் பணம் சேர்ப்பதற்காய் திசையெங்கும் தெரிந்த முகங்களில் - நீ
விடுதலைக்காய் தன்மானத் தமிழ் இதயங்கள் தேடிய வீடுகளெத்தனை
விடுதலைக்காய் நிமிர்ந்த கைகளெல்லாம் முத்திரைக்காய் துவள்கையில் - நீ
நிமிர்ந்த நெடும்பனையென ஈழப்புகழ் நாட்ட உன் பணிகள் எத்தனை

விடுதலையில் ஒன்றுபட்ட எங்கள் ஞானமே.
இன்னமும் இன்னமும் இவ்வாறுதான் மரணங்கள்
தேசத்தை நேசித்தவர்கள்
பிஞ்சுகள் இளசுகள் அந்நிய தேசத்திலும் கூட... விடுதலையுணர்வும்
இந்த இளவயது மரணங்களும் பிரிக்க முடியாதென எங்கள் மண்ணை
நேசித்த தோழனே! நீயும் ஒரு நட்சத்திரமாய் வானெழுந்தாய்
சிங்களக் கொலை வெறியும் காந்தீய வல்லாதிக்கமுமா எம்மினத்தை அழித்தது?
இல்லையடா... நிறவெறி வேற்றுமையும் கண்ணாளன் உன்னை
கண்பார்க்க மறந்ததடா... கூடிவாழக் கூடுவேண்டும் என்று கூவித் திரிந்தாய்
மலரும் சுதந்திரக் கூட்டில் உந்தன் நினைவு
என்றும் மலராக மணம் வீசும் ☆

*கடந்த 30-1-95 அன்று அகாலமரணமடைந்த திரு.செல்வராஜா ஞானசேகரம் (ஞானம்) 1987ஆம் ஆண்டு முதல் எமது அமைப்பின் உருவாக்கலில் பெரும் பங்காற்றியவர். தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இத்தாலிக் கிளை சட்டபூர்வமாக 1991 இல் பதிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து அமைப்பின் செயலாளராகவும், கிளையின் அனைத்துப் பிரதேசங்களிலும் நிதிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றியவர். தனது பேச்சாலும், செயலாலும் மக்களைக் கவர்ந்தவர். அமைப்புக்கு ஏற்பட்ட நெருக்கடிகளிலும், எமது தேசத்தின் விடுதலை ஏன் என்று புரிந்து கொள்ளாது வாழும் மக்களின் பேச்சுக்களையும் அவமானங்களையும் தாங்கி, அவ்வாறானவர்கள் பங்களிப்பில் இருந்து தப்பித்துக் கொள்ளும் மனோபாவத்தை மாற்றி, அமைப்பின் அனைத்து செயற்திட்டங்களான திலீபன் கல்வி நிலையம், தமிழர் புனர் வாழ்வுக் கழகம்,செஞ்சோலை, கலை பண்பாட்டுக் கழகம், 2ஆம் லெப். மாலதி கலைப்பள்ளி, ஈழப்பிரியா வீடியோ போன்ற உப பிரிவுகளிலும் தனது சேவையை ஆற்றியவர். இவரின் இழப்பு எமது கிளைக்கும், அமைப்புக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். எனினும் இவரின் இழப்பை தாங்கும் மனப்பக்குவம் கொண்டு எமது செயற்பாட்டை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்கின்றோம்.*

*இவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, இத்துயரச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலை பேசி வாயிலாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும், எமது அமைப்பின் சர்வதேசக் கிளைகளின் அனுதாபச் செய்திகளுக்கும் நன்றியுணர்வுடன் கரங்களைப் பற்றிக் கொள்கின்றோம்.*

*நன்றி*

**தமிழர் ஒருங்கிணைப்புக்குழு,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,பலர்மோ, இத்தாலி.**

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

# உயிரனைய மொழிவாழ...

இருந்த இம்மாநாடு 1981 ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனால் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் அது பின்னர் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாய்ப் போயிருக்கிறது. உலகத் தமிழினத்தின் தலைமைப் பதவி தமக்கே உரியது என்று தமிழக முதல்வர் பதவியில் இருப்போர் தமக்குத் தாமே மகுடம் சூடிக்கொள்ளும் ஒரு களமாகவே தமிழகத்தில் நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாடுகள் அமைந்து விடுவது வாடிக்கை. இதற்கு 1968 இல் சென்னையில் நடைபெற்ற மாநாடோ, 1981 இல் மதுரையில் நடைபெற்ற மாநாடோ, இவ்வாண்டு (1995) தஞ்சாவூரில் நடைபெற்ற மாநாடோ விதிவிலக்கு அல்ல.

மொழி ஆராய்ச்சி என்பதையோ, தமிழ் மொழி பேசும் மக்கள் எதிர்நோக்கும் சமூக, அரசியல், பொருண்மியப் பிரச்சினைகள் என்பதையோ, முதன்மைப்படுத்தாமல் கவர்ச்சி காட்டுவதும், வெற்று ஆரவாரம் போடுவதும் தமிழகத்தில் தமிழாராய்ச்சி மாநாடு இடம்பெறும்போது நடக்கும் வழக்கமான அம்சங்கள். இந்த வகையில் எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடும் நடந்து முடிந்திருக்கிறது. ஜெயலலிதாவின் அரசியல் மாயைகளை உயர்த்துவதும், தனிப்பட்ட பிரசார பிம்பங்களைப் பேணுவதும் இம் மாநாட்டின் உயரிய நோக்கங்களாக இருந்துள்ளது என்பது வெளிப்படை. ஆனால் அரைக் கட்டணத்தில் தஞ்சாவூர் பயணமாகவும், பேராளர்களுக்கான ஒரு ரூபாய் உணவுப் பொட்டலத்தை சுவைத்துப் பார்க்கவும், பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்ட சுத்தமான குடிநீரைப் பருகிப் பார்க்கவும் இங்குள்ள சிலரும் ஆசைப்பட்டதுதான் வேடிக்கையானது.

## படிப்பினைகள்

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொழும்பு அரசு நடந்துகொண்ட விதம் தமிழ் மக்களைப் படுகொலைசெய்து, மிரட்டி வைப்பதன் மூலம் இலங்கையில் தமிழர்கள் நடத்தும் உரிமைப் போராட்டத்தை நசுக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டியது. இலங்கையில் தமிழர்கள் மீது பெரும்பான்மை சிங்கள மக்களும், அரசும் அச்சம் கொள்வதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று, பாக்குநீரிணைக்கு அப்பாலுள்ள சுமார் ஐந்து கோடித் தமிழர்களும், கடந்த காலப் படையெடுப்புக்களும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ராஜ ராஜ சோழன் காலம் தொட்டு நிகழ்ந்த படையெடுப்புக்களால் தென்னிலங்கைக்குள் தமது முன்னோர் முடங்க நேரிட்டமை குறித்த அச்சம் சிங்கள மக்களிடம் வேரோடி இருப்பதும், அவர்களது தமிழின எதிர்ப்பு உணர்வுகளுக்கு ஒரு வகையில் காரணம். அதாவது தமிழகத்தில் வாழும் தமிழர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையில் இருந்து வரும் பாரம்பரியமான நீண்ட நெடும்கால மொழி, பண்பாடு, இன ஒருமைப்பாடும் கொழும்புக்கு கலக்கத்தையே உண்டு பண்ணி வந்திருந்தது.

ஆனால் கொழும்பும் டில்லியும் கை குலுக்கிக் கொண்டாலும் கூட, சென்னையின் அரசியற் தலைமைகள் ஈழத்தமிழரின் போராட்ட உணர்வை மதிக்கத் தயாராக இல்லை என்பதையே எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு படிப்பினையாகத் தந்துள்ளது. இதற்கு உலகத் தமிழினத்தின் தலைமை ஈழத்தமிழர்களிடம் சென்றுவிடுமோ என்ற அச்சமே முக்கிய காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. பேராளர் அழைக்கப்படாதது முதல் ஆக்கங்கள் உட்பட அழையா விருந்தாளிகள் அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டது வரையிலான சம்பவங்கள் இதையே எடுத்துக் காட்டுகின்றன.


சுருங்கக் கூறின் அனைத்துலக அளவில் தமிழர்களின் ஒருமைப்பாட்டு உணர்வை வெளிப்படுத்தும் களமாகவும், நவீன அறிவியல் துறைகளை உள்வாங்குவதில் ஒத்த கருத்தைத் தோற்றுவிக்கும் தளமாகவும், விளங்கவேண்டிய தமிழாராய்ச்சி மாநாடு அதன் இலக்கைத் தவறவிட்டு விட்டது. "-யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புலவர் கணியன் பூங்குன்றனின் வாக்குப் பொய்த்துப்போய் "யாழ்ப்பாணத்தாருக்கு கதவடைப்பு" என்பதே நிச்சயமாகி விட்டது. "தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் ஆசை கிணற்றுத் தவளையின் குரலாக ஈனஸ்வரத்தில் ஒலிக்கிறது. இவைதான் தஞ்சாவூர் மாநாட்டின் சாதனைகள்.

மொழி வாழ வேண்டுமானால் அந்த மொழி பேசும் மக்கள் வாழ வேண்டும். உரிமைக்கான போராட்டத்தில் உயர்த்திக் குரல் கொடுக்கும் ஈழத் தமிழர்களை உதறித் தள்ளி விட்டு, மொழியாராய்ச்சி மாநாடு நடத்தப் புகுந்தால் அது வேடிக்கையானதாகத் தான் இருக்கும். இதனை நாளைய உலகம் நிருபிக்கும் என்பதை மட்டும் இப்போதைக்கு கூறிவைக்க முடியும். தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளில் உயிரிழந்தவர்களின் கல்லறையிலிருந்து ஒலிக்கும் செய்தி இதுதான். ■

## திருத்தம்

27. 01. 1995 ஆம் திகதியிடப்பட்ட களத்திலில் 4 ஆம் பக்கத்தில் இடம்பெற்ற, சிறீலங்கா ஜனாதிபதி திருப்தி தமிழ் குழுக்கள் பரிதவிப்பு என்ற தலைப்பு தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. இத்தவறுக்கு மனம் வருந்துவதோடு, குறிப்பிட்ட செய்திக்கான தலைப்பினை, பௌத்த மடாதிபதிகளுடன் சிறீலங்கா ஜனாதிபதி கலந்தாலோசனை எனத் திருத்தி வாசிக்கவும்.

# நேப்பாள மக்களின் தீர்ப்பு ;




உலக உலா

# இந்திய மேலாண்மைக்கொரு ஆப்பு

"1994 இல் நடைபெற்ற நேப்பாள தேர்தல் முடிவுகள் இதுவரை ஆட்சியில் இருந்த இந்தியச் சார்பான G.P. கொய்ராலாவை பிரதமராகக் கொண்டிருந்த நேப்பாளக் காங்கிரஸ் கட்சிக்கு பெருத்த அடியைக் கொடுத்துள்ளதோடு, இந்தியாவுக்கு தொண்டையில் குத்திய முள்ளாகியும் விட்டது"

இந்திய மேலாண்மையின் குறியீடாக அம்மேலாண்மையை அயல்நாடுகளில் நிலைநிறுத்துவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் 'சவுத் புளொக்' எனப்படும் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சு, இப்போது திகைத்து நிற்கிறது: டெல்லியின் உயர் ஆட்சிபீடமோ அதிர்ந்துபோயுள்ளது; இந்தியக் கொள்கை வகுப்பாளரிடையே ஒருவித குழப்பமும், பரபரப்பும் இப்போது தோன்றுகின்றது. இவற்றிக்கெல்லாம் காரணம் நேப்பாளத்தில் சென்ற ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் எதிர்பாராத முடிவுகள்தான். இந்திய எதிர்ப்புவாதத்தினை முன்வைத்த தீவிர இடதுசாரிப் போக்குள்ள கட்சிகள் சில, அங்கு தேர்தலில் வெற்றியீட்டியுள்ளன. அதே வேளை உலகமெங்கும் பல பொதுவுடமைக் கட்சிகள் தமக்குத் தாமே மூடுவிழா நடத்துகையில் -இன்னும் பல கொள்கைகளை மாற்றி, பெயர்களை மாற்றி, தப்பிப் பிழைத்து மறுபிறவி எடுக்க முயலுகையில், நேப்பாளத்திலோ அதுவும் மிகவும் பின்தங்கிய ஒரு சிறு நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது என்பதே ஒரு முதன்மைச் செய்தியாகின்றது. நேப்பாளக் கம்யூனிஸ்ட் (ஒன்றிணைக்கப்பட்ட மாக்சிய -லெனினியவாதிகள் (Communist Party of Nepalic Unified Marxist -Leninist) என்கின்ற கட்சி நேப்பாளத்தின் எல்லாக் கட்சிகளையும்விட கூடுதலான இடங்களைப் பெற்றதை அடுத்து, அரசை அமைக்கும் நிலையை அடைந்துள்ளது. ஆனால் CPN (UML) எனப்படும் இக்கட்சி ஏனைய பொதுவுடமைக் கட்சிகள்போல் வறட்டுச் சித்தாந்தக் கட்சியல்ல. நேப்பாளத்தின் தேசியத்தை -அதன் மாண்பை அந்நியர் தலையீடற்ற உயர் தேசியநிலைக்கு உயர்த்த வேண்டுமென்கின்ற உயிர்ப்புள்ள தேசியப்பண்பும் இக்கட்சியின் முதன்மை இலக்காகும் என்பதும், இவ்விடத்தில் சொல்லவேண்டிய செய்தியாகின்றது.

## நேப்பாளத் தேர்தல் முடிவு

எனவேதான் இப்போது உலகின் மிக ஏழ்மையான 25 நாடுகளில் ஒன்றான -18 மில்லியன் மக்களில் மிகப்பெரும்பான்மையோர் ஏழை விவசாயிகளாகவுள்ள மிகவும் பின்தங்கிய - ஆனால் இயற்கை வனப்புள்ள ஒரு சிறிய மலைநாடான நேப்பாளம் இப்போது உலகின் கவனத்தை ஈர்ப்பது மட்டுமன்றி, இந்தியாவுக்குத் தொண்டையில் குத்திய முள்ளாகியும்விட்டது. ஏனென்றால் கார்த்திகை 13 ஆம் நாள் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் எக்கட்சிக்கும் பெரும்பான்மைப் பலத்தை கொடுக்காத போதும், இதுவரை ஆட்சியிலிருந்த இந்தியச் சார்பான G. P. கொய்ராலாவை பிரதமராகக் கொண்டிருந்த நேப்பாளக் காங்கிரஸ் கட்சிக்கு பெருத்த அடியைக் கொடுத்துவிட்டது. ஏனென்றால் நேப்பாளத்தில் முதல் தடவையாக சனநாயக அடிப்படையில் நடைபெற்ற 1991 ஆம் ஆண்டின் முதல் பொதுத் தேர்தலில் 205 பேர்கொண்ட நாடாளுமன்றத்தில் 114 இடங்களைப் பெற்று, அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சியாக நேப்பாளக் காங்கிரஸ் கட்சி விளங்கியது. ஆனால் இம்முறை நடந்த தேர்தலில் 80 இடங்களை மட்டுமே இதனால் பெற முடிந்தது. அதுபோலவே 1991 ஆம் ஆண்டு தேர்தலில் 68 இடங்களை மட்டும் பெற்று பிரதான எதிர்க்கட்சியாகவிளங்கிய CPN (UML), இம்முறை 88 இடங்களைப் பெற்றுள்ளது. ஆயினும் தனித்துச் செயற்படக் கூடியளவுக்கு அறுதிப்பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது. இங்கு அரசு அமைக்க குறைந்தது 103 ஆசனங்கள் தேவை. இதைவிடச் சீனச் சார்புப்போக்குள்ள விவசாயிகள் கட்சியொன்றும் 4 இடங்களைப் பெற்றுள்ளது. அதுபோலவே மிதவாதக் கட்சியான நேப்பாளக் காங்கிரஸின்மீதான மக்கள் அதிருப்தியை பயன்படுத்தி, சென்ற தேர்தலில் 4 இடங்களை மட்டுமே பெற்ற R. P. P. எனப்படும் 'ராஜ்த்திரிய பிரஜாதந்திரக் கட்சி' இம்முறை 20 இடங்களைப் பெற்று, மூன்றாம் இடத்திற்கு வந்துவிட்டது. இக்கட்சி பிற்போக்குத் தன்மையுள்ளதும் -முன்னைய அரச பரம்பரை ஆட்சியின் ஆதரவாளர்களை -அதன் எச்சசொச்சங்களைக்கொண்ட கட்சி என்பதும் இங்கே குறிப்பிடவேண்டிய செய்தி.

தமிழீழத்திலிருந்து
பாலகுமாரன்

## இந்தியத் தாசர் கொய்ராலாவின் வீழ்ச்சி

1991 ஆம் ஆண்டு உறுதியான பெரும்பான்மையோடு ஆட்சியிலமர்ந்த நேப்பாளக் காங்கிரஸ் கட்சி, இடைவழியில் வீழ்ச்சியடைந்தமை ஏன் என்ற கேள்வி இங்கே எழுகின்றது. பிரதமராக இருந்த G. P. கொய்ராலா என்பவருக்கு எதிராக அவரது கட்சிக்குள்ளே கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இதற்குப் பிரதான காரணம், கொய்ராலாவின் இந்தியச் சார்பான போக்கும் -இந்திய முதலாளிய நலன்களைக் கவனித்து செயற்பட்ட தன்மையுமே ஆகும். இதனாலேயே கட்சியின் உயர் தலைவராகக் கருதப்பட்ட கணேச் மான்சிங்கும் கட்சித்தலைவரான பட்டாராய் என்பவரும் கொய்ராலாவை பதவி அகற்ற, முழு மூச்சாக முயன்றனர். இப்போக்கிற்கு - நேப்பாளம் இந்திய நலன்களுக்குத் தாரை வார்க்கப்படுவதாகக் கூறிவந்த இடது சாரிக்கட்சிகள் அனைத்துமே ஆதரவளித்தன. அதன் பலன் சென்ற ஆண்டு யூலை மாதம் நாடாளுமன்றில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது, நேப்பாளக் காங்கிரஸ் கட்சியின் 36 உறுப்பினர்கள் திடீரென கொய்ராலாவிற்கு எதிராக எதிர்கட்சிகளோடு சேர்ந்து வாக்களிக்கவே, எதிராக 86 வாக்குகளையும் ஆதரவாக 74 வாக்குகளையும்பெற்ற கொய்ராலா பதவி இழந்தார். அக்கட்டத்தில் அடுத்த பிரதான கட்சியான நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சி CPN (UML) தன்னை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டுமென மன்னர் பிரேந்திராவைக் கோரியது. ஆனால் இங்கேதான் சதியொன்று நடந்தது. மன்னர் பிரேந்திராவோ கொய்ராலாவின் ஆலோசனைப்படி நாடாளுமன்றைக் கலைத்து, புதிய தேர்தலுக்கு நவம்பரில் நாள் குறித்தது மட்டுமன்றி, கொய்ராலாவையே இடைக்கால பிரதமராகவும் நியமித்தார். இச்செயல் பெருத்த எதிர்ப்பலைகளை நேப்பாளத்தில் கிளப்பியது. அந்நிய தலையீட்டின் விளைவாகவே அடுத்த அரசை அமைக்க விடாமல் தடுத்ததாக CPN (U-ML) -நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சி கூறியது. அதேவேளை தீவிரப்போக்குள்ள சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சிகளோ அந்நியத் தலையீடு என்பதை மேலும் விளக்கி, இந்தியாவும் அமெரிக்காவுமே இவை என உரத்துக் கூறின. நேப்பாள அரசியலில் இந்தியா மட்டுமன்றி, உதவி வழங்கும் மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களும் தலையிடுவது தெரிந்தசெய்தி. எனவேதான் இந்தியாவுக்கு விசுவாசமான றோவின் (RAW) தலைமையோடு நெருங்கிய தொடர்புடைய அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிரிஜா பிரசாத் கொய்ராலா -இடதுசாரிகளை பதவிக்கு வராமல் தடுப்பதற்காக -மரபுகளை மீறி மன்னரால் இடைக்காலப் பிரதமராக்கப்பட்டார் என நம்பப்படுகின்றது. இச்செயல் இயல்பாகவே ஏற்கனவே இந்திய 'எதிர்ப்பு மனப்பான்மை'யைக் கொண்டிருந்த நேப்பாளிய மக்களை, தேர்தலில் இந்திய எதிர்ப்புவாதத்தினை முன்வைத்த கட்சிக்கு ஆதரவு அளிக்கத் தூண்டியது எனப்படுகின்றது. (ஏனென்றால் இடைக்கட்டத் தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்புக்கள் குறைவெனக் கருதித் தேர்தலை இடதுசாரிக் கட்சிகள் உண்மையில் அப்போது விரும்பவில்லை). எனவே இப்போது நேப்பாளப் பொதுவுடமைக் கட்சி CPN (UML)க்கு நேப்பாளக் காங்கிரசின் பட்டராய்ப் பிரிவினரான கொய்ராலா எதிர்ப்பாளர்களும் ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

"CPN (UML) எனப்படும் 'நேப்பாள கம்யூனிஸ்ட் கட்சி' ஏனைய பொதுவுடமைக் கட்சிகள்போல் வறட்டுச் சித்தாந்தக் கட்சியல்ல, நேபாளத்தின் தேசியத்தை - அதன் மாண்பை அந்நியர் தலையீடற்ற உயர் தேசிய நிலைக்கு உயர்த்த வேண்டுமென்கின்ற உயிர்ப்புள்ள தேசியப்பண்பும் இக்கட்சியின் முதன்மை இலக்காகும்"

## இந்தியத் தலையீடு

நேப்பாளத்தின் முன்னைய கதை -இந்தியாவிற்கு அருகில் இருந்ததால் தமிழீழம் பட்ட தொல்லைகளை எமக்கு ஞாபகப்படுத்தும். நான்கு பக்கத்தாலும் நிலத்தால் சூழப்பட்ட, நேப்பாளின் அமைவிடமே அதற்கு எதிரியாகிவிட்டது. ஏனென்றால் தனது வணிக, போக்குவரத்துக்கான தரை வழிப்பாதைக்கு நேப்பாளம் இந்தியாவை நம்பியிருக்கவேண்டியுள்ளது. எனவே தனது நலன்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் இத்தரை வழித் தொடர்பினை துண்டிக்க இந்தியாவால் முடிகின்றது. அதே வேளை நேப்பாளம் தனக்கு அருகிலுள்ள மற்ற பெருநாடான சீனாவோடு உறவுகளை ஏற்படுத்துவதையும் இந்தியா விரும்புவது கிடையாது. எனவே நேப்பாளத்திற்கு மிகஇக்கட்டான நிலை - சீனாவோடான உறவுகளை சீர்ப்படுத்த நேப்பாளம் முயன்றபோதெல்லாம் அது இந்தியாவால் துண்டிக்கப்பட்டே வந்துள்ளது. இத்தகைய தனது சுயநலப் போக்கினை மறைக்க நேப்பாளத்தில் சனநாயகம் மலரச்செய்யவே தான் உதவி செய்வதாகக் கூறி, நேப்பாள விடயத்தில் இந்தியா தலையிட்டது. ஆனால் இன்று இந்தியாவின் முகமூடி, அதனிடம் உதவி பெற்றோரின் இந்திய எதிர்ப்பாலே கிழிக்கப்படுகின்றது.

இந்தியாவின் தலையீடு என்பது இன்று -நேற்றல்ல, நேரு காலத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. இந்தியத்தலையீட்டின் விளைவாக அரங்கேறிய நாடகத்தின் ஒரு சில காட்சிகளைப் பார்த்தாலே உண்மை நிலையை உணரமுடியும். முதலாவது காட்சி நீண்டகாலமாக மன்னராட்சி முறையின்கீழ் இருந்த நேப்பாளத்தை செல்வாக்குமிக்க "ராணாக்கள்" எனப்படும் வம்சத்தினர் மன்னரை கைப்பொம்மையாக்கி சர்வாதிகார ஆட்சிசெய்தபோது விரிகின்றது. அப்போது நேரு 1950 ஆம் ஆண்டுகளில் இவ்வாட்சிக்கு எதிராக நேப்பாளிய காங்கிரஸ் நேப்பாளக் கம்யூனிஸ் கட்சியினர் என இருதரப்பும் மேற்கொண்ட ஆயுதப் போராட்டத்திற்கு உதவினார். இதன்மூலம் நெருக்கடிக்குள்ளான நேப்பாள ஆட்சியினர் நேரு காலடியில் வந்து விழுந்தபோது உதவிகளை நிறுத்தி, தான் உதவியோரை அவர்களை எதிர்த்தோரோடு 'சமரசம்'காண நேரு பணித்தார். நேப்பாளக் காங்கிரஸ் இதற்கும் பணிகின்றது. ஆனால் இந்தியாவின் தீவிர பொதுவுடமைவாதக் கட்சிகளின் தோற்றத்தால் 1949 ஆம் ஆண்டு கல்கத்தாவில் தோற்றம்பெற்ற நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சி இதனை ஏற்கவில்லை. அடுத்தகாட்சி மன்னர் மகேந்திரா பதவிக்கு வந்து மீண்டும் மன்னராட்சியைத் தொடர முயன்றபோது விரிகின்றது. மன்னரின் சனநாயக விரோதப் போக்கிற்கு எதிராக மீண்டும் 1959 ஆம் ஆண்டளவில் இரு கட்சிகளும் போராட்டமொன்றை ஆரம்பிக்கின்றன. ஆனால் சீனச் சார்புள்ள கம்யூனிஸ்ட் கட்சி இப்போராட்டத்தில் செல்வாக்குப் பெறுவதை அவதானித்த நேரு, மன்னர் மகேந்திரா பக்கமே நின்று அவரைத் தன்பக்கம் இழுத்தார்.

"நேப்பாள அரசியலின் எதிர்காலம் என்னவாகவிருந்தாலும், இந்திய மேலாண்மைக்கு பலத்த அடியினை நேப்பாள மக்கள் கொடுத்ததின் மூலம், தமது தேசிய கௌரவத்தை உலகத்தின் முன்னே உயர்த்தி விட்டனர்"

பின்னர் மகேந்திராவின் மகன் பிரேந்திரா, 1972 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்தபின், இந்திய மேலாண்மைக்கு மாற்றாக சீனாவோடு தொடர்புகளைப் பேண முற்படவே, மீண்டும் இந்தியா தலையிடுகின்றது. மன்னரின் சனநாயக விரோதப் போக்கினை எதிர்த்த நேப்பாளக் காங்கிரசும் நேப்பாளக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதனின்றும் முளைவிட்ட பத்துக்கு மேற்பட்ட தீவிர இடதுசாரிக் கட்சிகளும் சனநாயக மீட்பு இயக்கமொன்றை பெருமளவில் கட்டிவளர்த்தபோது இந்தியா உதவியது. நேப்பாளக் காங்கிரசின் பல தலைவர்கள் றோவின் அனுசரணையுடன் இந்தியாவில் பலகாலம் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டனர். அத்தோடு இன்னொரு வழியையும் அப்போதிருந்த பிரதமர் ராஜீவ் காந்தி பயன்படுத்தினார். நேப்பாளத்தோடான தனது தரைவழிப்பாதையை மூடிவிட்டார். எனவே வேறு வழியின்றி 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற சனநாயக மீட்புப் போராட்டத்திற்கு பணிந்த பிரேந்திரா சனநாயக ஆட்சிமுறையை ஏற்றார். 1990 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஒன்றுபட்டு நின்று வென்ற, இருகட்சிகளும் புதிய அரசியல் யாப்பினை உருவாக்கினர். மன்னர் பிரேந்திரா மீண்டும் தனக்குக் காலம்வரும் என எண்ணியவராக வெறும் சம்பிரதாயத் தலைவரானார். இதன்படி முதல் சனநாயகத் தேர்தல் 1991 ஆம் ஆண்டு நடைபெற்றது.

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...

# எமது போராட்டத்தை புரிந்துகொள்ள சிங்களத் தலைமையால் முடியவில்லை

**வே.பாலகுமாரன்**

"மாவீரர் நாட்கள் எங்களை நாங்களே புதுப்பிக்கவேண்டிய நாட்கள்; அடுத்த நடவடிக்கையை எதிர்நோக்கவேண்டிய சக்தியைப் பெறுவதற்கான நாட்கள் ஆகும்.

இன்று தமிழனின் போர்த்திறன், போர் வல்லமை புதிய பரிமாணம் பெறுகின்றது. இந்தப் பெறுமதிமிக்க போராட்டத்தை சிங்களத் தலைமைத்துவத்தால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது."

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. ப. கனகலிங்கம் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தீவகக் கூட்டுறவாளர்களின் மாவீரர் நாள் விழா இடம்பெற்றது. இதில் சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "எமது போராட்டம் நாளுக்கு நாள் மலைபோல் உயர்ந்து செல்கின்றது; இந்தப் போராட்டத்தை நசுக்கவும் முடியாது, இதை சமாளிக்கவும் முடியாது என்ன செய்வதென்று தெரியாமல் இன்று சிங்களத் தலைமை திணறுகின்றது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிறேன் என்றுகூறி வருபவர்களெல்லாம், தீர்க்க முடியாமல் சிதறிப்போகிறார்கள்; அவர்களால் முடியாது; இந்தப் பெறுமதிமிக்க போராட்டத்தின் தன்மையை அவர்களால் புரிந்துகொள்ளவும் முடியாது. எங்களது பிரச்சினையை எங்களால்தான் தீர்க்கமுடியும் மற்றவர்களால் அல்ல" என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரையாற்றும்போது, "தமிழனின் வரலாறு இன்று உலகத்தின் கூரையில் நின்று பேசப்படுகின்றது; இது, இந்த மாவீரர் செய்த தியாகத்தினால் ஆகும். முன்பு இனவாதம் பேசியவர்களே சிங்கள அரசியலில் தலைவராக வர முடிந்தது. இன்று சமாதானமாக இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறுபவர்களைத்தான் சிங்கள மக்கள் விரும்புகிறார்கள். இந்நிலைக்கு வரலாற்றை மாற்றியமைத்தது எமது போராட்ட வலுவாகும்" என்றார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக், "போராட்டத்தை அர்த்தமுள்ளதாக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு; எமது தலைவர் போராளிகளுக்கு அச்சத்தை அகற்றி, துணிவை ஊட்டியுள்ளார். இந்த வழிகாட்டலில் இன்று உலகம் வியக்கும் அளவிற்கு எமது போராளிகளின் தியாகம் அமைந்துள்ளது" என்றார். இவ்விழாவில் தீவக மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி நாமகள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து பலர் மாண்புரை நிகழ்த்தினர். இதைத் தொடர்ந்து, பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. ■

# தமிழர் தாயகக் கோட்பாட்டை வரலாற்று ரீதியாக நிராகரிக்கும் முயற்சி

தமிழர் தாயகக் கோட்பாட்டை வரலாற்று ரீதியாக நிராகரித்து அதன் மூலம் தமிழர்களைத் தனியான 'மக்கள் இனம்' என உறுதிசெய்துவரும் சர்வதேச அறிஞர்களிடையே குழப்பத்தைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் பௌத்த சிங்கள அறிவுஜீவிகளால் வேகப்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறீலங்காவில் பிரிவினைவாதக் கருத்தியல் -வரலாற்று ரீதியான மதிப்பீடு எனும் நூலை "தமிழர்களின் பாரம்பரிய 'சொந்தப் பூமி" எனும் சுருக்கக் குறிப்புடன் கே. எம். டி. சில்வா என்னும் வரலாற்றுப் பேராசிரியர் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். *(The Traditional Home Land of Tamils -Separatist Ideology in Sri Lanka -K. M. De Silva).* இதில் தமிழர் தாயகம் என்பது, கட்டுக்கோப்புக்களின் அடிப்படையிலானது *(The Myth of Traditional Home Lands)* எனக் காட்ட முற்படுகின்றனர்.

வரலாற்றுத் திரிபுவாதங்களை அறிவுஜீவிகளைக் கொண்டு, உறுதிசெய்வதன் மூலம், தமிழர் தாயகக் கோட்பாட்டை வரலாற்று ரீதியாக நிராகரிக்கச் செய்யலாம் என்பதே இம்முயற்சிகளின் உள்நோக்கு. சிங்களவரான கே. எம். டி. சில்வா இலங்கைப் பல்கலைக்கழகங்களினதும் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தவர் என்பதும் 'இலங்கை வரலாறு' எனும் நூலின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

# போராட்டத்தின் மூலம் புலிகள் தமது அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்

□ பொ.ஐ.மு செயலாளர் தெரிவிப்பு

"போராட்டத்தின் மூலம் விடுதலைப் புலிகள் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்; அவர்கள் மேலும் அதிகாரத்தைப் பெற முயல்வது இயல்பு. சமஸ்டி முறை மூலமாவது இதற்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து."

இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜெயரட்ணா தெரிவித்துள்ளார். செய்தித்தாள் ஒன்றிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எந்த வகையிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவை. உலக நடப்புகளையும் கடந்த காலத்தையும் நாம் பாடமாகக் கொண்டு தீர்வு காணவேண்டும்.

சமாதானம் இன்று அனைவருக்கும் தேவையாக உள்ளது. அபிவிருத்தி காண்பதென்றால் போர் நிற்கவேண்டும். சனாதிபதி இவ்விடயத்தில் நேர்மையுடன் செயற்படுகின்றார்" என அச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ■

# வெளிநாட்டுத் தமிழர்களை மதிப்பிழக்க வைக்க சிறீலங்கா திட்டமிட்ட சதி

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்கள் தாயகத்தின் மேலும் தமிழ்த் தேசியத்தின் மீதும் கொண்டுள்ள பற்றுக்கோட்டால் தமிழ்த் தேசியத் தலைவராக பிரபாகரனை வெளிப்படுத்தி செயற்பட்டுவருவதே 'தமிழர் பிரச்சினையின்' சர்வதேச மயப்படுத்தலுக்கு காரணமாக உள்ளது எனச் சிறீலங்கா கருதுகிறது. இதனால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அனைத்துலக மட்டத்தில் உள்ள நன்மதிப்பைக் குறைக்கக்கூடிய முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றது. இட்டுக்கட்டிய செய்திகளுக்கு உண்மைத் தோற்றம் கொடுப்பதும், சுயநலத் தேவைகளுக்காக தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் இதழ்களுக்கு அனைத்துலக மதிப்பினைத் தேடிக்கொடுப்பதும் இச்சதியின் இரு அங்கங்களாக உள்ளன.

தமிழர்கள் இடையே செல்வாக்கு இன்றி, அஞ்சலில் வலுக்கட்டாயமாக ஊர்வலம் அனுப்பிவைக்கப்படும் ஒரு சஞ்சிகை ஒன்றினை, தமிழர்களின் வரலாற்று ஆய்வினை மேற்கொள்ளும் சர்வதேச ஆய்வாளர்களுக்கான வரலாற்று மூலமாகக் குறிப்பிட்டிருப்பது தமிழர்களின் பிரச்சினை பற்றிய குழப்பத்தை அறிவுஜீவிகள் மத்தியில் தோற்றுவிக்கக்கூடிய அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுயநலத் தேவைகளுக்காக வெளிவரும் சஞ்சிகைகள் சிலவற்றைத் தமிழர்கள் ஏறெடுத்துப் பார்க்காது விட்டுவிடுகின்றனர். ஆனால் இச்சஞ்சிகைகளின் உண்மைக்கு மாறான மதிப்பீடுகளை தமிழர் அபிப்பிராயமாகக் காட்டி சிறீலங்கா தனது சதித் திட்டங்களை சாதித்துக்கொள்கின்றது. ■

# மோதல் தவிர்ப்பு உடன்பாடு குறித்து ஐலண்ட், சண்டே லீடர் கண்டனம்

அமுலுக்கு வந்துள்ள மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையைக் கொழும்பிலிருந்து வெளியான பல வாரச்செய்தித்தாள்களின் ஆசிரிய தலையங்கங்கள் வரவேற்றுள்ள அதேசமயம், சண்டே ஐலண்ட் மற்றும் சண்டேலீடர் செய்தித்தாள்கள் இது தொடர்பாக கண்டனத்துடன் கூடிய எச்சரிக்கை தெரிவித்து ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளன.

"இலங்கையில் ஒற்றையாட்சிமுறை பேரம் பேசப்படவேண்டிய ஒன்றல்ல என்பதை, அரசு நினைவிற் கொள்ளவேண்டும்" என்று சண்டே ஐலண்ட் தனது ஆசிரிய தலையங்கத்தில் அரசை எச்சரித்துள்ளது. வட பகுதிக்கு மட்டும் பெருந்தொகை புனர்வாழ்வு நிதி ஒதுக்கப்பட்டமைக்கு சண்டேலீடர் செய்தித்தாள் விசனம் தெரிவித்து எழுதியுள்ளது. ■

# புலிகளின் குரலுக்கு ஆயிரம் வாழ்த்துக்கள்

புதிய புதிய சரித்திரம் எழுதிடும்
புலிகளின் குரலாகியே எங்களின்
இதயமேறிய பிள்ளையே நீ பிறந்(து)
இன்றுடன் நான்காண்டுகள் ஆன தா?
அதிசயமிது, ஆம் சில ஆண்டினில்
அற்புதங்களைச் செய்தனை இனிவரும்
உதயகாலங்கள் உந்தனுக் காகுக.
உலகமெங்கணும் உன்குரல் ஓங்குக.

காலைவந்து கதவினைத் தட்டியெம்
காதிலே... வணக் கம்மெனச் சொல்லுவாய்.
மாலையில்வரு வாய்வினை பாடுவாய்
மலருமெம் நினை வோடுற வாடுவாய்
ஈழமெங்களின் இன்னுயி ரென்றுமே
இரவில் வந்தெமக் கானவை தந்துமே
வாழும் புலிகளின் குரலுக்கெம் ஆயிரம்
வாழ்த்துக்கள் இனிதாகவே வாழிய

களத்திலாடிடும் வேங்கையை, கனவுடன்
கல்லறைகளில் வாழும்மா வீரரை
பலத்துடன் வழி நடத்துமெம் காவியப்
பரணிபாடிடக் கூடிய தலைவனை
நிலத்தில் வாழிய என்று நீ வாழ்த்துவாய்
நின்னை வாழ்த்தியே நாம்கவி பாடுவோம்.
உளத்தினாலுனை வாழ்த்துவோம். வாழிய!
உரிமை தேடியுன் கரங்கள் உயருக.

**- புதுவை இரத்தினதுரை**

('புலிகளின் குரல்' வானொலிக்கு 21.11.1994 உடன் அகவை (வயது) நான்காகும். நான்காம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட கவிதையே இதுவாகும்.)


**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**W.T.C.C**
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.